விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 28 ஞாயிற்றுக்கிழமை (11.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 174


# தேசிய அரசாங்கத்தை நீடிப்பதா? முறிப்பதா?

## இரு கட்சிகளிடையே முக்கிய பேச்சு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான தேசிய அரசாங்கம் தொடர்பான ஒப்பந்தத்தை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பான பேச்சுவார்த்தை வெகு விரைவில் நடைபெறவுள்ளதுடன் அது தொடர்பில் உறுதியான முடிவும் அறிவிக்கப்படவுள்ளது. (04-ம் பக்கம்...)

## பனை மரத்துடன் வாகனம் விபத்து

### ஒருவர் பலி

(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கப் ரக வாகனம் பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானதுடன் மூவர் 04

## ஆணொருவரின் சடலம் மீட்பு!

(கரணவாய்)

கரணவாய் மண்டான் காட்டுப் பகுதியில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் 04

## 2 கோடி மதிப்புள்ள ஹெரோயின் மீட்பு!

(கொழும்பு)

மேல் மாகாண ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் இரண்டு கோடி ரூபாயிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு ஆமர் வீதி மற்றும் கெஸ்பாவ ஆகிய பகுதிக 15

### வற்றாப்பளை பொங்கல்

## பிரதான வீதித்தடை இன்று நீக்கப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. 15

### மகசின் சிறை, ரத்துபஸ்வல

## துப்பாக்கி சூடு; காரணம் கோத்தா!

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கி சூடு. ரத்துபஸ்வலவில் இடம்பெற்ற துப்பாக்கி சூடு ஆகிய இரு சம்பவங்களும் பாது 04

## பிச்சை எடுக்கும் சிறார்கள் கைதாவர்

(கொழும்பு)

சிறுவர்கள் பிச்சை எடுக்கும் நிலைமை அதிகரித்து வரும் நிலைமையை கருத்தில் கொண்டு இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் முகமாக அவர்களை கைது 04

## தமிழ், முஸ்லிம் மக்களை அடிமைகளாக்க முயற்சி!

### அரசு கபடத்தனம் என கஜே. சாடல்



(அம்பாறை)

இலங்கை அரசாங்கம் பிரித்தாளும் தந்திரத்தினை கச்சிதமாக மேற்கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களை பிரிப்பதன் மூலம் இரண்டு இனங்களையும் அடிமைகளாக வைத்திருக்கும் செயற்பாட்டை கபடத்தனமாக மேற்கொண்டு வருவதாக தெரிவித்து 15

## கோத்தாவிடம் விசாரணை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இருந்த பழைய இரும்புகள் இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் முன்னாள் 04

### யாழ். தொண்டைமானாறு கடற்பரப்பில்

## ரூ. ஒரு கோடி பெறுமதியான 56.5 கிலோ கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு கடற்பரப்பில் வைத்து சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவினை காங்கேசன்துறை கடற்படையினர் கைப்பற்றியுள்ளதுடன் இது தொடர்பில் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 15

### காணாமல் ஆக்கப்பட்டோர்

## ஆறு நாடுகளில் நாளை கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை பெற்றுக் கொள்ளும் 04

## காதலனைத் தேடி வந்த சீனப் பெண்!

(நாவலப்பிட்டி)

இலங்கையை சேர்ந்த இளைஞனை நான்கு வருடங்களாக காதலித்த சீன யுவதி ஒருவர் இளைஞனை தேடி இலங்கைக்கு வந்துள்ள சம்பவம் நாவலப்பிட்டி பிரதேசத்தில் நடந்துள்ளது. 04

### கிழக்கின் மூன்று மாவட்டங்களில்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உதவி வழங்கல்!



(கொழும்பு)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு உதவி வழங்குவது குறித்து கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் இடையில் நேற்று கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள 02

### கற்பித்தல் திருப்தியற்றிருப்பின்

## ஆசிரியர் நியமனங்கள் மீள் பரிசீலனையாகும்!



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் புதிதாக நியமனம் செய்யப்படுகின்ற ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டால் அவர்களது நியமனம் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரி 15

## தடை விதிக்க அதிகாரமில்லை!

(கொழும்பு)

விளையாட்டு வீரர்கள் தங்கள் பதக்கங்களை விற்பனை செய்வதற்கு தடை விதிக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை என சுசந்திகா ஜெயசிங்க தெரிவித்து 15

### பரிதவித்த உறவுகள்

## ஜனாதிபதியுடன் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்கு நாளைய தினம் வருகைதரவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது. 04

## அமைதியை சீர்குலைக்கும் வெளிநாட்டு அமைப்புகள்

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் கருத்து

(கண்டி)

சில வெளிநாட்டு அமைப்புக்களுக்கு இலங்கையில் நிலவும் அமைதியை சீர்குலைக்கும் தேவை உள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் 15

## தலைக்கவசம்; தடை நீக்கம்

(கொழும்பு)

முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசத்தை பயன்படுத்துவதை தடைசெய்ய அரசாங்கம் முன்னெடுத்த தீர்மானத்தை இடை நிறுத்த முடிவெடுத்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் பல போக்குவரத்து 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள A/C க்கள் (LG, Singer) மற்றும் (Pickup) வாகன டயர்கள் விற்பனைக்கு உண்டு.

**077 654 4428**
**077 397 3166** (9470)


## காணாமல் ஆக்க...

கிழக்கு முதலமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான க்ளெயார் மேட்ரவுட் மற்றும் உப தலைவரான இர்பான் சுலெஜ்மானி ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உதவியளிக்கும் முகமாக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் அவர்களுக்கான அலுவலகம் ஒன்றை ஸ்தாபிபபதற்கு கிழக்கு மாகாணத்துக்கு உதவியளிக்கவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கிழக்கு முதமைச்சர் நசீர் அஹமட்டிடம் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த அலுவலகங்களினூடாக இலவச சட்ட ஆலோசனைகளையும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு வழங்குவதற்கு தாம் தயாராகவுள்ளதாகவும் அவர்கள்குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுக்குசட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை உறுதிப்படுத்தும் வகையிலான உறுதிப் பத்திரங்களை வழங்கவும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் கிழக்கு முதலமைச்சர் ஆகியோருக்கிடையிலான பேச்சில் இணக்கம் காணப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 500 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாயிரத்து 400 பேரும் அம்பாறை மாவட்டத்தில இரண்டாயிரம் பேரும் காணாமல் போயுள்ளதாக இதன்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக இந்தப் பணிகள் திருகோண மலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள துடன் இதனை துரி தப்படுத்துமாறும் கிழக்கு முதல்வர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக 50 ஆயிரம் ரூபாயை வழங்குவதற்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் முன்வந்த போது, அந்த தொகையை அதிகரித்து வழ ங்குமாறும் கிழக்கு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மைக் காலமாக போராட்டங்களை முன்னெடுக்கும நிலைமைக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தள்ளப்பட்டுள்ளமை வேதனைக்குரியது என்பதுடன் அரசாங்கம் அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் நியாயமான தீர்வொன்றை வழங்க முன்வர வேண்டும் என்று கிழக்கு முதலமைச்சர் நசீர் அஹமட் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


தென்மராட்சி இலக்கிய அணி நடாத்தும்

## தமிழ் அமுதம்-09

இடம்: தமிழ்க் கோட்டம்
(கம்பன் கல்லூரி வளாகம்)
சங்கத்தானை, சாவகச்சேரி.
காலம்: 11.06.2017 (இன்று)ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி

### நிகழ்வின் நிரல்

மங்கல விளக்கேற்றல்
**திரு.திருமதி ந.சிவபாலன் தம்பதியினர்**
(தலைவர், வணிகர் மன்றம் சாவகச்சேரி)

கடவுள் வாழ்த்து
**திருமதி புனிதா ஈழநேசன் அவர்கள்**

தலைமையுரை
**திரு.புலவர் மு.பாலசுப்பிரமணியம் அவர்கள்**
(ஓய்வுநிலை அதிபர்–மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோயா)

எழிலுரை
"வாழிய செந்தமிழ் வாழ்க நற்தமிழர்"
ஆற்றுபவர்: **அதி வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள்**

### "விவாத அரங்கு"

நடுவர்: **ந.விஜயசுந்தரம்**
(பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை)
விடயம்: **மகாபாரதம் இன்றளவும் ஏற்றுமுற்று நிலைக்க பெரிதும் காரணமாய் அமைவது**

கதைச்சிறப்பே! :திரு.இ.சர்வேஸ்வரா
பாத்திரப்படைப்பே! :திரு.ப.விக்கினேஸ்வரன்
அறமேன்மையே! :திரு.அ.வாசுதேவா
கவியமைப்பே! :திரு.த.நாகேஸ்வரன்

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொள்வாம்"
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (ஐ)



## காணி விற்பனைக்கு

**சிறிய முதலீடு - நிரந்தர வருமானம்**

A9 வீதி, நுணாவில் சந்தி அருகே மட்டுவில் வீதியில் 300M தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட, தென்னை, மா, பலா, தேசி போன்ற மரங்கள் வைத்து பலன்பெற உகந்த இடம். (9408)

தொடர்பு
**077 873 0129**



## வேலைவாய்ப்பு

**நீங்கள் O/L எழுதி முடித்தவரா?**

எமது Dynamic நிறுவனத்தில் வேலைவாய்ப்புக்கள் உள்ளன. தங்குமிட வசதிகள் உண்டு. அனுபவம் அவசியமற்றது.

- **Promoting Supervisor**
- **Team Leader**
- **Online Products Service**

(25 பேர் மட்டும் தேவை)

இவ்வாறான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (9411)

தொடர்புகளுக்கு:
**0771363797, 0766781042, 0215679002**



## காணி விற்பனைக்கு

யாழ்.நகரை அண்மித்த
கந்தர்மடத்தில் 01 பரப்பு
காணி விற்பனைக்கு. (9412)

தொடர்பு:-
**077 710 6112**



## மீண்டும் சங்கானையில்!

- **Dr. Mrs. S. நாகேந்திரா அவர்கள்**
  ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம்
  திங்கள், புதன், வெள்ளி பி.பகல் 3 மணி
- **Dr. S. கருணாகரன் MBBS**
  தினம் காலை மாலை (OPD) வெளிநோயாளர் சேவை
- **யாழ்.போதனா வைத்தியசாலை**
  **வைத்திய நிபுணர்கள் சேவை.**
- **ஆசிரி, டேடன்ஸ், சீமெட் ஆய்வுகூட சேவைகள்**
- **முதியவர்களுக்கான தங்குமிட வசதிகள்**

**சம்பந்தர்**
**மொடேர்ன் வைத்திய நிலையம்**

**சங்கானை மக்கள் வங்கி முன் வீதி,**
**(நாகநாதன் வைத்தியசாலை அருகே) சங்கானை.**
**தொ.பேசி இல.0778730129**
(9408)



**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## துயர் பகிர்கின்றோம்

மலர்வு
08 - 11 - 1970

உதிர்வு
10 - 06 - 2017



அமரர் **யோகரத்தினம் தயேந்திரன் (பபா)**
(கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின்
காவு வண்டி சாரதி)

பெருந்தகையே...!!!
உங்கள் பூதவுடலுக்கு...
மானசீகமாய் மலர் தூவி
கண்ணீரை காணிக்கையாக்கி
எம் இதயமதில்
விதைக்கின்றோம்!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நோயாளர் நலன்புரிச் சங்கம்.**
**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை**

## துயர் பகிர்கின்றோம்

மலர்வு
08 - 11 - 1970

உதிர்வு
10 - 06 - 2017



அமரர் **யோகரத்தினம் தயேந்திரன் (பபா)** (சி-8774)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானத்தின் கௌரவ பொருளாளர் அமரர் **யோகரத்தினம் தயேந்திரன்** (பபா–கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் காவு வண்டி சாரதி அவர்கள் 10.06.2017 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருடன் இணைந்து அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்

**அவரது துயரில் பங்குகொள்ளும்**
**ஆலய நிர்வாக சபையினரும் குருமார்களும் பணியாளர்களும் திருவிழா உபயகாரர்களும் மற்றும் பொதுச் சபை உறுப்பினர்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பாடசாலைகளுக்கு 219 ஆசிரியர்கள் நியமனம்



(படங்கள்:- உ.சாளின்)

வடமாகாண பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களை உள்ளீர்ப்பு செய்வதற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். இந்து கல்லூரியில் நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நியமனங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது 219 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. பௌதீகவியல் பாடத்திற்கு 16 பட்டதாரிகளும், இரசாயனவியல் பாடத்திற்கு 11 பட்டதார்ரிகளும், உயிரியல் ப்பாடத்திற்கு 13 பட்டதாரிகளும், இணைந்த கணித பாடத்திற்கு 10 பட்டதாரிகளும், உயிரியல் தொழில்நுட்பப் பாடத்திற்கு 15 பட்டதாரிகளுக்கும், பொறியியல் தொழில்நுட்பப் பாடத்திற்கு 12 பட்டதாரிகளுக்கும், தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞான பாடத்திற்கு 2 பட்டதாரிகளுக்கும், விஞ்ஞான பாடத்திற்கு 95 பட்டதாரிகளுக்கும், கணித பாடத்திற்கு 45 பட்டதாரிகளுக்குமாக மொத்தமாக 219 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்ப ட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதம செயலர், அமைச்சின் செயலாளர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# ஒரு சமூகத்தின் இழப்பில் மற்றொரு சமூகம் சந்தோசமடைய முடியாது

## அமைச்சர் றிசாத் சுட்டிக்காட்டு

.இலங்கை மண்ணில் நிம்மதியான வாழ்க்கை மலர வேண்டுமானால் தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்களவர்களும் இணைந்து வாழ வேண்டும் என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 378 ஆவது சதொச விற்பனை நிலையம் நேற்று சனிக்கிழமை பட்டியிருப்பில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ஒரு சமூகத்தின் இழப்பில் மற்றொரு சமூகம் சந்தோசமடைய முடியாது.

அண்மைய வெள்ள நிலைமையின் போது சதொச நிறுவனமே உடனடியாக பல கோடி ரூபா பெறுமதியான உதவிகளைச் செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் எம்.எஸ்.அமீர்அலி, பட்டிருப்பு தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# மகிந்த அரசால் இராணுவத்திற்கு 750கோடி நட்டம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் இராணுவத்திற்கு 750 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. கொழும்பு காலி முகத்திடலுக்கு அருகாமையில் காணப்பட்ட இராணுவ தலைமையக இடத்தை, ஷெங்ரீலா ஹோட்டல் நிர்மாணிப்பதற்கு மகிந்த அரசு வழங்கியிருந்தது. இந்த தீர்மானம் காரணமாக 750 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தளபதியின் காரியாலயம், பணிப்பாளர்களின் காரியாலயங்கள் மற்றும் ஏனைய காரியாலங்கள் தற்பொழுது வாடகை அடிப்படையில் இயங்கி வருகின்றன. இதனால் இராணுவத்திற்கு மாதாந்தம் 10 கோடி ரூபா காரியாலய வாடகை செலுத்த நேரிட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் இதனால் பாரியளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# உள்ளூராட்சி தேர்தல் பிற்போடல் குறித்து விசேட கலந்துரையாடல்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டு வருகின்றமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (இ-7)

# மதில் இடிந்து வீழ்ந்து 4 வயதுச் சிறுமி பலி!

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் நான்கு வயதுச் சிறுமி ஒருவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த அனர்த்தத்தை எதிர்கொண்ட சிறுமி பலத்த காயங்களுடன் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்காமல் மனோவால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது

## பொதுபல சேனாவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறுகிறார்

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொள்ள அமைச்சர் மனோ கணேசன் மறுக்கின்றார். எனவே அவரால் இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாதென பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே தெரிவித்தார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள மாராஜித விஹாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தாம் இருவரும் பண்டாரநாயக்க கொள்கைகளுக்கு அமைவாகவே செயற்படுவோம் என்று பல சந்தர்ப்பங்களிலும் கூறியுள்ளார்கள். அதன் பிரகாரம் நடந்து கொண்டும் உள்ளனர்.

பண்டாரநாயக்க எதிர்க்கட்சி தலைராக இருந்த காலத்தில் இந்த நாட்டை சிங்கள பௌத்தநாடு என ஏற்றுக் கொள்கிறீரகளா? இல்லையா? என அரசாங்கத் தரப்பிடத்தில் கேள்வி எழுப்பியிருந்



தார். அதனை அவரின் மகளான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மறந்துவிட்டார்.

அவ்வாறிருக்கின்ற போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பண்டாரநாயக்க கொள்கைகளை மறக்காமல் செயற்படுவதும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் பண்டாரநாயக்க கொள்கையை பின்பற்றுவதையிட்டும் பாராட்டுகின்றோம்.

அதன் பிரகாரம் அவர்கள் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை பல இடங்களிலும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதையும் நாங்கள் அறிவோம்.

ஆனால் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்கின்ற வார்த்தையே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஒவ்வாமையாக உள்ளது. அவர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்துகொண்டு நல்லிணக்கம் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றார்.

அவ்வாறிருக்கின்ற போது அமைச்சர் மனோ கணேசன் இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். அதனால் அவரால் ஒருபோதும் இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கிச் சூடு...

காப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாயவின் உத்தரவிற்கு அமையவே இடம்பெற்றதாக இடதுசாரி நிலையம் குற்றம் சாட்டியுள்ளது.

மக்கள் சக்தி அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிட்ட இடதுசாரி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா, குற்றமிழைத்தவர்களை விட குற்றங்களுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

அங்கு தொடர்ந்து பேசிய சமீர பெரேரா "வசீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்டதாக இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே உறுதியானது. அதற்கு முன்னர் அது ஒரு விபத்து என்றே கூறப்பட்டது. இது தொடர்பில் விசாரணை செய்ய அப்போதைய மகிந்த ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். மகசின் சிறைச்சாலையில் பெயர குறிப்பிட்டு 26 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அது தொடர்பில் வழக்கு விசாரிக்கப்பட்டதா? ஆணைக்குழுவின் அறிக்கை எங்கே? கோத்தபாய ராஜபக்ஷவின் தேவைப்பாட்டிற்கு அமையவே படுகொலை செய்யப்பட்டார்கள். அது தொடர்பில் யாரும் பேசவில்லை. ஒரு குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செய்த குற்றங்களை மூடிமறைக்க முயன்றனர்.

எனினும் அது தொடர்பிலேயே முதலில் விசாரணை செய்ய வேண்டும். எனினும் அரசாங்கத்தின் வேகம் போதவில்லை. அது தொடர்பில் எமக்கு பிரச்சினை இருக்கின்றது. அதுபோல் கடந்த காலங்களில் இடம்பெற்ற கடத்தல்களுக்கு நான் மட்டும் பொறுப்பல்ல எனவும், முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்டவர்களையும் விசாரிக்க வேண்டுமெனவும் கோத்தபாய கூறுகின்றார்.

ஆகவேதான் குற்றவாளி என்பதை அவர் நிராகரிக்க வில்லை. கடந்த காலத்தில் ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு தொடர்பில் கம்பஹா நீதிமன்றில் முன்னாள் பிரிகேடியர் அளித்துள்ள வாக்குமூலத்தில், இது எனது தனிப்பட்ட விருப்பத்தில் நடைபெற்ற விடயமல்ல, எனது தேவைக்காக மேற்கொண்ட விடயமுமல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு பொறுப்புக் கூற வேண்டியது நானல்ல எனக்கு கிடைத்த உத்தரவிற்கு அமைய நான் செயற்பட்டேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த உத்தரவை பிறப்பித்தது யார்? அப்போது பாதுகாப்பு அமைச்சில் பொறுப்பாக இருந்தது யார்? கோத்தபாய ராஜபக்ஷ, அப்போதைய இராணுவத் தளபதி யார்? தயா ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சர் யார்? மகிந்த ராஜபக்ஷ, எமக்குத் தெரியும் மகிந்த ராஜபக்ஷ கோத்தபாயவிடம் கேட்காமல் எந்த காரியத்தையும் செய்யமாட்டார்.

ஆகவே கோத்தபாயவின் அறிவுறுத்தல் இல்லாமல் ரத்துபஸ்வலவில் துப்பாக்கிச் சூடு நடத்த வாய்ப்பில்லை. கோத்தபாயவிற்கு ஏன் இவ்வளவு பயம்? ஏன் அது தொடர்பில் விசாரணை செய்ய இந்த அரசாங்கம் தயங்குகின்றது எனச் சாடிய சமீர பெரேரா தொடர்ந்து கூறுகையில்,

"ஞானசார தேரரை கைது செய்ய பொலிஸாரால் முடியாமல் போயுள்ளது. 400ற்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன. எனினும் அவரை கைது செய்ய முடியாது. எனினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மாணவர்களை கைது செய்ய அவர்களால் முடியும்.

மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தவும் அவர்களை 24 மணித்தியாலங்களுக்குள் கைது செய்யவும் அவர்களால் முடியும். ஆகவே ஞானசாரரின் பின்னால் இருப்பது யார்? பொலிஸார் என்ன செய்கின்றார்கள்? என அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் கேட்கின்றோம் எனவும் அவர் தனது கருத்தை வெளியிட்டார். (செ)

## ஆணொருவரின்...

தெரிவித்தார்

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் உச்சில் வீதி கரவெட்டி மேற்கைச் சேர்ந்த பாலசுந்தரம் (வயது-60) எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்குறித்த நபர் பத்து தினங்களுக்கு முன்னர் காணாமல் போயுள்ளதாகவும் நேற்றைய தினம் அப்பகுதியில் சடலமாக காணப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

சடலம் பழுதடைந்துள்ளமையால் இவர் எட்டு தினங்களுக்கு முன் னர் உயிரிழந்திருக்காலம் எனச் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

சடலத்தின் அருகில் நச்சுப் போத்தல் ஒன்றும் காணப்பட்டிருந்த நிலையில் மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (செ-60)

## பனை மரத்துடன்...

படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 9 மணியளவில் தும்பளை மணியகாரன் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் அன்னலிங்கம் புஸ்பகரன் (வயது-36) என்பவர் உயிரிழந்தார். மற்றும் அன்ரன் சந்திரகுமார், துரைசிங்கம் பாலகுமார் (வயது-25), அருமைத்துரை கருணாகரன் (வயது-43) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இறந்த மற்றும் காயமடைந்த அனைவரும் தும்பளை கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களாவர்.

நிதானமின்றி சாரதியால் செலுத்திச் சென்றதாகக் கூறப்படும் இவர்களின் வாகனம் மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதில் கடுமையாக படுகாயமடைந்தவரே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட நிலையில் மரணமடைந்த வராவார்.

காயமடைந்த மூவரில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## கோத்தாவிடம்...

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் 15ஆம் திகதி பாரிய மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கோத்தபாய ராஜபக்ஷ ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை பயங்கரவாதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டவுடன் அங்கிருந்த பழைய இரும்புகளை இராணுவத்தின் தேவைக்காக பயன்படுத்த தாமே உத்தரவிட்டதாக குறிப்பிட்ட கோத்தபாய,

அந்தவிடயம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக தாம் அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் முன்னாள் இராணுவத் தளபதி தயா ரட்நாயக்கவும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிட்டத்தக்கது. (செ)

## பிச்சை எடுக்கும்...

செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, சிறுவர்கள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு தலைமையகம் மூலம் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாண்டு மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம் வரை சிறுவர், பிச்சை எடுக்கும் தொழிலுக்கு அமர்த்தும் நபர்களையும் சிறுவர்களையும் கைதுசெய்ய 14 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

இதில் 11 ஆண் சிறுவர்களும் 07 பெண் சிறுவர்களும் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதில் 4 பேர் சிறுவர் நன்னடத்தை இல்லத்திலும் 14 பேர் பெற்றோர்களிடமும் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, சிறுவர்கள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு தலைமையகம் எதிர்காலத்தில் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் இந்த செயற்றிட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## ஜனாதிபதியுடன்...

அவர்கள் தொடர்பான உறுதியான நிலைப்பாட்டினை அரசு வெளியிட வேண்டும் என கோரி காணாமல்போனவர்களுடைய உறவினர்கள் வடக்கு கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் கவனயீர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

அவர்களின் போராட்டங்கள் பல மாதங்களை தாண்டியும் நடைபெற்று வந்த நிலையிலும் அரசினால் எந்த பதிலும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையிலே இவர்களின் தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியினரான காணாமல்போனவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து நூறாவது நாளில் கிளிநொச்சி மாவட்டத்தில் மாபெரும் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

அப்போராட்டத்தின்போது முக்கிய கோரிக்கையாக, ஜனாதிபதியால் எமக்கு நேரடியான பதில் வழங்கப்பட வேண்டும் என கோரி வீதி மறியல் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது வட மாகாண ஆளுநர் குறித்த விடயத்தில் தான் கவனம் எடுப்பதாகவும், ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்து வீதி மறியல் போராட்டத்தை கைவிடு மாறு கோரியிருந்தார்.

அவரது வாக்குறுதிக்கமைய தற்காலிகமாக வீதி மறியல் போராட்டத்தை கைவிட்ட உறவினர்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கு காத்திருந்தனர்.

இந்த நிலையில் நாளைய தினம் யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி வருகை தரவுள்ளார் என்றும், அவருடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சந்திப்பொன்றை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளவர்களின் பெயர் விபரங்களை தருமாறு வட மாகாண ஆளுநரின் செயலாளரால் மேற்குறிப்பிட்ட உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதியுடனான நாளைய சந்திப்பில், தமது உறவினர்கள் தொடர்பாக தீர்க்கமான பதில் கிடைக்கும் என காணாமல் போனவர்களுடைய உறவுகள் அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்.

நாளைய தினம் யாழ் வர வுள்ள ஜனாதிபதி யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## தேசிய அரசாங்க...

இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையிலான தேசிய அரசாங்கம் குறித்த இந்த ஒப்பந்தம் எதிர்வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவுக்கு வரவுள்ளது.

இந்த நிலையில் தேசிய அரசாங்கத்தின் ஆயுட்காலத்தை நீடிப்பதா இல்லையா என்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடலுக்கு இரண்டு கட்சிகளும் தற்போது தயா ராகி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர்களான கபீர் ஹாஷிம், தலதா அத்துகோரள, ரஞ்ஜித் மத்தும பண்டார, மலிக் சமரவிக்கிரம, ரவி கருணாநாயக்க ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, மகிந்த அமரவீர, சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா, லசந்த அலகியவன்ன, லக்ஷ்மன் செனவிரத்ன ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த வார இறுதியில் குறித்த பேச்சுவார்த்தை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டுள்ளதாகவும், வெகு விரைவில் இந்தப் பேச்சு இடம்பெறும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து 2020ஆம் ஆண்டு தேர்தல் வரை கொண்டு செல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடையே ஏகமனதான தீர்மானம் இருக்கின்ற போதிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ)

# அரையிறுதியில் பங்களாதேஷ்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சம்பியன்ஸ் டிராபி லீக் போட்டியில் ஸ்ரோக்ஸ் சதம் விளாச, இங்கிலாந்து அணி 'டக்வொர்த் லூயிஸ்' விதிபபடி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால், அவுஸ்திரேலியா அரையிறுதி வாய்ப்பை இழக்க, பங்களாதேஷ் வாய்ப்பை பெற்றது.

8ஆவது சம்பியன்ஸ் டிராபி தொடர் லண்டன் மற்றும் வேல்சில் நடக்கிறது. நேற்று பர்மிங்காமில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் இங்கிலாந்து-அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் வென்றால் மட்டுமே அரையிறுதி வாய்ப்பு என்ற இக்கட்டான நிலையில் அவுஸ்திரேலியா களமிறங்கியது.

**பின்ச் அரைசதம்:** அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர் (21) விரைவில் திரும்பினார். சிறப்பாக செயல்பட்ட ஆரோன் பின்ச் (68) அரைச் சதம் அடித்தார். ரஷித் 'சுழலில்' ஹென்ரிக்ஸ் (17) சிக்கினர். தன் பங்கிற்கு ஓட்டங்கள் சேர்த்த அணித் தலைவர் ஸ்மித் (56) அரை சதம் கடந்தார்.

**ரஷித் அசத்தல்:** மார்க் வுட் 'வேகத்தில்' மக்ஸ்வெல் (20) வெளியேறினார். ரஷித் பந்துவீச்சில் வேட் (2), ஸ்டார்க் (0), கம்மின்ஸ் (4) கிளம்பினர். பொறுப்புடன் விளையாடிய ஹெட் அரை சதம் அடித்தார். முடிவில், அவுஸ்திரேலிய அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 277 ரன்கள் எடுத்தது. ஹெட் (71), ஹேசல்வுட் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இங்கிலாந்து சார்பில் அதிகபட்சமாக மார்க் வுட், ரஷித் தலா 4 விக்கெட் வீழ்த்தினர்.

**ஸ்ரோக்ஸ் சதம்:** பின், களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு 'வேகங்கள்' தொல்லை தந்தது. ஸ்டார்க் பந்தில் ஜேசன் ரோய் (4) சிக்கினார். ஹேசல்வுட் பந்துவீச்சில் ஹேல்ஸ் (0), ஜோ ரூட் (15) ஆட்டமிழந்தனர். பின், இணைந்த அணித்தலைவர் மோர்கன், ஸ்டோக்ஸ் ஜோடி எதிரணி பந்து வீச்சை சிதறடித்தது. மோர்கன் (87) அரைசதம் கடந்தார். அதிரடியாக விளையாடிய ஸ்ரோக்ஸ் சதம் விளாசினார். இங்கிலாந்து அணி 40.2 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 240 ரன்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து மழை வர, இங்கிலாந்து அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, 2 புள்ளி மட்டும் பெற்ற அவுஸ்திரேலியா தொடரிலிருந்து வெளியேறியது. பங்களாதேஷ் அணி (3) அரையிறுதிக்கு முன்னேறியது.

## ஆறு நாடுகளில்...

பேராட்டத்திற்கு வலுசேர்க்கும் முகமாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் உலகில் உள்ள ஆறு நாடுகளில் நாளை ஒரே நேரத்தில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதி வேண்டி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால், நூறாவது நாளையும் தாண்டி தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கத்தால் இவர்களுக்கான நீதியான பதில் இதுவரை கிடைக்கவில்லை. எனவே இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு போராட்டங்களும் கவனயீர்ப்பும் ஆங்காங்கே நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் புலம்பெயர்ந்த தமிழாகளால் பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் நாளைய தினம் ஒரே நேரத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரிய கவனயீர்ப்பு போராட்டங்கள் இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆர்ப்பாட்டத்திற்கு அந்த அந்த நாடுகளில் உள்ள தமிழ் இன உணர்வாளர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-9)

## காதலனை தேடி...

சீன யுவதி ஜப்பானில் ஒரு தனியார் நிறுவனத்தில் தொழில் புரிந்து வருவதுடன் இலங்கையை சேர்ந்த இளைஞன் தென் கொரியாவில் தொழில் புரிந்து வருகிறார்.

இளைஞன் ஜப்பானுக்கு சென்றிருந்த போது யுவதிக்கு அறிமுகமாகியுள்ளதுடன் இருவரும் காதலித்து வந்துள்ளனர்.

இலங்கைக்கு சென்று மீண்டும் ஜப்பான் திரும்பி யுவதியை திருமணம் செய்து கொள்வதாக இளைஞன் வாக்குறுதியளித்து ள்ளார்.

வாக்குறுதியளித்தபடி இளைஞன் ஜப்பான் வராத காரணத்தினால், சீன யுவதி இலங்கைக்கு வந்துள்ளார்.

இலங்கை வந்த யுவதி, தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு இளைஞனிடம் கேட்டுள்ளார். இளைஞன் அதற்கு மறுப்பு தெரிவித்ததை தொடர்ந்து யுவதி நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கு முன்னரும் சீன யுவதி இலங்கைக்கு வந்துள்ளதுடன் இளைஞனின் வீட்டில் தங்கியிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் தற்போது இளைஞனும் சீன யுவதியும் இணக்கப்பாட்டுடன் பிரிய சம்மதித்துள்ளனர். கடினமாக இருந்தாலும் இளைஞனை மறக்க முயற்சிப்பதாக சீன யுவதி தெரிவித்துள்ளார்.

மேலும் மீண்டும் இளைஞனை தேடி தான் இலங்கை வரப் போவதில்லை எனவும் யுவதி குறிப்பிட்டுள்ளார்.

சீன் யுவதி இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்ல உள்ளார். அதுவரை தங்குமிட வசதிகளை வழங்க இளைஞனின் பெற்றோர் இணங்கியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் முறைப்பாட்டை திரும்ப பெற்ற யுவதி, இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லும்வரை இளைஞனின் வீட்டில் தங்கியிருக்க அவரது வீட்டுக்கு சென்றதாக நாவலப்பிட்டி பொலிஸார் கூறியுள்ளனர். (செ)

# அனர்த்த முகாமைத்துவம் எக் கட்டத்திலும் தோல்வியடைந்து விடவில்லை - அரசாங்கம்

அரசின் அனர்த்த முகாமைத்துவம் எக்கட்டத்திலும் தோல்வியடைந்துவிடவில்லை என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

வெள்ள அனர்த்தத்திற்கு முன்னதாகவே அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மக்களுக்கு உரிய எச்சரிக்கையினையும் முன்னறிவித்தல்களையும் வழங்கி அவர்களைக் காத்தது என்று அவர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அமர்வில் தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தங்களுக்கு முன்னதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக எமது அமைச்சு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கும் ஊடகங்களுக்கும் அனர்த்த எச்சரிக்கை முன்னறிவித்தல்களை அனுப்பியிருந்தது.

எச்சரிக்கை முன்னறிவித்தல்களை தாங்கள் பெற்றிருந்ததாக இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் தெரிவித்திருந்தார். மே மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையான எச்சரிக்கை முன்னறிவித்தல்கள் பற்றிய அனைத்து பதிவு அறிக்கைகளையும் நான் சபைக்கு வழங்குகிறேன்.

அரசின் அனர்த்த முகாமைத்துவம் தோல்வியடைந்து விட்டதாக யாரும் கூறுவார்களாயின் அதை ஏற்கமாட்டேன். அனர்த்த நிலைமையின் போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உணவு தேவைகளுக்காக அரசாங்கம் இதுவரை 266 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

அத்துடன், வீடுகளை இழந்து செல்வதற்கு இடமில்லாமல் இருப்போருக்கு வீட்டு வாடகைத் தொகையொன்றை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெறும் உத்தேசமொன்றும் எமக்கு இருக்கிறது.

அனர்த்த ஆபத்துள்ள பிரதேசங்களில் உள்ளவர்களை பாதுகாப்பான அரச அல்லது தனியார் காணிகளில் தற்காலிகமாக குடியேற்றுவதற்கான உத்தேசமும் இருக்கிறது.

அனர்த்த ஆபத்துள்ள பிரதேசங்களில் மக்களுக்கு 12 இலட்சம் ரூபாய்வில் நிர்மாணிக்கப்படக் கூடிய 3 வீடமைப்பு திட்டங்களை நாம் தயாரித்துள்ளோம். இந்த வீடமைப்பு திட்டங்களுக்கு அமையவே அரநாயக்கவில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வீடுகளை நிர்மாணிப்பதற்கு 12 இலட்சம் ரூபாவை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

BRITISH COLLEGE of Education

More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்


# நாட்டின் மொத்த சனத்தொகையில் 17 வீதமானோர் புகைப்பிடிப்பவர்கள்

(கொழும்பு)

நாட்டின் மொத்த சனத்தொகையில் 15 இலட்சம் பேர் புகைத்தல் பழக்கம் உடையவர்கள் என தேசிய புகையிலை மற்றும் மது அதிகார சபையின் தலைவர் டாக்டர் பாலித அபேகோன் தெரிவித்துள்ளார். புகைத்தல் பழக்கமுள்ளவர்கள் நாட்டின் மொத்த சனத்தொகையில் 17 வீதமானவர்கள் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு புகைபிடிப்பவர்களில் ஒருவர் ஒரு நாளைக்கு ஐந்து சிகரெட்டுக்களை பயன்படுத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

புகைப்பிடிப்பவர்களின் அருகிலுள்ளவர்கள் புகையை சுவாசிப்பவருக்கும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக விசேட வைத்திய நிபுணர் அஜித் அழகியவன்ன தெரிவித்துள்ளார். (இ-7)





வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General IELTS

Next exam date in Jaffna. 24 June 2017
29 July 2017

idp www. idp.com/srilanka

BRITISH COLLEGE of Education

More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124


# வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை



கொழும்புத்துறை வளன்புரம் 4ஆம் குறுக்கு வீதியானது பல வருடங்களாக செப்பனிடப்படாமல் காணப்படுவதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து வீதியைச் செப்பனிடுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-107)

# இராசி பலன்

11.06.2017
(வைகாசி 28, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
துதியை முன்னிரவு 10.41 மணிவரை
மூலம் காலை 8.08 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
திருத்துவ ஞாயிறு. அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம் | | |
| | | | ராகு |
| சந் | சனி | | குரு |

**மேடம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், திடீர் பயணங்கள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**இடபம்:** பொறுமையுடன் செயற்பட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்.

**மிதுனம்:** களஸ்திர நன்மையுண்டு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், முயற்சிகள் பலிதமாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு, உறவினர்களின் உதவியுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மனச் சஞ்சலங்கள் ஏற்படலாம், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு, போசன நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, கொடுக்கல் வாங்கல் களில் கவனம் தேவை.

**தனுசு:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், ரோக பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**கும்பம்:** காரிய சித்தியுண்டு, மன மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு, அந்நியர் உதவியுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி மக்களுக்கு உதவும் நோக்குடன் மனிதாபிமான புகையிரதப் பயணம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட தென் பகுதி மக்களுக்கு உதவும் நோக்குடன் மனிதாபிமான புகையிரதப் பயணம் நேற்று காங்கேசன்துறை புகையிரத நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு தனது பயணத்தை ஆரம்பித்தது.

இந்த விசேட புகையிரதத்தில் பொதிகள் ஏற்றுவதற்கான 5 பெட்டிகள் இணைக்கப்பட்டு காலை 6 மணிக்கு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் ஆரம்பமான பயணம் 6.30 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்தை வந்தடைந்து அங்கு மக்களால் கொடுக்கப்பட்ட பொருட்கள் ஏற்றப்பட்டன. பின்னர் 7 மணியளவில் தனது அடுத்த பயணத்தை ஆரம்பித்தது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மதவாச்சி, அநுராதபுரம்,மாஹோ, கணேவத்த, குருநாகல், பொல்காவல, அலவ்வ, அம்பேபுஸ்ஸ, மீரிகம, வெயங்கொட, கணேமுல்ல, கம்பஹா, ராகம, களனி, ஹுணுப்பிட்டிய, தெமட்டகொட, மருதானை,கொழும்பு கோட்டை, கல்கிசை, மொறட்டுவ, பாணந்துறை ஆகிய புகையிரத நிலையங்களில் உதவிப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நிறுத்தப்படும்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு "மக்கள்தொடர்பாடல்" என்ற இந்த செயற்றிட்டத்தை மொபிடெல் மற்றும் புகையிரத திணைக்களத்தின் அனுசரணையுடனும் ரூபவாகினி வலையமைப்பின் ஊடக அனுசரணையுடனும் செயற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## தெற்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழில் மாணவர்கள் பிரார்த்தனை

தென்னிலங்கையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவால் உயிரிழந்த மூவின மக்களினதும் ஆத்மா சாந்தியடையவும் வாழ்வு விரைவில் புத்துயிர் பெறவும் வேண்டுதல் செய்து பொன்னாலை வெண்கரம் படிப்பக மாணவர்கள் நேற்று முன்தினம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இயற்கையின் சீற்றத்தால் தென்னிலங்கையில் உள்ள பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கற்றல் உபகரணங்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளமையால் நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் அந்த மாணவர்கள் மீளவும் தமது கற்றல் செயற்பாட்டைத் தொடங்க அவர்களுக்கு இறை அருள் கிடைக்க வேண்டும் எனவும் மாணவர்கள் வேண்டுதல் செய்தனர்.

இந்தப் பிரார்த்தனையில் வெண்கரம் நிறுவன பிரதிநிதிகளும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (இ-9)

## இராஜகோபுர கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்- கல்வளை ஸ்ரீ பரமானந்த பிள்ளையார் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன சமர்ப்பண நவகுண்டசஹித புனராவர்த்தன புதிய பஞ்சதள இராஜகோபுர பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெறவுள்ளது. இதேவேளை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நாளை மறுதினம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 7 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறும். (இ-8)




## மஹோற்சவம்

தென்மராட்சி வரணி வடக்கு சிமிழ் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை 12ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.(இ-5-103)

➢➢➢➢➢➢

காரைநகர் களபூமி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை சப்பறமும் 22ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனமும் இடம்பெறவுள்ளன. (இ-5-100)

## பிறப்புப் பதிவு செய்தல் விசேட நடமாடும் சேவை

நாளை மறுதினம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற் பகல் 10 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட் பட்ட இதுவரை பிறப்பினைப் பதிவு செய்யாத 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான பிறப்பினை பதிவு செய்யும் முகமாக நடமா டும் சேவையானது உதவிப் பதிவாளர் நாயகத்தினால் (வடக்கு வலயம்) நல்லூர் பிரதேச செயலகத்தில் நடத்தப்படும். அன்றைய தினம் அந்நடமாடும் சேவையில் கலந்து பயன்பெறலாம் என நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ

## நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை

சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு யூபிலி நிறைவை முன்னிட்டு ஆன்மிகத்தின் "ஆணி வேரும் விழுதுகளும் விடுதலை நோக்கி" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை 12ஆம் திகதி திங்கட்கிழமை நற்கருணை திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் மலர் வெளியீட்டுப் பிரிவு ஒழுங்கிணைப்பாளர் கூ.இருதயநாதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரெட்ணம் அடிகளார் கலந்து கொள்வார். மறுநாள் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 175 ஆவது ஆண்டு யூபிலி திருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கு தமிழ் ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறும். (இ-7)

## வியாபார முகாமை ஆரம்ப வைபவம்

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் வியாபார முகாமைத்துவ மாணியின் ஆரம்ப வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டப இலக்கம் இரண்டில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## திவ்ய பிரம்மோற்சவம்


யாழ்ப்பாணம்-வண்ணை கிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான திவ்ய பிரம்மோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடை பெறவுள்ளன. (இ-8)

## இராணுவத்தினர் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களின் அவசர தேவையினை நிவர்த்தி செய்யும் முகமாக இராணுவத்தினரால் கடந்த 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் வழங்கப்பட்டது.

வைத்தியசாலை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க பாதுகாப்புப் படைகளின் யாழ் மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் உத்தரவின் பேரில் நடைபெற்ற இவ் இரத்ததான நிகழ்வில் பாதுகாப்பு படையின் கீழ் பணியாற்றும் இராணுவத்தினர் 110 பேர் இரத்ததானம் வழங்கியிருந்தனர். (இ-9)



காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் தேவஸ்தான தேர்த்திருவிழா கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற போது... (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

## அலங்கார உற்சவம்

கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதி ஸ்ரீ சாமுண்டா தேவி சமேத ஞானவைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்கள் காலை, மாலை உற்சவங்கள் இடம்பெற்று 10ஆம் நாளான 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளது. (இ-8)



சுக வாழ்க்கைப் பேரவையின் மூத்தோர் கௌரவிப்பும் கா.வைத்தீஸ்வரன் எழுதிய "பாரிசவாதம் தவிர்ப்போம்" நூல் வெளியீடும் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் அறிவாலயத்தில் இடம்பெற்றது. பேரவையின் தலைவர் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொண்டார். மூத்தோர் கௌரவிப்பு உரையை கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் பி.கனகசபாபதி (ஜே.பி) ஆற்றியதுடன் நூல் வெளியீட்டுரையை சுக வாழ்க்கைப் பேரவையின் ஆலோசகர் வைத்திய கலாநிதி சி.எஸ்.நச்சினார்க்கினியன் ஆற்றியிருந்தார். (படங்கள்:-சோபிகா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாக்காளர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம்

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட தேர்தல்கள் செயலக உத்தியோகத்தர்களினால் வாக்காளர், பொது மக்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் நேற்று முன்தினம் வரணி நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்க பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வாக்குரிமையின் முக்கியத்துவம், தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான விளக்கங்களும் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் வரணி பிரதேச கிராம சேவையாளர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வரணிப் பிரதேச அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள், மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(இ-5-103)


### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1987 சித்திரை நட்சத்திரம் கன்னி இராசி 3 சுற்று பாவம் 38 (சொப்றவெயர் என்ஜினியர்) Software Engineer பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு: 071 861 8213
(9153) 077 618 4649

## 80 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**Dr.வேலுப்பிள்ளை தேவராசன் (D.A.M)**

11.06.2017



அகவை எண்பதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம். எல்லாம் வல்ல வற்றாப்பளை கண்ணகி அம்மனின் அருளால் மேலும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோர்

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள்.

இல.27, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

Tel : 077 047 0609

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BSc Eng/தனியார் தொழில்<br>தொ.இ: B/7411 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 20செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7446 |
| பிறப்பு: 1987 இந்து<br>நடசத்திரம்: உத்தராடம் செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/7412 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:CBF, DBF/வங்கியாளர்<br>தொ.இ: G/7448 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: •43செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி பொறியியலாளர<br>தொ.இ: B/7416 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/7449 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/7417 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 51 சூரிசெவ் 4 இல்<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/7453 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர் பிரியங்கரவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்கு தாக்கல்!

(கொழும்பு)

முன்னாள் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன மற்றும் அவரது பிரத்தியேகச் செயலாளர் ஆகியோர் மீது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளது. முன்னாள் அமைச்சர், சிவில் விமானசேவை அதிகாரசபையின் சட்டதிட்டங்களை மீறி அவரது பிரத்தியேகச் செயலாளரான பி.தயாவன்சவை அபிவிருத்தித்திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமித்ததன் மூலம் அரசுக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று இவ்விருவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான ஆணைக்குழு, முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன மற்றும் அவரது பிரத்தியேகச் செயலாளர் பி.தயாவன்ச ஆகியோர் மீது 5 குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்னவுக்கும் அவரது பிரத்தியேகச் செயலாளர் பி.தயாவன்சவுக்கும் எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் 70ஆவது சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் பதவியிலிருந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலேயே பிரத்தியேகச் செயலாளரான பி.தயாவன்சவை அபிவிருத்தி திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக



நியமித்துள்ளார். இதன்மூலம் அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளாரென இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# புதிய அமைச்சுக்களின் வர்த்தமானிய அறிவித்தல்

(கொழும்பு)

அண்மையில் புதிதாக அமைச்சுப் பதவிகள் கொடுக்கப்பட்ட நிதி, ஊடகம், வெளிவிவகாரம், காணி மற்றும் அபிவிருத்திப் பணி பொறுப்புகள் ஆகிய நான்கு அமைச்சுகளுக்குரிய விடயதானங்கள் தொடர்பான வர்த்தமானிய அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின்படி தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை உள்ளிட்ட 5 நிறுவனங்கள் வெளிவிவகார அமைச்சின் கீழும் பொதுத் திறைசேரி, தேசிய இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், கலால் திணைக்களம், காப்புறுதி வாரியம் உள்ளிட்ட 33 நிறுவனங்கள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் நில அளவைத் திணைக்களம், கந்தளாய் சீனி நிறுவனம் உள்ளிட்ட 8 நிறுவனங்கள் காணி மற்றும் பாராளுமன்ற சீர்திருத்த அமைச்சின் கீழும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட 3 நிறுவனங்கள் அபிவிருத்திப் பணி பொறுப்புக்கள் அமைச்சின் கீழும் அறிவிக்கப்பட்டது. (7-8)

# ஜோன் அமரதுங்கவின் செயல் இழிவானது

## ரஞ்சன் ராமநாயக்க கண்டனம்



சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் செயல் இழிவானது என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

அனுபவம் மிக்க அரசியல்வாதி என்ற வகையில் அமைச்சர் ஜோன் அமரதுங்க ஊடகவியலாளர்களை தரக்குறைவாக பேசி அச்சுறுத்தியமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் 26 ஊடகவியலாளர்கள் படு



கொலை செய்யப்பட்டனர். லசந்த விக்கிரமசிங்க நடுப் பகலில் படுகொலை செய்யப்பட்டார்.

கடந்த அரசாங்கத்தை தோற்கடித்து நல்லாட்சி அரசாங்கத்தை மக்கள் ஆட்சி பீடம் ஏற்றியது மாற்றத்திற்காகவேயாகும்.

கடந்த அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு ஊடகங்கள் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தன. அவ்வாறு உதவிய ஊடகவியலாளர்களை இழிவுபடுத்துவது பொருத்தமாகாது.

ஜோன் அமரங்க எனது நல்ல நண்பர். மாவட்ட அமைப்பாளராக கடமையாற்றும் அவர் இவ்வாறு ஊடகவியலாளர்களை இழிவுபடுத்துவது பொருத்தமாகாது.

இவ்வாறான செயற்பாடுகளினால் அரசாங்கம் பொதுமக்கள் மத்தியில் நல்லபிப்பிராயத்தை இழக்க நேரிடும் என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (7-8)




- 1774 - அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியேர்சில் இருந்து பிரெஞ்சு இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி யூதர்கள் அங்கிருந்து வெளியேறினர்.
- 1788 -ரஷ்ய நாடுகாண் பயணி கெராசிம் இஸ்மாயிலொவ் அலாஸ்காவை அடைந்தார்.
- 1805 -மிச்சிகனில் டிட்ராயிட் நகரத்தின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.
- 1837 - பொஸ்டனில் ஆங்கிலேயர்களுக்கும் ஐரிய மக்களுக்கும் இடையில் கலவரம் மூண்டது.
- 1901 -நியூசிலாந்து தன்னுடன் குக் தீவுகளை இணைத்துக் கொண்டது.
- 1935 - அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரான எட்வின் ஆர்ம்ஸ்ட்ரோங் உலகின் முதலாவது தனது பண்பலை ஒலிபரப்பை நியூ ஜேர்சியில் அறிமுகப்படுத்தினார்.
- 1937 - சோவியத் ஒன்றியத்தில் எட்டு இராணுவத் தலைவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1938 - இரண்டாம் சீன-ஜப்பானியப் போர்: ஜப்பானியப் படைகளை எதிர்கொள்ள சீன அரசு மஞ்சள் ஆற்றை பெருக்கெடுக்க விட்டதில் 500,000 முதல் 900,000 வரையான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானங்கள் இத்தாலியில் ஜெனோவா மற்றும் டூரின் நகர்கள் மீது குண்டுகளை வீசின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: மால்ட்டா மீது முதற் தடவையாக இத்தாலிய விமானங்கள் தாக்குதலை நடத்தின.
- 1956 - கல்லோயா படுகொலைகள்: இலங்கையின் வடக்கே கல்லோயாவில் சிங்களக் குடியேற்றிகள் நடத்திய தாக்குதலில் 150க்கும் கூடுதலான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1963 - தெற்கு வியட்நாமில் மத விடுதலையை வலியுறுத்தி திக் குவாங் டுக் என்ற பௌத்த மதகுரு தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டார்.
- 1968 - உலகத் தமிழ்க் கழகம் தேவநேயப் பாவாணர் தலைமையில் திருச்சிராப் பள்ளியில் அமைக்கப்பட்டது.
- 1981 -ஈரானில் 6.9 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 2,000 வரையில் கொல்லப்பட்டனர்.
- 1991 - ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளன் சிறையில் அடைக்கப்பட்டார்.
- 2002 -அன்டோனியோ மெயூச்சி என்பவரே தொலைபேசியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் என ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசினால் அறிவிக்கப்பட்டார்.
- 2004 - நாசாவின் கசீனி-ஹியூஜென்ஸ் விண்ணுளாவி சனிக் கோளின் ஃபீபி துணைக் கோளை அண்டிச் சென்றது.
- 2007 - கடும் மழை, வெள்ளம் காரணமாக வங்காள தேசத்தில் 118 பேரும் தெற்கு சீனாவில் 66 பேரும் உயிரிழந்தனர்.

பிறப்புகள்

- 1838 - எம். சி. சித்திலெப்பை, ஈழத்துத் தமிழறிஞர், எழுத்தாளர் (இ. 1898)
- 1876 - அல்பிரட் எல். குறோபெர், அமெரிக்க-பிரெஞ்சு மானிடவியலாளர் (இ. 1960)
- 1897 -ராம் பிரசாத் பிசுமில், இந்திய செயல பாட்டாளர் (இ. 1927)
- 1899- யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற சப்பானிய எழுத்தாளர் (இ. 1972)
- 1908 -சோ. இளமுருகனார், ஈழத்துப் புலவர் (இ. 1975)
- 1932 - டி. வி. கோபாலகிருஷ்ணன், கருநாடக, இந்துத்தானி இசைக் கலைஞர்
- 1947 - லாலு பிரசாத் யாதவ், இந்திய அரசியல்வாதி
- 1951 - மித்திர வெத்தமுனி, இலங்கைத் துடுப்பாட்ட வீரர்
- 1957 - சுகுமாரன், தமிழகக் கவிஞர்
- 1965 -மனுவெல் உரீபே, மெக்சிகர், உலகில் எடை கூடிய மனிதர் (இ. 2014)
- 1966 - மு. ராஜன், மலேசிய எழுத்தாளர்

இறப்புகள்

- 1557 -போர்த்துகலின் மூன்றாம் யோவான் (பி. 1502)
- 1895 - டானியல் கிர்க்வுட், அமெரிக்க வானியலாளர் (பி. 1814)

# இலங்கை-தாய்லாந்துக்கிடையே திறந்த வர்த்தக ஒப்பந்தம்

இலங்கைக்கும், தாய்லாந்துக்கும் இடையில் திறந்த வர்த்தக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு மற்றுமொரு சந்தைவாய்ப்பை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு இருப்பதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது. (7-8)

# வீடுகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை விரைவில்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளம், மண்சரிவு என்பனவற்றினால் பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்ட வீடுகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணைப்பு நடவடிக்கையுடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

டெங்கு ஒழிப்பு தொடர்பாகவும் இப்பிரதேசங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று அனர்த்தம் நிகழ்ந்த பிரதேசங்களில் களுத்துறை மாவட்டத்தின் ஒருங்கிணைப்பாளரான, அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (இ-7)

# மஹியங்கனை நகரில் பாதணிக்கடை தீக்கிரை

மஹியங்கனை நகரில் அமைந்துள்ள பாதணி விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ பரவலினால் குறித்த பாதணிக் கடை முற்றாக எரிந்து சம்பலாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி பகுதியை சேர்ந்த முஹம்மத் தாஜுதீன் என்பவருக்கு சொந்தமான கடையிலேயே இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், தீக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொகுசு வாகன கொள்வனவால் 400 மில்லியன் ரூபாய் இழப்பு

கொமன்வெல்த் உச்சி மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுக்காக புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனங்களால், இலங்கை அரசாங்கத்துக்கு 400 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாக, கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், 2013ஆம் ஆண்டு கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது இதில் பங்கேற்ற வெளிநாட்டுத் தலைவர்களின் பயன்பாட்டுக்காக, 82 சொகுசு வாகனங்களை மகிந்த ராஜபகஷ அரசாங்கம் இறக்குமதி செய்திருந்தது.

இந்த வாகனங்கள்பின்னர் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளன. இதனால் அரசாங்கத்துக்கு 400 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வாளர்திணைக்களம் தெரிவித்துள்ளது. (7-8)

# வடக்கு அமைச்சர்களின் விவகாரம் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில்

(கொழும்பு)

வடக்கு மாகாணசபை அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை, குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த புதன்கிழமை நடந்த கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து, கேள்வி எழுப்புப்பட்ட போது, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்த விடயம் குறித்து நான் நாளிதழ்களின் மூலமே அறிந்திருக்கின்றேன். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கும் கூட்டம் ஒன்றிலேயே இது பற்றி ஆராய வேண்டும் என்றும் கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, வரும் 14ஆம் நாள் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம் இடம் பெறவிருப்பதாகவும் அதே நாளில் தான், வடக்கு மாகாண சபையின், சிறப்பு அமர்வில், இந்த விசாரணை அறிக்கை தொடர்பாக விவாதம் நடக்கவுள்ளதும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான இலங்கை தமிழ் அரசுக் கட்சி இந்த விவகாரம் தொடர்பாக நாளை மறுநாள் கூடி ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக கருத்துக்களை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கட்சித்தலைமையினால் கோரப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (7-8)

# மாத்திரைகளை உட்கொண்டு உயிரிழந்த 4 வயதுச் சிறுமி

கம்பஹா பிரதேசத்தை சேர்ந்த 4 வயது சிறுமி ஒருவர் மாத்திரைகளை உட்கொண்டு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறுமியின் சடலம் நேற்று முன்தினம் கம்பஹா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே இது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கனேமுல்லை, பஹலியாகொட பிரதேசத்தை சேர்ந்த சிறுமி தனது தாய் வாங்கி வைத்திருந்த மாத்திரைகளை உட்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில்இந்த விடயம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அந்த மருந்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அதிகளவான இரும்புச்சத்து உடலில் சேர்ந்தமையினால் மரணம் சம்பவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மண்சரிவு அபாயம் உள்ள இடங்களைப் பரிசோதிக்கவும்

(கொழும்பு)

மண்சரிவு அபாயம் உள்ள சுமார் 2000 இடங்களை பரிசோதிப்பதற்காக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட பரிசோதனை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி 750 இடங்கள் இதுவரை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மண்சரிவு சேவை கண்காணிப்பு பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம். எஸ். பண்டார இந்த தகவலை வெளியிட்டுள்ளார். (இ-7)

# இலங்கை அனர்த்தத்தை எதிர்வுகூறிய அமெரிக்கா

(கொழும்பு)

மூன்று பிரதான ஆறுகளுக்கும் குறுக்கே ஆறு பெரிய அணைகளை அமைக்கும் வரை இலங்கை பாரிய வெள்ள மற்றும் நிலச்சரிவு ஆபத்துக்களை எதிர் கொள்ளும் என்று அமெரிக்க பொறியியல் நிறுவனம் ஒன்று 49 ஆண்டுகளுக்கு முன்னரே எச்சரித்துள்ளது.

உள்நாட்டு விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

களு கங்கை, ஜின்கங்கை, நில்வளகங்கை ஆகிய ஆறுகளுக்குக் குறுக்கே, பல்வேறு இடங்களில் ஆறு அணைக்கட்டுகளை அமைக்க வேண்டும் என்று அமெரிக்க நிறுவனம் இலங்கை அரசாங்கத்துக்கு திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தது.

இந்த திட்டத்தை செயற்படுத்துவதன் மூலமே வெள்ள ஆபத்தில் இருந்து பாதுகாப்புத் தேட முடியும் எனவும் கொலராடோவைச் சேர்ந்த ஈ.சி.ஐ பொறியியல் ஆலோசனை நிறுவனமே இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (7-8)

# அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் நிரோஷன் அழைப்பு

பாதிப்புக்களைக் கட்டுப்படுத்தி பொதுமக்கள் எதிர் கொள்ளும் சிரமங்களைக் குறைப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இழப்பீடு வழங்கக்கூடிய வலிமை அரசாங்கத்திற்கு இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

சமீபத்திய வெள்ளம்மற்றும் மண்சரிவு குறித்து நேற்று முன்தினம்பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில்அமைச்சர் உரையாற்றினார்.

இவ்வாறான பாதிப்புக்களை தொடர்ந்தும் எதிர் கொள்ளும் நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. அனர்த்தம் ஏற்பட்ட நாள் முதல் அரச பொறிமுறை, சிவில் மக்களுடன் ஒன்றிணைந்து உன்னதமான பணிகளை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வருகிறது! சுகாதார அமைச்சின் புதிய கடும் சட்ட நடவடிக்கை

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண கால நிலையின் காரணமாக டெங்கு நோயின் தாக்கம் பாரியளவில் அதிகரித்துள்ளது. நாடளாவிய ரீதியில் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 59 ஆயிரத்து 760 பேர் டெங்கு நோயாளர்களாக கண்டறியப்பட்டுள்ளதுடன் 153 பேர் குறித்த நோயினால் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. மேல் மகாணத்திலேயே பெருமளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் டெங்கு நோய் தொற்று பரவும் வகையிலான சூழலை வைத்திருப்போருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 250 | 160 | 200 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 90 | 120 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 450 | 600 | 400 | 350 |
| தக்காளி | 160 | 250 | 140 | 200 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 100 | 70 |
| கோவா | 160 | 250 | 140 | 200 | 160 | 180 |
| கரட் | 250 | 500 | 200 | 300 | 400 | 250 |
| பூசணி | 100 | 120 | 80 | 80 | 80 | 70 |
| புடோல் | 100 | 150 | 50 | 120 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 80 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 300 | 350 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 150 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 150 | 80 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 70 | -- | 160 | 140 |
| பயற்றங்காய் | 140 | 150 | 100 | 120 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 200 | 100 | 140 | 160 | 120 |
| பீற்றூட் | 150 | 200 | 100 | 160 | 160 | 120 |
| குடைமிளகாய் | 300 | 500 | 150 | -- | 300 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 80 | 120 | 120 | 160 |
| போஞ்சி | 200 | 400 | 180 | 280 | 240 | 200 |
| கத்தரிதம்பள்ள | 130 | 150 | 150 | 200 | 200 | 120 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 30 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 50 | 60 | 80 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 65 | 60 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | -- | -- | 280 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 200 | -- | -- | 200 | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | -- | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 40 | 40 | 25 |
| [illegible] | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| [illegible] | 80 | 150 | -- | -- | --- | 80 |

# நோனாதோட்ட பாலம் உடைந்ததால் உரமூடைகளுடன் சென்ற கனரக லொறி விபத்து



(கொழும்பு)

ராகமையில் இருந்து தலவாக்கலை பேரம் தோட்டத்திற்கு தேயிலை செடிகளுக்கான பசளையை ஏற்றிச் சென்ற கனரக லொறியொன்று விபத்துக்குள்ளாகியதால் அப்பகுதியூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த லொறி இராணிவத்தை நோனாதோட்டம் பாலத்தின் ஊடாக பயணித்த போது பாலம் உடைந்து விழுந்ததால் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மேற்படி கனரக லொறியில் சுமார் 16 தொன் உர மூடைகள் இருந்துள்ள நிலையில் அவற்றை பாதுகாப்பாக மற்றைய லொறி ஒன்றுக்கு மாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

(தொடர்ச்சி...)

இவ்விடயம் தொடர்பில் சாட்சியமளித்த வடமாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் இந்த ஆசிரியர்கள் அதிபர்கள் மாநாட்டிற்கென Finance Commission இதனால் ரூபா 40 மில்லியன் வழங்கப்பட்டதாகவும் தம்மால் இந்த மாநாடு நடத்தப்படவில்லை என்றும் ஒவ்வொரு வலயமும் guideline இதன்படி அதில் சொல்லப்பட்ட விடயங்களை நடத்தினார்கள் என்றும் அவர்களின் ஆக்கங்களைக் கொண்டு சஞ்சிகைகள் வெளியிட்டார்கள் என்றும் ஆசிரியர்களுக்கு உள்ள சந்தேகங்கள் தொடர்பாக ஆய்வுகள் நடத்தினார்கள் என்றும் கல்வியியலாளர்களைக் கொண்டு விரிவுரை நடத்தினார்கள் என்றும் ஒவ்வொரு வலயத்திலும் 2 நாட்கள் இது நடைபெற்றது எனவும் கல்விக் கண்காட்சிகள் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது என்றும் ஆசிரியர்களின் ஆற்றலை வெளிப்படுத்துகின்ற நிகழ்வுகள் தான் நடைபெற்றது என்றும் இது எவ்வாறு நடத்த வேண்டும் என Finance Commission ஒரு பிரமாணத்தினை அனுப்பி இருக்கின்றது. இதன் மூலம் அதிலிருந்து விலகிச் செல்ல முடியாது என்றும் அந்த வகையில் தான் செயற்படுவதாகவும் இதன் மூலம் ஆசிரியர்கள் மத்தியில் எவ்வாறு வகுப்பறையில் கற்பிக்க வேண்டும் என்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது எனவும் கூறியிருந்தார்.

மேலும் கௌரவ அமைச்சர் தமது சாட்சியத்தில் குறித்த மாநாட்டில் என்ன நடைபெற்றது என்பதை தாம் பார்க்கவில்லை என்றும் செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்கள் வலயங்களில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை பார்ப்பவர்கள் என்றும் 12 வலயங்களில் பதினையாயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்று கூறியிருந்தார்.

மேலும் கௌரவ அமைச்சரிடம் ஆசிரியர்களின் திறன் விருத்திக்காக வழங்கப்பட்ட அந்த நிதியை ஒரு நாளில் செலவு செய்யாமல் அவர்களின் கல்வி கற்பிப்பதற்கான அறிவை வளர்ப்பதற்கு பயன்படுத்தலாம் எனக் கூறப்பட்ட போது அந்த நிதி இதற்காகவே நான் வழங்கப்பட்டது எனக் கூறியிருந்தார்.

வட மாகாண கல்வி அமைச்சு செயலாளரின் சாட்சியத்தையும் வட மாகாணக் கௌரவ கல்வி அமைச்சரின் சாட்சியத்தையும் ஒப்பிட்டு நோக்கும் இடத்து வட மாகாணக் கௌரவ கல்வி அமைச்சரின் பொறுப்பற்ற செயற்பாடு மிகத் தெளிவாக வெளிப்படுகின்றது. கல்வி அமைச்சின் செயலாளர் 80 மில்லியன் வழங்கப்பட்டு பின் அது தங்களால் 40 மில்லியன் குறைக்கப்பட்டது. எனக் கூறிய வேளையில் கௌரவ அமைச்சர் 40 மில்லியன் மட்டுமே தரப்பட்டதாக கூறியுள்ளார். இந்நிதி Finance Commission guideline படியே செலவு செய்யப்பட்டது. எனும் Finance Commission அனுப்பிய பிரமாணத்தைமீற முடியாது என்றும் தெரிவித்துள்ள அதே வேளையில் அமைச்சின் செயலாளர் வழங்கப்பட்ட 80 மில்லியன் நிதியில் 40 மில்லியன் வேறு தேவைக்கு பாவிக்கப்பட்டதாக கூறியுள்ளார். சம்பந்தப்பட்ட கௌரவ அமைச்சர் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஏற்கனவே கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எதனையும் விசாரணைக்குழு முன் சமர்பிக்கவில்லை. அவ்வாறு செய்யுமாறு தமது அமைச்சின் செயலாளரையும் பணிக்கவில்லை. Finance Commission இன் guildeline குறித்து அவற்றை சமர்ப்பிக்காது சாட்டியமளித்துள்ளார். மேலும் ஆசிரியர் மகாநாட்டின் போது சஞ்சிகைகள் வெளியிடப்பட்டதாக கூறிய போதிலும் அவை விசாரணைக்குழு முன் சமர்ப்பிக்கப்படவில்லை.

கல்வி வளர்ச்சிக்கென ஆசிரியர், அதிபர் மகாநாடு நடத்த Finance Commission இனால் தரப்பட்ட ரூபா 80 மில்லியன் அமைச்சரின் அறிவுக்கு அப்பாற்பட்ட வகையில் ரூபா 40 மில்லியனாக செயலாளரினால் குறைக்கப்பட்டு அத் தொகையையும் 2 நாட்களில் செலவு செய்யப்பட்டுவிட்டது. இரண்டு நாட்களில் ரூபா 40 மில்லியனை செலவு செய்த இச் செயற்பாடு வட மாகாண கல்வி வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது அத்துடன் மிகுதி ரூபா 40 மில்லியனுக்கு ஆசிரியர்களுக்குத் தேவையான தளபாடங்கள் பெறப்பட்டதாக அமைச்சு செயலாளர் கூறியுள்ளார். அத் தளபாடங்கள் பற்றிய விபரம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவில்லை. இன்றும் கூட எமது பாடசாலைகளில் சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய கரும்பலகையும் வெண்கட்டிகளும் பாவிக்கப்படுகின்றன. இந்நிலையில் Finance Commission இனால் வழங்கப்பட்ட ரூபா. 80 மில்லியனில் 40 மில்லியன் 2 நாட்களில் செலவு செய்யப்பட்ட மிகுதி ரூபா 40 மில்லியனுக்கு தகுந்த விளக்கம் எமக்கு தரப்படவில்லை. இந்த ரூபா 40 மில்லியனும் 12 கல்வி வலயங்களில் 2 நாட்களில் செலவு செய்யப்பட்டதன் மூலம் வடமாகாண கல்வி வளர்ச்சியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா என்ற விடயம் திறனாய்விற்கு உட்படுத்த வேண்டியது ஒன்றாகும். இந்த நிதி ரூபா.80 மில்லியனையும் உபயோகித்து ஆசிரியர் கள், அதிபர்கள் செயற்றிறனை அதிகரிக்கும் கொள்கை ரீதியாக திட்டமிட்டு செயற்பட்டிருக்க முடியும். அவ்வாறான திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடத்திலுள்ள அறிவு, அதனைக் கற்பிக்கும் முறை பற்றிய அறிவு என்பன தொடர்ச்சியாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்திற்கு இடமில்லை. எனவே இந்நிதியைக் கொண்டு ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடத்திலான அறிவு அதனைப் போதிக்கும் ஆற்றல் என்பவற்றை வளர்க்கக்கூடிய பயிற்சிகளை அத் துறையில் அறிவும் அனுபவமும் உடையவர்கள் மூலமாக வழங்கி கல்வித்துறையை மேம்படுத்த இந்நிதியை திட்டமிட்டு பயன்படுத்தியிருக்க முடியும்.

வட மாகாண மாணவர்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை



உருவாக்கிக் கொடுக்கக்கூடிய ஒரே வளமாக அமைவது கல்வியே ஆகும். வட மாகாணம் ஒரு காலத்தில் கல்வியில் மிக முன்னேறிய நிலையில் இருந்தது. இக் கல்வி வளம் யுத்த காலத்தில் தொடர்ச்சியாக சீரழிக்கப்பட்டு பூச்சியம் என்ற நிலைக்கு வந்தது. ஆயினும் தற்போது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரது அயராத உழைப்பினால் இம் மாகாணத்தில் கல்வி மீண்டும் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. இந் நிலையில் 2015 ஆம் ஆண்டு Finance Commission இனால் வழங்கப்பட்ட ரூபா.80 மில்லியனும் உரிய வகையில் தகுந்த கொள்கை அடிப்படையில் மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் தகுதியை உயர்த்துவதற்குரிய மேற்படிப்புக்கள் பயிற்சிகள் போன்றவற்றிக்கும் கற்பிக்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டிருப்பின் அது மிகவும் வரவேற்கத்தக்காக அமைந்திருக்கும். இதற்குப் பதிலாக இப் பணத்தில் ரூபா .40 மில்லியன் 2 நாட்களில் செலவு செய்யப்பட்டதும் மிகுதி 40 மில்லியன் ஆசிரியர்களின் தளபாட கொள்வனவுக்குப் பயன்படுத்தியதாக கூறப்பட்டமையும் மிகவும் கவலைக்குரிய வகையில் இப்பணம் வீண்விரயம் செய்யப்பட்டதை நிருபிக்கின்றது. எனவே வட மாகாண கௌரவ கல்வி அமைச்சருக்கு எதிரான இக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு இவ் விசாரணைக்குழு வருகின்றது. மேலும் இத் தொகை ரூபா 80 மில்லியனும் எவ்வாறு செலவு செய்யப்ப ட்டது என்பது பூரண கணக்காய்வு செய்யப்பட்டு தவறு இழைத்ததாக காணப்படுபவர்களுக்கு எதிர்க உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இவ் விசாரணை க்குழு பரிந்துரைக்கின்றது.

வட மாகாணத்தில் வாழும் மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பை தம் கரங்களில் ஏந்தியுள்ளவர்கள் கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை வகுக்கும் வேளையில் இம் மக்கள் கடந்த காலத்தில் அனுபவித்த துன்ப துயரங்கள் கடந்து வந்த பாதை என்பவற்றை ஒரு தடவையாவது திரும்பிப் பார்க்க வேண்டும் என்றே இவ்விசாரணைக் குழு கருதுகின்றது.

**3.8 மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னாள் ஜனாதிபதி வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செலவழித்தமை.**

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளித்த வட மாகாண கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தமது அமைச்சின் செயலாளருக்கு கௌரவ ஆளுநர் கூறிய இவ்விடயம் நடைபெற்றதாக கூறியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் கொள்கை அடிப்படையிலான முடிவு எதுவும் வடமாகாண கல்வி அமைச்சரால் எடுக்கப்படாத நிலையில் கௌரவ ஆளுநரினால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்தும் செயலாளர் கௌரவ ஆளுநரின் கோரிக்கைப்படி செயற்பட்டமைக்கு கௌரவ அமைச்சர் பொறுப்புக் கூற வேண்டியதில்லை என இவ் விசாரணைக்குழு கருதுகின்றது.

**3.9 கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் திரு. முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை.**

வட மாகாண கௌரவ கல்வி அமைச்சருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட மேற்படி குற்றச்சாட்டு குறித்து சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் வலயக் கல்விப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதில்லை என்றும் சேவை மூப்பு அடிப்படையில் நியமனம் செய்வது என்றும் தற்போது தென்மராட்சி கல்விப் பணிப்பாளரை பதிற்கடமைக்கு நியமித்துள்ளோம் என்றும் பதில் அளித்தார். இது தவறான நிலைப்பாடாகும். இந் நியமனங்களில் தலையிட கௌரவ அமை ச்சருக்கு எதுவித அதிகாரமும் கிடையாது. அரசியல் யாப்பின் பிரகாரம் கௌரவ மாகாண ஆளுநருக்கே இவ்வதிகாரம் உண்டு. அவ்ர் யாருக்கு அவ்வதிகாரத்தை கையளித்துள்ளாரோ அவரே அரசியல் தலையீடு எதுவும் இன்றி அக்கடமையை செய்ய வேண்டும்

எனவே அமைச்சின் செயலாளர் அல்லது வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இவர்களில் யாருக்கு இவ்வதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளதோ அவர்கள் இந் நியமனத்தை பொறுப்பேற்று அரசியல் தலையீடு எதுவுமின்றி தகுதி உடையவரை இப்பதவிக்கு உடன் நியமிக்க வேண்டும் எனவும் வட மாகாண கௌரவகல்வி அமைச்சர் இந் நியமனத்தில் தலையிடக் கூடாதெனவும் இவ்விசாரணைக்குழு பணிக்கின்றது. மேலும் இக் குற்றச்சாட்டானது எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஒருவிடயம் தொடர்பானதாகையால் இக் குற்றச்சாட்டை விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

முறைப்பாட்டாளர்களது சாட்சி மற்றும், ஆவணச் சாட்சிகளின் படியும், அம்முறைப்பாடுகள் தொடர்பாக சாட்சியமளித்த சாட்சிங்கள், மற்றும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சான்றுகளினடிப்படையிலும் , விவசாய, கமநல சேவை கால்நடை அபிவிருத்தி, நீர்வழங்கல், உணவு வழங்கல் விநியோகத்தில், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக வழக்கு தொடுநரால் பின்வரும் 10 குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

1. வவுனியா மாவட்டத்தில் மூங்கில், மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகத்து சுயதொழிலை முன்னெடுக்க வைக்கும் திட்டம் ஆகியவற்றை கைலஞ்சம் பெறும் நோக்கத்திற்காக நிராகரித்தமை.

2. கண்காட்சிகள், உழவர் விழா எனப் பல விழாக்களை பெருந் தொகைப் பணத்தை செலவழித்து நடத்தியதன் மூலம் மாகாண சபையின் பெரும் அளவிலான நிதியை வீண்விரயம் செய்தமை.

3. மாகாணசபை உறுப்பினர்களினதும் மாகாணசபை ஆலோசனைக்குழுக்களினதும் ஆலோசனைகளைப் பெறாமல் திட்டங்கள் முன்னெடுத்தமை.

4. Beta Powre (Pvt) Ltd.& Joule Power(Pvt) Ltd. நிறுவனங்களிடமிருந்து 2015 ஆம் ஆண்டு முதல் வருடம் ஒன்றிற்கு ரூபா 20 மில்லியன் வீதம் 2016 வரை பெறப்ப்ட்ட ரூபா 40 மில்லியன் பணத்தை மோசடி செய்தமை.

5. பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாணநிதியை மோசடி செய்தமை.

6. i Northern Power என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிநீரில் கலந்த விடயத்திற்கு ஆய்வுக்குழு ஒன்றை நியமித்து அக்குழுவின் அறிக்கை மூலம் நிறு வனத்திற்கு சாதகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை .

ii நிலத்தடி நீர் விடயம் தொடர்பில் எதுவித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர்குழுவை நியமித்து மாகாண சபையின் நிதியை வீண்விரயம் செய்தமை.

7. 2015நவம்பர் மாதம், முன்னெடுக்கப்பட்ட 5 இலட்சம் மர நடுகை திட்டம் தொடர்பில் பண மோசடி செய்தமை.

8. ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் இதுவரையில் நன்கு வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிந்திருந்தும் தவறான செல்வாக்கை செலுத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து சத்தியக்கூற்று அறிக்கையை பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பர்சனத்ததிட்டத்தினை முன்னெடுத்து 36 மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்தமை.

9. i யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் வரை தலைவர்க இருந்த பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோகம் மூலம் பதவி நீக்கம் செய்தமை.

ii 2015 யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவராக முன் அனுபவமில்லாதவரும் அரச அதிபரால் முன் சிபார்சு செய்யப்படாதவருமான இ.சர்வேஸ்வரா என்பவரை குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

10. மருதங்கேணி கடற்றொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015 மார்கழி மரதம் அளவில் பதவி நீக்கம் செய்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

இக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கமளித்து சாட்சியளிப்பதற்கு குற்றம் சாட்டப்பட்ட கௌரவ அமைச்சர் திரு.பொ. ஐங்கரநேசன் அவர்கள் 26.02.2017 காலை 9.30 மணியளவில் நேரடியாக தோன்றி தன்மீது சுமத்தப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டுகளையும் மறுத்ததோடு அதற்கான தனது சார்பு விளக்கத்தையும் தெரிவித்தார். அச் சந்தர்ப்பத்தில் குற்றச்சாட்டு க்களை முன்வைத்த திரு.ஜி.ரி.லிங்கநாதன், திரு.பிறேமதாஸ், திரு.ரஞ்சன் ஆகியோரும் சமூகமளித்து கௌரவ அமைச்சருக்கு எதிராக அவர்களால் முன்வைக்க ப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேலதிக விளக்கங்களை பெறுவதற்கும் அதன் மூலம் விசாரணைக் குழுவுக்கு தெளிவை ஏற்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வட மாகாணசபையின் விவசாய, கமநல சேவை கால்நடை அபிவிருத்தி , நீர் வழங்கல் உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சா ட்டுக்கள் விசாரணையின் பொழுது எண்பிக்கப் பட்டுள்ள னவா என ஆராய்வோம்.

**4.1. வவுனியா மாவட்டத்தில் மூங்கில்,மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகித்து சுயதொழிலை முன்னெடுக்க வைக்கும் திட்டம் ஆகியவற்றை கைலஞ்சம் பெறும் நோக்கத்திற்காக நிராகரித்தமை.**

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களின்படி ஓர் விவசாயி தனது காணியில் வேறு சட்டங்களினால் தடை செய்யப்பட்ட பயிர்களைத் தவிர தான் விரும்பிய பயிரை பயிரிடும் உரிமை உண்டு . ஆனால் நீர்ப்பாசனச் சட்டத்தின் படி அரசினால், மாகாண சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன நீர்த்தோக்கங்களிலிருந்து குறிப்பிட்ட பயிருக்கு நீர் பெற வேண்டுமெனின், குறிப்பிட்ட தகுதி வாய்ந்த அரச, மாகாண உத்தியோகத்தர்களிடமிருந்து அனுமதியைப் பெற வேண்டுமென்ற கட்டுப்பாடு உள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரேசா மே ஆட்சி தொடர ராணி எலிசபெத் அனுமதி

(லண்டன்)

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் அரசு அமைப்பதற்கு போதுமான பெரும்பான்மையைப் பெறத்தவறிய கன்சர்வேட்டிவ் கட்சி பிரதமர் தெரேசா மே தலைமையிலான அரசு கூட்டணி கட்சி ஆதரவுடன் அங்கு மீண்டும் புதிய அரசை அமைக்க இங்கிலாந்து ராணி எலிசபெத் அனுமதி அளித்துள்ளார்.

பிரிட்டன் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், நேற்று முன்தினம் வாக்குகள் எண்ணும் பணிகள் நடந்தன. இதில், பிரதமர் தெரேசாமே தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், ஜெர்மி கார்பின் தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கும் இடையில் போட்டி நிலவியது.



மொத்தமுள்ள 650 இடங்களில் 649 இடங்களுக்கான வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 319 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. தொழிலாளர் கட்சி 261 இடங்களை பிடித்துள்ளது.

இதனால் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை இழந்துள்ளது. அங்கு ஆட்சி அமைக்கும் கட்சி குறைந்த பட்சம் 326 தொகுதிகளில் வெற்றி பெற்றாக வேண்டும்.

இதனால், புதிய அரசை அமைப்பதற்கு பிரதமர் தெரேசாமே இதர கட்சிகளின் ஆதரவை எதிர்ப்பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பிரிட்டனில் தொங்கு பாராளுமன்றம் ஏற்படுவது உறுதியாகியுள்ளது.

ஸ்கொட்லாந்து தேசியவாத கட்சி 35, டெமகரட்டிக் யூனியனிஸ்ட் கட்சி 10 இடங்களையும் , ஜனநாயக ஒருமைப்பாட்டு கட்சி 23 இடங்களையும் கைப்பற்றியுள்ளது. இதனால் டெமகரட்டிக் யூனியனிஸ்ட் கட்சியை சேர்ந்த 10 எம்.பி.க்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க தெரேசா மே தீர்மானித்தார்.

எனினும், பிரிட்டன் நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின்படி அங்கு நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல்களில் அரசு அமைக்க தேவையா ன பெரும்பான்மை கிடை க்காதபட்சத்தில் அந்நாட்டின் ராணி எலிசபெத்திடம் முன் அனுமதி பெற்று கூட்டணி ஆட்சி அமைக்கலாம்.

அதன் அடிப்படையில், பிரதமர் தெரேசா மே பக்கிங்காம் அரண்மனைக்கு சென்று ராணி எலிசபத்தை சந்தித்தார். டெமகரட்டிக் யூனியனிஸ்ட் கட்சியை சேர்ந்த 10 எம்.பி.க்கள் தங்களுக்கு அளித்துள்ள ஆதரவுக் கடிதங்களை ராணியிடம் அவர் அளித்தார்.

இதையடுத்து, அங்கு புதிய கூட்டணி அரசுக்கு தலைமையேற்க பிரதமர் தெரேசா மேவுக்கு ராணி எலிசபெத் அனுமதி அளித்தார்.

இந்த அனுமதியை பெற்ற பின்னர் பக்கிங்காம் அரண்மனையில் இருந்து அந்நாட்டு பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லமான நம்பர் 10,டவுனிங் தெரு இல்லத்தின் வாசலில் நிருபர்களுக்கு பேட்டியளித்த தெரேசா மே, நிச்சயமான நம்பகத்தன்மை கொண்ட ஒரு ஸ்திரமான அரசு நாட்டின் தற்போதைய தேவையாக உள்ளது என்று தெரிவித்தார். (இ)

## அடுத்த ஆண்டு ஜப்பான் மன்னர் பதவி விலகல்

(டோக்கியோ)

ஜப்பான் மன்னர் அகிஹிட்டோ பதவி விலகுவது தொடர்பாக பாராளுமன்றத்தில் சட்ட மசோதா நிறைவேறியது. இதனையடுத்து அடுத்த ஆண்டு அவர் பிறந்த நாளையொட்டி பதவி விலகுவார் என தகவல் வெளியாகி உள்ளது.

ஜப்பான் மன்னர் அகிஹிட்டோ (வயது 83). இவர் வயது மூப்பின் காரணமாகவும், உடல்நலப்பிரச்சினைகள் காரணமாகவும் தன்னால் அரச பதவிக்குரிய கடமைகளை செய்ய முடியவில்லை என்று கடந்த ஆண்டு தெரிவித்தார்.



மேலும் பதவி விலகவும் அவர் விருப்பம் தெரிவித்து நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார்.

ஜப்பானில் கடந்த 200 ஆண்டுகளில் எந்தவொரு மன்னரும் பதவி விலகியது இல்லை. எனவே மன்னர் அகிஹிட்டோ பதவி விலகுவது தொடர்பாக ஜப்பான் அரசு சட்ட மசோதா ஒன்றை தயாரித்து, அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றது.

அதைத் தொடர்ந்து இந்த சட்ட மசோதா, பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மசோதாவுக்கு பாராளுமன்றம் தனது ஒப்புதலை வழங்கி விட்டது.

இந்நிலையில் மன்னர் அகிஹிட்டோவுக்கு அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி 85 வயதாகிறது். அந்த பிறந்த நாளைக் கொண்டாடி விட்டு அவர் பதவி விலகுவார் என தகவல்கள் கூறுகின்றன. (இ)

## பிரதமர் தெரேசா மேவுக்கு ட்ரம்ப்-மக்ரோன் வாழ்த்து



பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் அதிகமான இடங்களை வென்று மீண்டும் ஆட்சியமைக்க இருக்கும் தெரேசா மே-வுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் ஆகியோர்தங்க ளது வாழ்த்துக்களைத் தெரிவித துள்ளனர். (இ)

## அரச குடும்பத்தை அவமதித்தவருக்கு 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை

தாய்லாந்தில் அரச குடும்பத்தை அவமதித்தவருக்கு 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தாய்லாந்தின் இத்தகைய நடவடிக்கைக்கு ஐ.நா.சபை கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தில் அரச குடும்பத்தை அவமதிப்பது பெரும் குற்றமாக கருதப்படுகிறது. அக்குற்றம் புரிவோருக்கு இராணுவ நீதிமன்று கடும் தண்டனை விதித்து வருகிறது.

இந்த நிலையில் விசாய் என்ற 34 வயது இளைஞர் மன்னர் குடும்பத்தை பற்றி அவதூறான கருத்துக்களை 'பேஸ்புக்' சமூக வலைதளத்தில் தெரிவித்து இருந்தார். அதில் தனது போட்டோ மற்றும் வீடியோவையும் பதிவு செய்து இருந்தார்.

அதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட அவர் சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் அரச குடும்பத்தை இழிவு செய்ததாக கூறி அவர் மீது இராணுவ நிதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்று அவருக்கு 10 பிரிவுகளின் கீழ் தலா 10 ஆண்டுகள் வீதம் 70 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. அவர் மன்னிப்பு கோரியதால் தண்டனை பாதியாக குறைக்கப்பட்டது. அதாவது 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தாய்லாந்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியை பிடித்தது. அரச குடும்பத்தை அவமதித்ததாக இதுவரை 100இற்கும் மேற்பட்டோர் மீது குற்றம்சாட்டி கடும் தண்டனை வழங்கி வருகிறது. தாய்லாந்தின் இத்தகைய நடவடிக்கைக்கு ஐ.நா. சபை கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

இச்சட்டத்தை பயன்படுத்தி மனிதாபிமானத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது என எச்சரித்துள்ளது. (இ)

# தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை கட்டார் உடன் நிறுத்த வேண்டும்

## ட்ரம்ப் ஆவேசம்



(வோஷிங்டன்)

தீவிரவாத இயக்கங்களுக்கு மறைமுகமாக கட்டார் உதவுவதாக கூறி, அந்நாட்டுடனான தூதரக உறவை 7 நாடுகள் முறித்துள்ள நிலையில், தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை கட்டார் நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக நிதி உதவி செய்வதாக குற்றம்சாட்டி கட்டாருடன் ஆன தூதரக உறவை சவுதி அரேபியா, பக்ரைன், எகிப்து,' ஏமன், அமீரகம், லிபியா அரபு நாடுகள் துண்டித்தன. மேலும், மாலைதீவுகளும் இந்த கூட்டணியில் இணைந்துள் ளது.

இந்நிலையில், வெள்ளை மாளிகைக்கு இத்தாலி நாட்டின் ஜனாதிபதி லாவுஸ் ஜோஹான்னிஸ் வருகை தந்துள்ளார்.

அவருடன் பேச்சு வார்த்தை நடத்தியபின் ஜனாதிபதி ட்ரம்ப் செய்தி யாளர்களை சந்தித்தார். அப்போது, கட்டார் விவகாரம் தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர்.

அதற்கு பதிலளித்த ட்ரம்ப் கட்டார் தவறுதலாக மிக அதிகளவிலான நிதியை தீவிரவாதத்திற்கு அளிக்கிறது. இதனை கட்டுப்படுத்த பல்வேறு கூட்டங்களில் பேசப்பட்டது. கட்டார் தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை நிறுத்த் வேண்டும். வெறுப்புணர்வை விதைப்பதை நிறுத்த வேண்டும்" என பேசினார்.'

மேலும், " தீவிர வாதத்திற்கு எதிராக அனைத்து நாடுகளும் ஒன்றிணைய நான் அழைப்பு விடுக்கிறேன். சகிப்புத்தன்மையை கொல்பவர்களை தடுக்க அழைப்பு விடுக்கிறேன்.

மனிதர்களே மனிதர்களை கொல்லும் கொடூர பயங்கரவாதத்திற்கு எதிராக அனைவரும் ஒன்று கூட அழைப்பு விடுக்கிறேன் எனவும் தெரிவித்தார். (இ)

# முதல்வருடன் அய்யாக்கண்ணு சந்திப்பு; விவசாயிகள் போராட்டம் நேற்று வாபஸ்



முதலமைச்சரை நேற்றுக் காலை அய்யாக்கண்ணு தலைமையில் விவசாயிகள் சந்தித்துப் பேசினர். அதன்பிறகு நிருபர்களிடம் பேசிய அய்யாக்கண்ணு போராட்டத்தை தற்காலிகமாக வாபஸ் பெறுவதாக அறிவித்தார்.

விவசாய கடன் தள்ளுபடி, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம், நதிநீர் இணைப்பு திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக தேசிய-தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் டில்லியில் போராட்டம் நடத்தினார்.

அப்போது பல்வேறு கட்சி தலைவர்கள் அவர்களை சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். கடைசியாக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி சந்தித்து கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக கூறி போராட்டத்தை வாபஸ் பெறக் கேட்டுக் கொண்டார். இதை ஏற்று விவசாயிகள் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

இந்த நிலையில் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததாலும் மத்தியப் பிரதேசத்தில் விவசாயிகள் மீதான துப்பாக்கிச்சூட்டை கண்டித்தும் அய்யாக்கண்ணு மீண்டும் விவசாயிகளை திரட்டி சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் போராட்டத்தை தொடங்கினார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பொலிஸ் அதிகாரிகள் விவசாயிகளை சந்தித்து கோரிக்கைகள் தொடர்பாக முதலமைச்சரை சந்தித்துப் பேச ஏற்பாடு செய்வதாக கூறினார்கள்.

அதன்படி நேற்றுக்காலை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை அய்யாக்கண்ணு தலைமையில் விவசாயிகள் சந்தித்துப் பேசினார்கள்.

அதன்பிறகு நிருபர்களிடம் பேசிய அய்யாக்கண்ணு போராட்டத்தை தற்காலிகமாக வாபஸ் பெறுவதாக அறிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர் காவுவண்டி விபத்து; சாரதி பரிதாபமாக உயிரிழந்தார்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து நீர்கொழும்பில் உள்ள அங்கொடை மனநோய் சிகிச்சை வைத்தியசாலைக்கு நோயாளரைக் கொண்டு சென்ற நோயாளர் காவு வண்டி விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே அதன் சாரதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மனநிலை பாதிக்கப்பட்ட நோயாளர் ஒருவரை, மேலதிக சிகிச்சைக்காக நீர்கொழும்பில் உள்ள அங்கொடை மனநோய் வைத்தியசாலைக்கு வைத்தியர் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் சகிதம் நோயாளர் காவு வண்டி மூலம் கொண்டு செல்லும் போது இவ் விபத்து நடைபெற்றுள்ளது.


நோயாளர் காவு வண்டி நீர்கொழும்பு பிரதேசத்தை அண்மித்துக் கொண்டிருந்த போது விபத்து நேர்ந்துள்ளது.

ஏனையோர் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இதில் கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான யோகராஜா - தபேந்திரன் (வயது - 47) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டுவரவும் காயமடைந்தவர்களுக்கு உதவும் பொருட்டும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் நெறிப்படுதலில் உதவிக் குழுவினர் நீர்கொழும்பிற்கு விரைந்துள்ளதாகவும் வைத்தியசாலைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-312)

# வவுனியாவில் நீடிக்கும் வரட்சி காலநிலையால் விவசாய நிலங்கள் நீரின்றி கருகிப் பாதிப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் தொடரும் கடும் வரட்சியான காலநிலை காரணமாக மக்கள் குடி நீரைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் விவசாய நடவடிக்கைகளில் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த காலபோக நெற்செய்கைக் காலப்பகுதியில் இருந்து கடுமையான வரட்சியான காலநிலை நீடித்து வருகிறது.

இதனால் விவசாயிகளின் தோட்டச் செய்கை நடவடிக்கைகள், சிறுபோக நெற்செய்கை என்பன பாதிப்படைந்துள்ளதுடன் அவை கடுமையான வெப்பம் காரணமாக கருகிய நிலையில் காட்சியளிக்கின்றன.

இதனால் மக்கள் நாளாந்த குடும்பச் செலவுகளை போக்குவதற்குக்கூட கஷ்டப்பட்டுள்ளனர்.

விவசாயத்துடன் இணைந்ததாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் மக்கள் தமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இன்றி அவதிப்படுவதையும், வரட்சி காரணமாக மைதானம் போன்று காட்சியளிக்கும் குளப்பகுதிகளை கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளாக பயன்படுத்துவதையும் அவதானிக்க முடிகிறது.

இதேவேளை வவுனியாவின் பல பகுதிகளில் மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரத்து 507 குடும்பங்களைச் சேர்ந்த 85 ஆயிரத்து 771 பேர் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். (2-250)






முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்திருக்கும் கருவேலன் கண்டல்பாலம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலை வர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்த னர். (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கிளிநொச்சி கரைச்சிபிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 8 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நீண்ட காலமாக செயலிழந்த நிலையில் இருந்த தொழிற் சங்கத்தை மீளவும் இயங்கவைக்கும் நோக்கில் புதிய நிர்வாகத்தெரிவுகள் நடைபெற்றன. இதன்போது தலைவராக அ.காந்தி, உபதலைவராக கு.புஸ்பாகரன், செய லாளராக சி. ஜெயதீபன், உப செயலாளராக சூ. தனீசியஸ், பொருளாளராக வ. சிவகாஞ்சா உள்ளடங்கலாக 7 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவாகி னர். (2-272)

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் விழா ஏற்பாடுகள் பூர்த்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து எடுத்து வரப்படும் மடைப்பண்டப் பொருட்களை அம்மனுக்கு வைத்து தீர்த்தம் கொண்டு விளக்கேற்றி தொடர்ந்து பூஜை வழிபாடுகள் நடைபெற்ற நிலையில் இரவு 10 மணிக்கு பொங்கல் விழா நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையின் தலைவர் முருகேசு - குகதாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து கள்ளப்பாடு தீர்த்தக் கரைக்குச் சென்று கடலில் தீர்த்தம் எடுத்து வந்து விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து 7 நாட்களாக அந்த தீர்த்தத்தில் விளக்கேற்றிய நிலையில், 8 ஆம் நாளாகிய நாளை திங்கட்கிழமை விநாயகர் ஆலயத்தில் இருந்து மடைப் பண்டங்களுடன், தீர்த்தத்தையும் அதிகாலை 3 மணிக்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு எடுத்து சென்று மடைபரப்பி தீர்த்தம் மூலம் விளக்கேற்றி பூஜை வழிபாடுகள் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து பூஜைகள் இரவு 10 மணி வரை நடைபெற்றதன் பின்னர் பொங்கல் திருவிழா நடைபெறவுள்ளது. போக்குவரத்து சேவைகளை வடக்கு மாகாண சபையின் கீழுள்ள அரச மற்றும் தனியார் துறையினர் பேருந்துக்களின் சேவைகளை நாடு தழுவிய ரீதியில் ஏற்படுத்துகின்றனர்.

இதேவேளை, பாதுகாப்பு கடமைகளை முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட சீருடை தரித்த மற்றும் சிவில் உடை அணிந்த ஆண்/பெண் பொலிஸார் கடமையாற்றவுள்ளனர். இவர்களுக்கு உதவியாக பக்தர்கள் அதிகமாக கூடும் இடங்களில் 20 இற்கு மேற்பட்ட சி.சி.ரி.வி கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பு பணி நடைபெறவுள்ளது.

மற்றும் மருத்துவம், சுகாதார போன்ற வசதிகளை முல்லைத்தீவு மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் நெறிப்படுத்துகின்றனர்.

அத்துடன் குடிநீர் வழங்கல் உட்பட பராமரிப்பு போன்ற பல்வேறு சேவைகளை கரைதுறைப்பற்று பிரதே சபையினர் மேற்கொள்கின்றனர்.

அம்மன் ஆலய வழிபாட்டுக்காக இம்முறை வெளிநாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட அடியார்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் தங்க நகைகளை அணிந்து வருவதை முற்றாக தவிர்த்துக் கொள்வதுடன், சிறு குழந்தைகள், சிறுவர்கள் தொடர்பில் கண்காணிப்புடன் இருக்குமாறும் ஆலய பரிபாலன அறங்காவலர் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (2-15)

# அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்றுமணல் வாகனங்களில் கடத்தப்பட்டது

## சந்தேகத்தில் மூவர் கைது

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள அம்பகாமம் காட்டுப் பகுதியில் உள்ள ஆற்று மணலை அனுமதிபத்திரத்திற்கு முரணான வகையில் ஏற்றிப் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றையும், பார ஊர்தி ஒன்றையும் விசேட சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றி மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

விமானப் படையினர் வசமுள்ள அம்பகாமம் காட்டுப் பகுதி ஊடாக இரணைமடு குளத்திற்கு செல்லும் கனகராயன் ஆற்றில் இருந்து சட்ட விரோதமாக சுற்றுச் சூழலைப் பாதிக்கும் வகையில் ஆற்று மணல் ஆகழ்ந்து எடுக்கப்பட்டு தினசரி 50இற்கு மேற்பட்ட வாகனங்களில் கடத்தப்பட்டு வருவதாக பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் இணைந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மட்டத்திலான அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும்மற்றும்மாங்குளம்பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் கலந்துரையாடல் கூட்டத் தின் போதும் முன்வைத்த னர். இக்குற்றச்சாட்டின் பேரில் மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேரோவின் உத்தரவுக்கமைய விசேட பொலிஸ் அணியினரும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் சட்டவிரோதமான குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்தி வருவதுடன், குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர் களையும் கைது செய்து வரு கின்றனர்.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை விசேட சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த வாகனங்கள தடுத்து நிறுத்தி சோதனையிட்டனர். இதன்போது சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர், பார ஊர்தி என்பவற்றைக் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் இருவர் உட்பட 3 பேரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களை மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன் கைதான சந்தேக நபர்களையும் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைத்துள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

# மோ.சைக்கிள்-வான் விபத்து; இருவர் காயம்




மோட்டார் சைக்கிள் மற்றும் சிறிய வான் என்பன மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர். நேற்று காலை இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா- பூந்தோட்டம் வீதியில் பூந்தோட்டம் சந்திக்கு அருகில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த சிறிய வான் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

வவுனியா, பூந்தோட்டம் வீதியில் எதிர் எதிரே பயணித்த

# இலவச வழிகாட்டல் வகுப்புக்கள்

அரச போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கு இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வகுப்புக்கள் அனைத்தும் நாளை 12 ஆம் திகதி திங்கட்கிழமையும் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமையும்16 ஆம்திகதிவெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையும் நடைபெறும். பொது உளச்சார்பு துறையில் நீண்ட கால அனுபவம் உள்ள விரிவுரையாளர் குழாமினால் மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு செய்முறை விளக்கங்களுடன் வழிகாட்டல் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்திலேயே வகுப்புக்கள் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. அரசாங்கம் 2017 ஆம் ஆண்டை வறுமை ஒழிப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது. அதன் கீழ் விசேட திட்டமாக அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான இலவச வகுப்புக்களை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் நடத்தி வருகின்றது. (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நன்றியை எதிர்பார்க்காதிருக்கக் பழகிக் கொள்வோம். எப்போதாவது அது கிடைக்கும் போது அது எதிர்பாராத பரிசாகும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தீவகத்தின் அபிவிருத்தியில் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்

இராணுவ நடவடிக்கை காரணமாக 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தீவகத்திலிருந்து மக்கள் வெளியேறியிருந்தனர்.

கடல் கடந்த தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு தவிர்ந்த தீவகத்தின் ஏனைய இடங்களில் இருந்து ஒட்டு மொத்தமாக மக்கள் வெளியேறியதன் பின்னர்,

1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பிற்பாடு தீவகத்துக்குச் சென்று மக்கள் தங்கள் இடங்களைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

தீவகத்தில் மக்கள் மீளக் குடியிருப்பதற்கு தடை இருக்கவில்லையாயினும் ஏற்கெனவே அங்கிருந்த மக்கள் மீளவும் தீவக மண்ணில் குடியிருப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை.

இதற்குக் காரணம் இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் தீவகம் இயல்பாகவே ஒரு பயங்கரமான சூழல் கொண்ட பிரதேசமாக மாறியிருந்தது.

இடம்பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினரே மீளக்குடியமர்ந்தனர். அவ்வாறு குடியமர்ந்தவர்களின் வாழ்வும் முன்னேற்றகரமாக அமையவில்லை.

இந்நிலையில், மாணவி வித்தியாவின் படுகொலை தீவகத்தின் பாதுகாப்பின்மையை முழு உலகத்துக்கும் எடுத்துக் காட்டியது.

மீள் குடியமர்வு தொடர்பில் அடிக்கடி குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகள் தீவகத்தின் மீள் குடியமர்வு பற்றியோ தீவக மக்களின் அடிப்படைத் தேவைகள், பாதுகாப்பு என்பன குறித்தோ கவனம் கொள்வதாகத் தெரியவில்லை.

இதன்காரணமாக தீவக மக்கள் இன்று வரை பல்வேறு கஷ்டங்கள் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

தீவகத்தில் மீள்குடியமர்ந்த மக்கள் அங்கு தொடர்ந்து இருக்க வேண்டுமாயின், தீவகத்தின் அபிவிருத்தி பற்றி அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

ஆனால் தீவகத்தின் அபிவிருத்திக்கு தமிழ் அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகளும் தாராளமாகவே இருக்கின்றனர்.

கல்வியியல் கல்லூரியை தீவகத்தில் அமையுங்கள். ஆசிரியர் பயிற்சி கலாசாலையை தீவகத்தில் நிறுவுங்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒரு பீடத்தையாவது தீவக மண்ணுக்குக் கொண்டு வாருங்கள் என்றால் எதுவும் இல்லை.

சரி, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்குட்பட்டதாக அமைக்கப்படவுள்ள சிறுவர் வைத்தியசாலையையாவது மண்டைதீவில் நிர்மாணியுங்கள் என்றால் அதற்கும் மனம் இல்லை.

இதுவே நிலைமை என்றால் தீவகத்தை அபிவிருத்தி செய்வது எப்படி? தீவகத்தின் நிலச் சொந்தக்காரர்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வெளிநாடுகளிலுமாக இருக்க,

வெற்றுக் காணிகள் எருக்கலைக்கும் விடத்தல் மரத்துக்கும் இடம்கொடுத்து தீவக மண்ணைப் பயங்கரமாக்கியுள்ளன.

பற்றைகளை வெட்டுங்கள் என்று சொல்லவும் அதைச் செய்விக்கவும் ஆளில்லை எனும் போது எவரும் கவனிப்பாரற்ற இடமாகவே தீவகம் இன்று வரை உள்ளது.

# வெள்ளம், மண்சரிவு குறித்து ஆராய்ந்து பல திட்டங்களை ஜப்பான் பரிந்துரை

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நேற்று கையளிப்பு

(கொழும்பு)

அனர்த்தம் ஏற்படும் போது அதனை மேலும் பாதுகாப்பான நெகிழ்திறன் கொண்ட நாட்டை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்த வேண்டும் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகனுமா தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய குழு வெள்ளம் மற்றும் மண்சரிவுகளுக்கான காரணத்தை ஆராய்ந்ததுள்ளதோடு, பல திட்டங்களையும் பரிந்துரைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் தென் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட ஜப்பானிய அனர்த்த நிவாரண நிபுணர் குழு அதன் இறுதி அறிக்கையை நேற்றைய தினம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் வைத்து அரசாங்கத் தரப்பினரிடம் கையளித்தது.

இதன்போது அரசாங்கத்தின் சார்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஸன யாப்பாவிடமும் நீர்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜேயமுனி சொய்ஸா மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. அபேகோன் ஆகியோர் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதோடு, ஊடக சந்திப்பு ஒன்றும் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமா.

“ஜப்பானிய குழு வெள்ளம் மற்றும் மண்சரிவுகளுக்கான காரணத்தை ஆராய்ந்தது. பல திட்டங்களையும் பரிந்துரைத்தது.

அனர்த்தம் இடம்பெற்றுள்ள இந்த சந்தர்ப்பத்தை நாம் மேலும் பாதுகாப்பான நெகிழ்திறன் கொண்ட இலங்கையை கட்டியெழுப்பு வதற்காக பயன்படுத்த வேண்டும்.

அனர்த்தம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உட்கட்டுமானங்களை மேம படுத்துவதானது மீண்டுமாக சிறப்பாக கட்டியெழுப்புதல் என்ற கருத்திட்டத்தை மையப்படுத்தியதாகும்.

இந்த கருத்திட்டமானது ஐ.நாவின் அனர்த்த முகாமைத்துவ மாநாடுகளில் வலியுறுத்தப்படுவதாகும். உலகெங்கிலும் இந்த கருத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றது.

அந்த வகையில் நாம் ஒத்துழைப்பதுடன் ஒவ்வொரு நாடும் அனர்த்த தவிர்ப்பு முகாமைத் துவத் திட்டங்களில் முதலிடுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

இதன்மூலமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல அனர்த்தங்களைத் தவிர்க்க எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பானதும் நெகழ்திறன் கொண்டதுமான நாட்டை பெற்றுக் கொடுக்க முடியும் என குறிப்பிட்டார். (செ)

## பரிசளிப்பு நிகழ்வும் சிறப்பு பட்டிமன்றமும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்-கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) இந்து இளைஞர்கள் நடத்தும் பரிசளிப்பு **நிகழ்வும் சிறப்பு பட்டிமன்றமும்** இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணியளவில் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

அ.அருள்சோபன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் சொ.லோகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பே.தனபாலசிங்கம், பிரதி அதிபர் பி.என். சுதர்சன், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் உப தலைவர் தி.பிரதாபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் **தற்கால எமது சமூகத்தை மேம்படுத்துவதில் பெரிதும் முன்னிற்பது ஆன்மீகமே! அறிவியலே!** எனும் தலைப்பில் வவுனியா தமிழ்ச் சங்க ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன் நடுவராக பங்குபற்றும் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. (செ)

## நாசமாக்கப்படும் தொல்பொருள்

சிகிரியாவில் மரணம் மற்றும் தொல்பொருள் கொளைகள் இடம்பெற்று வருவதாக மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து தொல்பொருள் மற்றும் புராதன இடங்களை பாதுகாப்பதற்கு அனைத்து அரச அதிகாரிகளையும் உள்ளடக்கிய உலக உரிமங்கள் தொடர்பான குழுவொன்றை ஸ்தாபிக்கவுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

சிகிரிய புராதன ஸ்தானங்களில் கண்காணிப்பு சுற்றுலாவை மேற்கொண்டிருந்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இந்த விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளார். (செ)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

பிருகு முனிவரே தங்களைப் போன்ற தவசிரேஷ்டர்களின் பாதத்தூளி பட்டு என் உடல் இன்று புனிதமானது. ஆனால் மிருதுவான உங்கள் கால் கடினமான என் உடலைத் தாக்கியதால் உங்களுக்கு எவ்வளவு வலி உண்டாகியதோ? உங்கள் காலைப் பிடித்துவிடுகிறேன் கூறியபடி அவர் காலைப் பிடித்தபடி ஏறிட்டு நோக்கினான்.

இன்முகம் மாறாமல் சுவாமி நீங்கள் இங்கு வந்த காரியத்தை நான் அறிவேன். உங்கள் ஐயம் அகன்றிருக்கும் என்று கருதுகிறேன் என்றும் கூறினான்.

பிருகு முனிவர் ஆனந்தப்பட்டார். மாலனை உதைத்ததற்காக மனம் வருந்தினார். மன்னிப்புக்கோரினார். பின் நாராயணனிடம் மும்மூர்த்திகளில் சாந்தமூர்த்தி யார் என்பதை அடியேன் உணர்ந்தேன். இனி அகிலத்தில் யாகம் வளரும். அவிர்பாகம் உனைவந்து அடையும் என்று கூறி வந்த வழி திரும்பினார். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மறறும்பராமரிப்புவேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ். பிரதேசத்தில் வதிரி, இரும்பு மதவடி, சக்களாவத்தை, தேவரையாளி, மனோகரா, திக்கம், திக்கம் சித்திவிநாயகா கோவிலடி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கன்பிட்டி, மாவிலங்கேணி, பிடாரிக்குளம், அளவக்கை, வாழ்க்கைப் பட்டான்கண்டல், பள்ளஙகோட்டை, நானாட்டான், சாளம்பன், நாகசெட்டி, எருவிட்டான், அறுகுக்குன்று, நொச்சிக்குளம், அச்சங்குளம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மினதடைப்படும் (இ-9)

## சாஸ்திரங்கள்

“சர்வ மங்கள மாங்கல்யே
சிவே சர்வார்த்த சாதகே
சரண்யேத் ரயம் பிகேதேவி
நாராயணி நமோஸ்துதே”

இந்த அம்பாள் தோஸ்திரத்தை தினமும் பக்தியுடன் ஜெபித்து வந்தால் விரைவில் திருமணத் கைகூடி வரும். தள்ளிப் போய்க்கொண்டிருந்த திருமணம் நல்லபடியே நடக்கும். திருமணமாகாத பெண்கள் எலுமிச்சை மூடி விளக்குகளை வீட்டில் ஏற்றக் கூடாது. ஆனால் கோயிலில் எலுமிச்சை மூடி விளக்குகளை ஏற்றலாம்.

-விரைவில் திருமணம் கூடிவர

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சந்திரமானம், சௌரமானம் என்றால் என்ன?**

ஜேஷ்ட வைத்து மாதம் பிறப்பது சௌரமானம் தமிழ் வருடப்பிறப்பு.

சந்திரனை வைத்து மாதம் பிறப்பது சந்திரமானம் தெலுங்கு வருடப் பிறப்பு.

**ஆனி மாதத்தில் திருமணம் கூடாது ஏன்?**

ஜேஷ்ட புத்திரிக்கும் ஜேஷ்ட புத்திரனுக்கும் ஆனி மாதத்தில் திருமணம் செய்யக்கூடாது என்று விதிசாஸ்திரத்தில உள்ளது. சந்திர மானமான ஆனி மாதத்தில் இவர்கள் பிறந்திருந்தால் மட்டுமே இவ்விதி பொருந்தும் இவ் விதியை திரிஜேஷ்டை என்று அழைப்பர். (தொடரும்)

கடியுண்டவருக்கு தொற்றுக்கு ஏதுவான நிலை இருப்பின் ARV தடுப்பூசியினை எவ்வளவு விரைவாக வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக வழங்கவும்.

நோயற்ற வளர்ப்பு நாய், பூனைகள் வீட்டைச் சந்தோசமாக்கும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரான்லி அணியை வீழ்த்தியது முள்ளியவளை வித்தியானந்தா





யாழ்.ஸ்ரான்லி கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் முள்ளியவளை வித்தியானந்த பழைய மாணவர் அணிக்கும் இடையே கடந்த 8 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஒருநாள் துடுப்பாட்டப் போட்டியில் 21 ஓட்டங்களால் முள்ளிய வளை வித்தியானந்த பழைய மாணவர் அணி வெற்றியீட்டியுள்ளது. (க-302)

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III -2017



சிறிலங்கா கிரிகெட் சுற்றுப் போட்டியில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் வரிசையில் 32 ஆவது போட்டியில் அண்மையில் யாழ். மத்திய கல்லூரி ம்மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் அணி ஸ்ரான்லி அணியை 107 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 50 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றனர். ஜேம்ஸ்-20, அவன்ராஜ் -52, கிருபா -35, டார்வின்-87, மயூரன் -28 ஓட்டங்களை பெற்றனர். துஸ்யந்தன்-1, விதுஸன்-6, மதன், கலைச்செல்வன் தலா -1 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 35 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களை பெற்றது. சுதர்ஸன் -13, மதன் -34, ரி.பிரசாந் -23, ஐ.பிரசாந்-26 , விதுஸன் - 13 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெரிக் -1, ஜேம்ஸ்-01, வதுஸனன் -1, டார்வின் -2, சலன்ராஜ்-2, பிரி யலக்ஜன்-1, மயூரன்-1இலக்கினை கைப்பற்றினர். (க)

## சிவானந்தா , கலைமதி அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் அல்வாய் நண்பர்கள் வி.க். நடத்தி வருகின்ற 9 நபர் கொண்ட உதைபந்தாட்டசுற்றுப் போட்டியின் 2017.6.9 அன்று நடைபெற்ற முதலாவதாக நடைபெற்ற போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நவிண்டில் கலைமதி வி. கழகம் மாலுசந்தி மைக்கல் வி.கழகத்தை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (க)


# பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

**English Medium ( Gr 1-11) All Subject 12 மாதங்களுக்கு**

**தொடர்புகள் : கௌணிய, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை**

## தகைமைகள்

1. 18 தொடக்கம் 35 வயது வரை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் திறமை சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் படித்திருக்க வேண்டும்.
3. நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தெமட்டக்கொட, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை ஆகிய இடங்களில் 10 மாதங்கள் பயிற்சி கொடுக்கப்படும்.
4. பயிற்சிக் காலத்தில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை உள்ள தனியார் பாடசாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும். (English medium)
5. உங்களது விண்ணப்பத்தை பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தராதரப்பத்திரம்

குறிப்பு : பிரதி எடுத்து அத்துடன் 9x4 வடிவமுள்ள தபாலுறையில் 45 ரூபா முத்திரையும் தபாலுறையின் மேல் மூலையில் 1 தொடக்கம் 11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும். பாடங்களை பயிற்றுவிக்க ஆசிரியர்களை சேர்த்து பயிற்சி கொடுத்தல் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் ரூபா 22500+ Allowance ஐ கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்

## தகுதி

- ஒரு நாள் செய்கைப்பயிற்சி வகுப்பு தெமட்டக்கொடை காரியாலயத்தில் நடைபெறும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களில் ஆங்கில பயிற்சிகொடுக்கப்படும் மற்றும் கணனி கற்கைநெறி (இலவசமாக Diploma)
- பயிற்சி கிழமையில் 5 நாட்கள் வீதம் 1 வருடத்திற்குக் கொடுக்கப்படும் பயிற்சியின் பின்னர் தகுதியானவர்களுக்கு அப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் வேலை பெற்றுக்கொடுக்கப்படும்.
- (போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 7.30 தொடக்கம் 4.30 வரை ) வேலை நாட்களாகும்.

BLOOMING BUDS INTERNATIONAL E, CAMPUS
TEACHER TRAINING SCHOOL- DEMATAGODA, COLOMBO-9
DIPLOMA CERTIFICATE AWARDING CEREMONY - 2016/2017



சிங்கள கல்வி மற்றும் கணனி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா சுயத்திறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

B.B.I E Campus
Teacher Training School
178 Thavadi Road
Sudumale South
Sudumale
Jaffna

**Hot Line 0715669641**

பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி
Officer B.B.I E campus, No.40, Kandy Road.
Dalugama kelaniya

T.P. 077 152 9731/ 021 225 6641/ 011 291 2641


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.ஒரு கோடி பெறு...

காங்கேசன்துறை கடற்படை முகாமை சேர்ந்த கடற்படையினர் கடற்பரப்பிலும் கடற்கரையை அண்டிய பகுதிகளிலும் வழமையான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதன்போது தொண்டைமானாறு கடற்கரையை அண்டிய பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் இருவர் நடமாடுவதை அவதானித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த இருவரிடமும் கடற்படையினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இதன்போதே இருவரிடமும் இருந்து கேரள கஞ்சாவினை கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவானது 56.5 கிலோ கிராம் நிறையுடையதாக காணப்பட்டதுடன் அவை 2.2 கிலோ கிராம் நிறையுடையதாக 20இற்கும் மேற்பட்ட பொதிகளாக பொதியிடப்பட்டிருந்ததாகவும் காங்கேசன்துறை கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் இவ் கஞ்சா பொதிகளானது இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக இலங்கைக்கு கடத்தி கொண்டுவரப்பட்டதாகவும் அவற்றின் மொத்த பெறுமதி இலங்கை மதிப்பில் ஒரு கோடி ரூபாய்களாக இருக்கலாம் எனவும் கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவுடன் கைதான இரண்டு சந்தேகநபர்களையும் அச்சுவேலி பொலிஸாரிடம் காங்கேசன்துறை கடற்படை அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர். இதேவேளை நேற்றுமுன்தினம் காலை காங்கேசன்துறை கடலில் மிதந்துவந்த பொதியொன்றில் இருந்து ஹேரோயின் போதை பொருள் கடற்படையினரால் மீட்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-4,60)

## தமிழ், முஸ்லிம்...

ள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார், பொன்னம்பலம்,

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் முஸ்லிம் தலைவர்களும் துணைபோய்க் கொண்டு இருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தின் காயத்திரி கிராமத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் மக்கள் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வட-கிழக்கு இணைப்பு என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் தலைமைகள் தயாரில்லை. காரணம் முஸ்லிம் மக்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் காணப்படுகின்ற போதிலும் கிழக்கு மாகாணத்தில் தான் முஸ்லிம் மக்கள் விகிதாசாரத்தில் கூடுதலாக காணப்படுகின்றனர்.

இதனை விட்டுக் கொடுக்க அவர்கள் ஒரு காலத்திலும் தயாராகவில்லை. இதனை விளங்கிக கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

தமிழர்கள் வட-கிழக்கு இணைப்பை கோருகின்ற நிலையில் இந்த சூழ்நிலையை விளங்கிக் கொண்ட சிங்கள தலைவர்கள், கிழக்கில் முஸ்லிம் மக்களுடன் இணைந்து கொண்டு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களை பலவீனப்படுத்தி வருகின்றனர்.

இந்த சிங்கள பேரினவாத சக்திகளின் சூழ்ச்சியில் சிக்காது தமிழ்,முஸ்லிம் மக்களின் தலைமைகள் சிந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளது.

தமிழ் மக்களை பொறுத்த மட்டில் எங்களது தாயகக் கோட்பாட்டை கைவிட முடியாது. அவ்வாறு கைவிட்டால் தமிழ் மக்களின் இருப்பை கைவிடுவதாகதான் இருக்கும்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் தடையாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களை தவிர்த்து தமிழ் பிரதேசங்களை ஒன்றிணைக்க வேண்டும். யுத்த காலத்தில் அரசாங்கம் முஸ்லிம் மக்களுடன் இணைந்து தமிழ் மக்களை பலவீனப்படுத்தியது.

தற்போது முஸ்லிம் மக்கள் பொருளாதாரத்திலும் இன விகிதாசாரத்திலும் உயர்ந்த நிலையில் காணப்படுகின்ற நிலையில் இன்று முஸ்லிம் மக்களை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனை தமிழ்,முஸ்லிம் புத்திஜீவிகள் விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும் என கஜேந்திரகுமார் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (செ)

## ஆசிரியர் நியமன...

வித்துள்ளார். வடபகுதியில் ஒரு காலத்தில் கணிதம், விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் புகழ் பூத்த ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களின் வழிகாட்டலின் கீழ் பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவியர் திறமைச் சித்திகளைப் பெற்று பொறியியல், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் வடபகுதி முன்னணியில் திகழ்ந்து நின்றது. இன்றோ கணித ஆசிரியர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள், தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தென்மராட்சியில் இருந்தும் கடந்த வருட பல்கலைக்கழக புகு முகத் தேர்வில் ஒரு மாணவ மாணவியர்கூட மருத்துவம் மற்றும் பொறியியல் துறைக்கு தெரிவாகவில்லை என்பது மனவருத்தத்திற்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.இந்து கல்லூரியில் கணித, விஞ்ஞான, தொழில் நுட்பபட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கல்வி நடவடிக்கைகளில் விரைந்து மாற்றங்களைக் கொண்டு வரவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. இதற்கு ஒரு உதாரணமாக வட மாகாணத்தில் நீண்டகாலமாக க.பொ.த உயர்தர தொழில்நுட்ப பாடங்களான உயிரியல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படாமையைக் கூறலாம். அந்நிலைமையைமாற்றவே இன்றைய நிகழ்வு நடக்கின்றது. இன்றைய தினத்தில் புதிதாக நியமனம் பெறுகின்ற ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கூடிய தமது சேவைகளை எமது மாணவ மாணவியர்களுக்கு வழங்குவார்கள். அதன் மூலம் கூடுதலான மாணவ மாணவியர்கள் க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் சிறந்த பெறுபேறுகளை பெறுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். ஒரு ஆசிரியர் எனப்படுபவர் மாணவர்களுக்குப் பாடத்தை மட்டும் போதிப்பவராக இல்லாது அம் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக உதாரண ஒழுக்க சீலராக விளங்க வேண்டும். அப்போது தான் ஒரு பண்பட்ட மாணவச் சமுதாயம் உருவாக முடியும்.

பாடசாலை மட்டங்களில் தற்போது நடைபெறுகின்ற மாணவர்களின் ஒழுக்கக் குறைவான செயல்கள் மற்றும் மாணவர்களுக்கு கல்வியில் கவனமின்மை போன்ற விடயங்கள் பற்றி பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் உரையாடும் போது அவர்கள் தமக்கு அதில் பங்கில்லை போலவும் இக் குறைபாடுகள் இடம்பெறுவதற்கான காரணங்கள் பாடசாலை வளாகத்திற்கு அப்பாற்பட்ட செயல்களே என்பது போலவும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். இது முற்றிலுந் தவறு. ஒரு சிறந்த ஆசிரியர் தமது மாணவர்கள் மீது எப்பொழுதும் அவதானத்துடன் இருக்க வேண்டும். அவர்களை சரியான பாதையில் வழிகாட்டுபவர்களாக அவர்கள் செயற்பட வேண்டும். இற்றைக்கு 40-50 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிரியர்கள் ஏனைய மாணவர்களின் உதவியுடன் வீடு வீடாகச் சென்று பாடசாலைக்கு வராத மாணவர்களைப் பற்றி விசாரித்து அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வந்து அவர்களுக்குக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் அறிவுரை வழங்கி அன்புடன் அரவணைத்து உடற் தூய்மையை கற்றுக் கொடுத்து ஒழுக்கத்தைப் போதித்து கல்வியில் நாட்டமுறச் செய்தார்கள். அவ்வாறு போதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் பிற்காலத்தில் சிறந்த கல்விமான்களாகத் திகழ்ந்ததை நாம் அவதானித்திருக்கின் றோம். மாணவர்களுக்கு கற்பித்தல் மட்டும் உங்கள் கடமையாக எண்ணாது கல்வியில் அவர்களுக்கு நாட்டமும் பற்றும் ஏற்படத்தக்க வகையில் அவர்களுக்கு கல்வி புகட்ட நீங்கள் முன்வர வேண்டும். இன்று புதிய நியமனத்தை பெறுகின்ற இக் கணித விஞ்ஞான தொழில் நுட்ப ஆசிரியர்கள் அவர்களுக்கு எந்தெந்தப் பாடசாலைகள் வழங்கப்படுகின்றதோ அந்தந்தப் பாடசாலைகளுக்கு விருப்புடன் சென்று உடனடியாகவே தமது கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.

உங்களுக்கு இன்றைய தினம் நிரந்தர நியமனம் கிடைத்துவிட்டது தானே இனி ஒன்றும் செய்யமுடியாது. வீட்டிற்கு அருகில் பாடசாலை கிடைத்தால்தான் போவேன் என்று அடம்பிடிக்க எத்தனித்தீர்களாயின் அதனால் பாதிப்படையப் போவது மாணவ மாணவ மாணவியரே. நியமனத்துக்குரிய பாடசாலைகளுக்கு விரைந்து சென்று கற்பித்தல்களை ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டுள்ளீர்கள் என்பதை அறிந்து கொள்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக கல்வித் திணைக்களத்தில் இருந்து விசேட குழுவொன்று பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொள்ளும். அவர்களின் அறிக்கையில் உங்கள் கற்பித்தல் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை என தெரிவிக்கப்படின் உங்கள் நியமனங்கள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்ற செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீங்கள் அனைவரும் உங்கள் பாடங்களில் துறைசார்ந்தவர்களாக விளங்குகின்ற காரணத்தினால் கற்பித்தல் செயற்பாடுகளில் குறைவு ஏதும் ஏற்படக் காரணம் இல்லை என்பதே எமது எதிர்பார்ப்பு. அண்மையில் இடம்பெயர்ந்து இந்தியா சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்களில் கணிதம் விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் விசேட சித்தி பெற்ற இளைஞர்கள் யுவதிகள் வடமாகாணத்தில் எங்கு வேண்டுமென்றாலும் கடமையாற்றத் தயார் என்றும் தம்மை எமது கல்விச் சேவையினுள் உள்நுழைக்குமாறும் கோரியுள்ளார்கள். அது பற்றி ஆராய வேண்டியுள்ளது. எனவே தூரத்தைக் காரணம் காட்டி செல்லாது இருக்கப் பார்க்கும் ஆசிரிய ஆசிரியர்கள் இந்த விடயத்தையும் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

ஒரு பாடசாலையை அல்லது கல்லூரியை மேன்மையடையச் செய்ய தனி ஒருவரின் முயற்சி போதுமானதென்பது எமது விவாதம். நல்லதொரு பாடசாலை அதிபர் அங்குள்ள மாணவர் ஆசிரியர் இருசாராரையுமே மாற்றத்திற்கு உட்படுத்தக் கூடியவர். அவ்வாறான அதிபர்கள் பலரைப்பற்றி நாம் அறிந்துள்ளோம். அது போலவே ஆசிரியர்களும் தம்மைச் சுற்றி ஒரு விழிப்புணர்வையும் மறுமலர்ச்சியையும் அவர்கள் கொண்டுவர முடியும் என்பதை மறந்து விடாதீர்கள். அன்பான புதிய ஆசிரியர்களே! உங்கள் கற்பித்தல் சேவையின் பயனாக கிடைக்கப் போகின்ற அறுவடை இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் தெரிந்துவிடும். அதற்காக உழையுங்கள்! சமூகத்தில் சிறந்த ஆசிரியர்களாக ஏனைய மக்களால் போற்றப்படுகின்ற வாழ்த்தப்படுகின்ற ஆசிரியர்களாக மிளிருங்கள் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## பிரதான வீதித்தடை...

இந்த நிலையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் பக்த அடியார்கள் புதுக்குடியிருப்பு-வற்றாப்பளை பிரதான வீதியூடாக தடைஏதுமின்றி பயணிக்க முடியுமா என பக்த அடியார்கள் மத்தியில் கேள்வி எழுந்திருந்தது.

குறித்த பிரதான வீதி வழி இடையே கேப்பாப்பிலவில் இந்த வீதியை நீண்ட காலமாக இராணுவத்தினர் தடை செய்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரைக்கும் குறித்த வீதித் தடையை நீக்குமாறு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் படையினருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி குறித்த வீதித்தடை இன்று நீக்கப்படும் என்று இராணுவத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

மேலும் புதுக்குடியிருப்பு தொடக்கம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் வரைக்கும் குறித்த பிரதான வீதி சீராக புனரமைக்கப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் அடியார்கள் எவ்வித சிரமங்களுமின்றி குறித்த பிரதான வீதி வழியாக ஆலயத்திற்கு செல்ல முடியும் என இராணுவத் தரப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர். (செ)

## தடை விதிக்க...

ள்ளார்.

2000ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு பதக்கத்தை வென்று கொடுத்த சுசந்திகா, வறுமை காரணமாக தான் பதக்கத்தை விற்கப்போவதாக சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இருப்பினும், பதக்கத்தை விற்பதற்கு சுசந்திகாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், சர்வதேச விளையாட்டு போட்டிகளின் போது வென்ற பதக்கங்களை விற்க முடியாத வகையில் புதிய சட்டமொன்று கொண்டு வரவுள்ளதாகவும் விளையாட்டு துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், விளையாட்டு வீரர்கள் பதக்கத்தை விற்பதை தடை செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை என சுசந்திகா ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பதக்கத்தை விற்பனை செய்வதாக அறிவித்ததும் ஜப்பான், இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து பலர் தொடர்பு கொண்டதாகவும் அவர்களில் ஒருவர் 25 கோடி ரூபாய் வரை விலை கொடுத்து வாங்க முன்வந்துள்ளதாகவும் சுசந்திகா குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அதிக விலைக்கு விற்க முடியாது என தான் நம்புவதாகவும் விளையாட்டு அமைச்சின் சில அதிகாரிகள் அமைச்சரை தவறாக வழிநடத்தி செல்வதே அமைச்சரின் இக் கருத்துக்கு காரணம் எனவும் சுசந்திகா குற்றம்சாட்டியுள்ளார். (செ)

## 2 கோடி மதிப்புள்ள...

ளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாண ஊழல் ஒழிப்புப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, ஒரு வாரமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, கெஸ்பாவ பகுதியில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை 567 கிராம் ஹெரோயினுடன் நேற்று கைது செய்துள்ளனர்.

அதேவேளை நேற்று ஆமர் வீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒரு கிலோ 272 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதில் மீட்கப்பட்ட ஹெரோயினின் சந்தைப் பெறுமதி இரண்டு கோடி ரூபாவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## அமைதியை சீர்...

குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் அமைதி ஏற்படாமல் எவ்வாறான அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை பலனளிக்காது.

நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

மகியங்கனை மற்றும் நாவலபிட்டி பகுதிகளில் இன ரீதியிலான கெடுபிடிகள் இடம் பெற்றுள்ளன.

இத்தகைய விடயங்கள் குறித்து இலங்கை புலனாய்வு பிரிவினருக்கு தெரியாது என கூற முடியாது.

புலனாய்பு பிரிவிற்கு இலங்கையில் ஏற்பட்டுவரும் இன ரீதியிலான அடக்கு முறைகள் குறித்த தகவல்கள் தெரியாது என கூறப்படுமாயின் அது புலனாய்வு பிரிவினர் மீதான மிகப் பெரும் நிந்தனையாகும் என அமைச்சர் ரவுப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் இன வன்முறை செயற்பாடுகளை தடுப்பது குறித்து விரைவில் அமைச்சர்களுடனான விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதுடன், பிரதமருடனும் இது குறித்து கலந்துரையாடவுள்ளதாக ரவுப் ஹக்கீம் குறிப்பிட்டார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்

சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.

**கரவீணா இசை மன்றம்**
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293

(ஓ-8778)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(ந-8722)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

**070 330 5500**
அண்ணா அன் கோ
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

(அ-8750)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பூச்சி நீக்கிய, தடுப்பூசி போடப்பட்ட ஜேர்மன் ஷெப்பர்ட் (German Shepherd Dogs) இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. கீழ்க்குறிப்பிடப் படும்தொலைபேசிஎண்ணுடன்தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு**
(9196) 077 881 1523

## சிறுநீரகம் தேவை

27 வயதான இளம் பெண்ணிற்கு B+ (அதிகம் விரும்பப்படுகிறது) அல்லது O+ 40 வயதிற்கு உட்பட்ட ஒருவரின் சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தானமளிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். **தொடர்பு :- 076 554 4776**
(9170)

## PERSONAL, GROUP CLASS

இரசாயனவியல் (A/L) 2017, 2018, 2019 Repeat Batch 37 வருட Past Papers கற்பிக்கப்படும்
**சி.அங்கதன்** B.Sc (Chem.Spl)
தொடர்பு: **0779208945**
(9409)

## தேவை

வவுனியாவில் உள்ள எமது காரியாலயத்துக்கு O/L, A/L கல்வித்தகைமை உடைய 18-35 வயதுக்கு இடைப்பட்ட (Clerk) பெண்கள் தேவை. 17,000/= வரை சம்பளம் பெறலாம். (சிங்களம் பேசக்கூடியவர்கள் விசேடம்) தொடர்புகளுக்கு:
**077 126 2430 / 077 766 1870**
(9194)

## தேவை

கந்தானையில் உள்ள பொலித்தீன் தயாரிக்கும் நிலையத்திற்கு வேலையாட்கள் ஆண்கள் (மட்டும்) தேவை. 18-55 வயதிற்குட்பட்டவர்கள். நாளொன்றுக்கு 1100/= உணவு, தங்குமிடம் தரப்படும்
**தொடர்பு**
077 993 8164, 077 993 8033
(9194)

## தேவை

பியகம கையுறை தொழிற்சாலைக்கு சேவையாட்கள் தேவை. 18-50 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும். உணவு, தங்குமிடம் தரப்படும். நாள் சம்பளம் 1000/=
**தொடர்பு**
(9194) 077 993 8164, 077 993 8122

## வேலையாள் தேவை

இரும்பகம் ஒன்றிற்கு (ஹாட்வெயார்) அனுபவம் உள்ள விற்பனையாளர்கள் உடன் தேவை.
**தொடர்பு**
(9407) 077 220 8170

## தலை...

அமைச்சில் முன்னெடுத்த கலந்துரையாடலின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரிதகதியில் அனுப்பிட நாடுங்கள்.

**CNR World Wide Express**
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

(ச-7545)

## கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு

**இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!**
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேற இலகுவான அரிய வாய்ப்புகள்

EXPRESS ENTRY Student Visa

8ம் ஆண்டு வரை படித்தவர்கள் முதல் பல்கலைக்கழக கல்வி முடித்தவர்கள் வரை அனைவருக்கும் கனடாவில் வேலைவாய்ப்புக்களுடன் குடும்பமாக நிரந்தர குடியுரிமை (PR) பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் பல உண்டு. இதுவரை எம்மவர்கள் கனடாவில் குடியேற பயன்படுத்தாத பலகுடியேற்ற வழிமுறைகள் பற்றி கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் உங்களுக்கான வாய்ப்புக்கள் பற்றி முழு விபரமும் விளக்கமும் தரப்படும்.

STUDENT VISA

கருத்தரங்கு நாள் 11-06-2017 காலை 09 மணி

IMMIGRATION APPROVED Canada

V2 Travels

முற்பதிவு அவசியம் - இன்னும் சில ஆசனங்கள் மட்டுமே உள்ளன **0768226236** 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

## BBK PARTNERSHIP (PVT) LTD
## VACANCIES
### CUSTOMER CARE ASSISTANTS

Seeking suitable candidates for employment on a full time long term basis for a travel and tourism office in Jaffna operating on a 24/7 basis catering to international clients. Work entails direct worldwide customers' contact through various modes of communication. No previous experience required. Any age will be considered : 18 to 60. Training will be initially provided in Colombo. Good spoken and written skills in English and computer literacy is required. Additional ability in European, Arabic, Indian languages is a bonus. Starting monthly salary will be Rs24,000/- with increments based on performance, rising to above Rs60,000/= plus bonuses. Should be willing to work on shifts including nights based on roster. Ladies : only day shifts. Please email your detailed CV to :audrey@bbkca.com not later than 25 June 2017. Shortlisted candidates only will be interviewed 1st by phone and then in person in either of our offices in Colombo, Vavuniya or Jaffna.
(8198)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 13.05.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் இடும்பத் தலைவர்



### அமரர் சங்கரப்பிள்ளை சோதிலிங்கம் (மணியம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (10.06.2017) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. நாளை (12.06.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வல்லை வீதி, சங்கானை.
077 4497103
(977)
இங்ஙனம்: குடும்பத்தினர்

## FURNITURES & TV'S

அதிரடி விலைக் கழிவில் மின் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள்

SPECIAL OFFER

### எங்குமே இல்லாத விலைக்கழிவில் எம்மிடம்



Special Offer

SOFA SET 32,900/= ONLY 3+1+1

5 YEARS WARRANTY

15% OFF

Sony DVD Player 5250/=

**LED TELEVISIONS**

| | |
|---|---|
| Samsung 32" | -29500/= |
| Hisence 32" | -24500/= |
| Hisence 24" | -17900/= |
| Tcl 32" | -21900/= |
| Panasonic 32" | -28500/= |
| Sony 32" | -31500/= |

Telesonic Air Cooler 16,480/=

STAND FAN RS.2900.00

Sony 5.1 Home Theater ONEYEAR WARRANTY RS 22,500/=

3 YEARS

SAMSUNG 48" SMART FULL HD RS.109, 900/= THREE YEAR WARRANTY

SONY
43" SMART FULL HD RS.82, 900 ONLY
48" SMART FULL HD RS.119,900 ONLY

HDMI 3 Years Warranty WiFi YouTube X-Reality USB

**KINGS ELECTRONICS(PVT) LTD**
12A, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
021-4546699 mykings.lk kingsjaffna

(ஓ-8792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378


வாரமலர்


# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 121

வள்ளுவர் ஆண்டு 2048 11.06.2017 தொலைபேசி : 021 222 3378





# முதலமைச்சருக்கு வைத்த வேட்டு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்காகப் பேசினால்

# கைதா?



## மோடி அரசிற்கே முழுப் பொறுப்பும்

ஈழத்தமிழர்கள்படுகொலைக் காக மெழுகுவர்த்தி ஏந்தி மெரினா வில் நினைவேந்தல் கூட்டம் நடத்தியதற்காக, மே 17 இயக் கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தியும் அவரது இயக்கத்தினரும் கைது செய்யப் பட்டனர்.

இந்நிலையில், திருமுருகன் காந்தி, தமிழர் விடியல் கட்சியைச் சேர்ந்த டைசன், இளமாறன் மற்றும் அருண்குமார் ஆகியோர் மீது குண்டர் சட்டம் பாய்ந்திருக் கிறது. அதோடு நிற்காமல் பழைய சம்பவங்களைத்தூசுதட்டி எடுத்து, திடீரென திருமுருகன் காந்தி மீது மூன்று வழக்குகள் போடப்பட்டுள் ளன.

எதற்காகஇவ்வளவுவழக்குகள்? குண்டர் சட்டம் பாயக் காரணம் என்ன? சிறைக்கும் நீதிமன் றத்துக்கும் அலைக்கழிக்கப்படும் திருமுருகன் காந்தியை சந்தித்து பேசியபோது.

**உங்கள்மீது குண்டர்சட்டம் பாய்ந்ததற்குப் பின்னணியில் பி.ஜே.பி. இருக்கிறது என எதை வைத்துச் சொல்கிறீர் கள்?-**

என்கைதுக்கு முழுக்க முழுக்க பா.ஜ.க அரசுதான் காரணம். ரேஷன் கடைகளை மூடப் போகி றார்கள் என முதலில் சொன்னது, காவிரி உரிமை மீட்புக்குக் குரல் கொடுத்தது. நெடுவாசல் பிரச் சினையை முதன்முதலில் மக்களி டம் எடுத்துச் சொல்லியது, கீழடி அகழ்வாய்வில் தமிழர் பெரு மையை மூடி மறைக்க நடந்த முயற்சியை மக்களிடம் அம்பலப் படுத்தியது, ஜல்லிக்கட்டுப் போராட்டம் எனத் தொடர்ந்து பா.ஜ.க அரசுக்குக் குடைச்சல் கொடுப்பதுதான் காரணம். இதை எச்.ராஜா போன்றவர்களே சொல்லி வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் இப் போது குண்டர் சட்டத்தில் கைது செய்திருக்கிறார்கள்.

இதற்கு அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டு, 'பேருந்து கண்ணாடி உடைந்துவிட்டது' என்பதுதான். அந்தக் கண்ணாடி அதுவாகவே விழுந்து உடைந்தது. கைதுக்கு முன் வன்முறை நடக்கவில்லை. பொலிஸ் அத்துமீறலுக்குப் பிறகு தான் கண்ணாடி உடைந்தது. பொலிஸார்தான் வன்முறை செய்தார்கள். இதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்?

இறந்தவர்களை நினைவு கூர் வது என்பது அடிப்படை உரிமை. இதைத் தடுக்கக்கூடாது என்று சர்வதேச நீதிமன்றமே சொல்லி இருக்கிறது. இலங்கையில்இதைத் தடுத்ததால்தான் ஐ.நா சபையே தலையிட்டு, கண்டித்தது. தற் போது அதே விடயத்தைத்தான் தமிழக அரசு செய்கிறது. தமிழக அரசு,மத்திய அரசிடம்சரணடைந்த அரசாகத்தான் இருக்கிறது. 'தமிழர், தமிழர் உரிமை' என்று எதையும் பேசக்கூடாது, இந்த வார்த்தையே வரக்கூடாது என நினைக்கிறார்




கள்.

முக்கியமாக பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் சுவரொட்டி களையெல்லாம் கபொலிஸார் கிழித்து எறிந்திருக்கிறார்கள். அவற்றை ஒட்டிய தோழரையும் அடித்திருக்கிறார்கள். ஈழம் தொடர்பாகவோ, தமிழர் உரிமை பற்றியோ யாருமே பேசக்கூடாது என மத்திய பா.ஜ.க அரசு நினைக் கிறது. ஜெயலலிதாவின்காலத்தில் இருந்தே இந்த நினைவேந்தல் நடந்திருக்கிறது. இது ஜெயலலி தாவின் அரசு என்றால், எப்படி நினைவேந்தலைத் தடுப்பார்கள்?

என்னோடு, தமிழர் விடியல் கட்சியினர் மூன்று பேர் மீதும் குண்டர் சட்டத்தில் வழக்குப் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் இளைஞர்கள். நல்லது செய்ய வேண்டும் என்று களத்துக்கு வரு கிறார்கள். அவர்களையும் முடக்க வேண்டும் என்ற எண்ணம்தான். சட்டம் ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு மாதிரி இங்கு செயற்படு கிறது. பொலிஸ் யாரின் சார்பாக செயற்படுகிறது. இதுதான் என் முக்கியமான கேள்வி.

**இந்த வழக்குகளிலிருந்து எளிதில் வெளிவர முடியும் என நினைக்கிறீர்களா?**

இவை எல்லாமே பொலிஸார் போட்ட பொய் வழக்கு. நாங் கள் போராட்டத்துக்குத் திட்டமிடும் போது, 'போங்க... நாங்க அனு மதி கொடுப்போம்'னு சொல்லி விடு கிறார்கள். ஆனால், போராட் டம் நடத்த அனுமதிக் கடிதம் தர மாட்டார்கள். பிறகு, அனு மதி யைப் பெறாத போராட்டம் என்று சொல்கிறார்கள். அதே போல் தமிழர் விடியல் கட்சி நடத்திய போராட்டத்துக்காக, ஒன்பது மாதங்கள் கழித்து என் மீது கொலை முயற்சி வழக்குப் போடுவது எந்த விதத்தில் நியா யம்?

இது ஜனநாயக ரீதியாக போராடுபவர்களின் கழுத்தை நெரிக்கும் செயல். எமர்ஜென்சி காலத்தில் நடப்பதுபோல தற் போது ஆட்சி நடக்கிறது.

**பொலிஸார் உங்களை அடித்தார்களா?**

அடித்தார்கள். ஒரு காவலர் லத்தி எடுத்துவந்து என் வயிற் றில் குத்தினார். 'அடிங்க சேர்... நான் எதற்கும் தயாரா இருக் கிறேன்' என்று சொன்னேன். என் னுடன் கைதான தோழர்களை யெல்லாம் பலமாக அடித்திருக் கிறார்கள்.

பொலிஸார் லத்தி சார்ஜ் என்று சொல்லி, காலுக்குக் கீழே அடிப்பார்கள். இங்கு மண்டையில் அடிக்கிறார்கள் தாக்குகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், குடி சையைக் கொளுத்திய பொலிஸ் காரர்களைக் கைது செய்யாத தமிழக அர்சு, மெழுவர்த்தியை ஏற்றியதற்காக எங்களைக் கைது செய்து குண்டர் சட்டத்தில் அடைத்திருக்கிறது.

எங்கள் விடு தலைக்காகக் குரல் கொடுக்கும் அனைவருக் கும் நன்றி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மாநாடு ஆரம்பிக்கும் நேரத்தில் ஆலடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள வைரவர் கோயில் ஸ்பீக்கர் ஒலிக்கத் தொடங்கியது.

ஒலிபெருக்கியில் வந்த சத்தம் ஆலடி மாநாட்டைக் குழப்ப, .வாத்தியார் வைத்திலிங்கம் கோபாவேசத்துடன் வைரவர் கோயிலை நோக்கிச் சென்றார்.

**விதானையார்:-** இண்டைக்கு ஒரு சண்டைக்கு இடம் இருக்கு. வாத்தியாருக்குக் கோபம் வந்திட்டுது...

**கங்காணியார்:** ஆலயத்தில இருக்கிற ஒலி பெருக்கி என்பது அயல் அட்டத்தில இருக்கிற சனங்களுக்குத் தொந்தரவு கொடுப்பதாக இருக்கக் கூடாது.

**சாத்திரியார்:-** சில கோயில்களில பாருங்க ஸ்பீக்கர் தொடர்ந்து சத்தம் போட்டுக் கொண்டிருக்கும். ஆலயத்தில சனங்கள் ஒருத்தரும் இருக்கமாட்டினம்.

**பண்டிதர்:** சனங்கள் இல்லாத கோயில்களில தான் ஸ்பீக்கர் சத்தம் கடுமையாக இருக்கும். கோயில் இருக்குது, அங்க நிர்வாகம் நடக்குது எண்டதைக் காட்டவல்லோ வேணும்.

**விதானையார்:-** பண்டிதர் ஐயா சொல்லுறது நூறு வீதம் உண்மை.

சில கோயில்களில நிர்வாகம் மாறின உடன அவர்கள் செய்யிற முதல் வேலை அதிகாலை முதல் நடுச்சாமம் வரை ஆலய ஒலிபெருக்கியைக் கத்த விடுறதுதான்.

புது நிர்வாகம் பொறுப்பேற்றிருக்குது. அந்த நிர்வாகம் திறம்படச் செயற்படுகிறது என்பதைக் காட்டத்தான் இந்த நாடகம்.

**சாத்திரியார்:-** அதுசரி இப்ப ஸ்பீக்கரிலதானே எங்கட பக்தியைக் காட்ட வேண்டி இருக்குது. ஆலயம் எண்டால் அமைதியான சூழல் இருக்க வேணும். உண்மையில ஆலயத்தில சொல்லப்படுகிற மந்திர சுலோகங்களை மைக்கில சொல்லுறதே ஆகமத்தை மீறும் செயல். தேவையெண்டால் ஒரு மெல்லியதாக ஆலயத்திற்குள்ள மந்திரம் கேட்கக் கூடியதான ஏற்பாடு செய்யலாம். இதை விட்டிட்டு அந்த ஊர் முழுக்க மந்திரம் கேட்கும்படி ஸபீக்கர்களை வீதியெங்கும் கட்டி விடுகிறது அவ்வளவு நல்லதல்ல.

(சாத்திரியார் இப்படிச் சொல்லி முடிக்க ஆலடி வைரவர் கோயில் ஸ்பீக்கர் ஒலியும் நிண்டது. ஆலய நிர்வாகத்துடன் கதைத்து வாத்தியார் ஸ்பீக்கரை நிற்பாட்டிப் போட்டார். மூப்பர் சொல்ல வாத்தியாரும் கோயிலில் இருந்து ஆலடிக்கு வேகமாக வந்து சேர்ந்தார்)

**பண்டிதர்:-** ஆலயங்களில பெரிய சத்தமாக ஸ்பீக்கர் ஒலிப்பதை நிறுத்த வேண்டும். இதற்கு ஆலய நிர்வாகங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றொரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

(பண்டிதர் இவ்வாறு கூறியதும் அனைவரும் ஏகமனதாக அந்தத் தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றினர்)

**மூப்பர்:-** வாத்தியார் ஆலயங்களில ஒலிக்கிற ஸ்பீக்கர் சத்தத்தை நிறுத்த வேணும் என்ற தீர்மானம் போல மாடு கடத்தல், மாட்டிறைச்சி கடத்தல், பசுவதை இவற்றுக்கு எதிராகவும் ஆலடி மாநாட்டில குரல் கொடுக்க வேணும்.

**கங்காணி:-** மூப்பர் சொல்லுறதை நானும் ஏற்றுக் கொள்கிறன். அண்மையில வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில ஒரு கூட்டம் நடந்தது. சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் தீவுப் பகுதியில இருக்கக்கூடிய மாடுகள், பசுக்கள் வெட்டப்பட்டு இறைச்சி யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இதைத் தடுத்து நிறுத்த வேணும் எண்டு எல்லோரும் வலியுறுத்தினவியள்.

**விதானையார்:-** பொலிஸார் என்ன சொல்லுகினம்.

**கங்காணியார்:-** யாழ்ப்பாணத்தில ஏகப்பட்ட மாட்டிறைச்சிக் கடைகள் இருக்குதாம். தீவுப் பகுதியில சிலர் கள்ள மாடுகளைப் பிடித்துக் கொடுக்க மாடுகள் உயிரோடும் இறைச்சியாகவும் கடத்தப்படுகிறது.

**சாத்திரியார்:-** மண்டைதீவுச் சந்தியில பொலிஸார் காவல் செய்யினமல்லோ.

**கங்காணியார்:-** மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட சிறுத்தீவு வழியாகவும் மாடுகள் கடத்தப்படுகுதாம்.

**பண்டிதர்:-** பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் எண்ட நிலைமை இருந்தால் தீவகத்து மாடுகள் அத்தனையும் சட்டிக்குத்தான் போகும்.

**கங்காணியார்:-** உண்மை தான் பண்டிதர் அந்தக் கூட்டத்தில நெடுந்தீவைச் சேர்ந்த ஒரு சிவில் சமூகப் பிரதிநிதியும் கலந்து கொண்டவர். அவர் சொன்னார், நெடுந்தீவில மாடுகளை களவாகப்பிடித்து வெட்டி இறைச்சிக் கறியாகக் காய்ச்சி யாழ்ப்பாணத்தில சில ஹோட்டல்களுக்கு கொண்டு போகினம் எண்டு.

**வாத்தியார்:-** அடக் கடவுளே! தெய்வமாகப் போற்றப்படவேண்டிய பசுக்கள் இறைச்சிக் கடைக்கு கறியா வருகுது எண்டால் எங்கட பொலிஸ் நிர்வாகம் எப்படி இருக்குது எண்டு பாருங்களன்.

**சாத்திரியார்:-** வாத்தியார் தீவகத்தில இருந்து மாடுகள் கடத்தப்படுவதற்கு ஒரு முடிவு கட்ட வேணும்.

**விதானையார்:-** தீவுப் பகுதியில இருந்து மாடுகள் கடத்தப்படுவது, இறைச்சிக்காக வெட்டப்படுவது இது தொடர்பில எடுக்கக்கூடிய முக்கியமான தீர்மானமொண்டு இருக்குது.

**மூப்பர்:-** என்ன விதா னையார் சொல்லுறியள், கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்க.

**விதானையார்:-** தீவுப் பகுதியில ஏகப்பட்ட மாடுகள் உரிமை கோரப்படாமல் இருந்தன. இப்ப அதில எவ்வளவோ மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு விட்டன.

தற்போது இருக்கக் கூடிய- உரிமை கோரப்படாத மாடுகளைப் பிடித்து வாழ்வாதாரமாக வழங்க வேணும். இதைத் தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்குத் தான் கொடுக்க வேணும் எண்டில்லை. தீவுப் பகுதிக்கு வெளியில இருக்கிற ஏழைக் குடும்பங்களுக்கும் வழங்கலாம்.

**வாத்தியார்:-** விதானையார் சொல்லுறது நல்ல முடிவு தான். இது தொடர்பில ஒரு நல்ல முடிவு எடுக்க வேணும் எண்டு யாழ். மாவட்ட அரச அதிபரிட்ட கோரிக்கை விடுவம்.

இவ்வாறு வாத்தியார் அறிவிக்க அதனை ஏற்றுக் கொள்வது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடி யில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## நெடுந்தீவில் உள்ள மாடுகள் இறைச்சிக்கறியாக யாழ். வருகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்லப்பிராணி வளர்க்க சில குறிப்புகள்



செல்லக் குட்டிகளுடன் பேசுங்கள் உங்கள் வார்த்தைகள் புரியவில்லை என்றாலும், உங்கள் குரல் அந்தக் குட்டிக்கு நன்றாகப் புரியும்.

ஆகவே, உங்கள் செல்லப்பிராணிகளுடன் தொடர்ந்து பேசுங்கள். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குப் பிறகு, அவை உங்களை நன்றாகப் புரிந்துகொள்ளத் தொடங்கும்.

மருத்துவ உதவி ஒரு செல்லப் பிராணியை வீட்டுக்குக் கொண்டுவந்தஉடனே நீங்கள்செய்யவேண்டிய முக்கியமான விடயம், அதற்கென்று ஒரு மருத்துவரை தெரிவு செய்வது தான். ஒவ்வொரு செல்லப்பிராணிக்கும் தொடர்ச்சியான மருத்து வக்கவனிப்புத்தேவை.

பேர் வைத்துக் கூப்பிடுங்கள்- ஒரு செல்லக்குட்டிக்கு அதை நாம் எப்படி அழைக்கிறோம் என்பது மிகவும் முக்கியம். ஒரே குறிப்பிட்ட சத்தம் தொடர்ந்து வருகிறதே? என்று யோசித்து, அதன் பின்னர் அந்த சத்தம் வரும்போதெல்லாம் அவை அதற்கு ரியாக்ட் செய்யும். ஆகவே, ஒரு நல்ல பெயரை (முடிந்த அளவிற்கு, சுருக்கமாக) வைத்து, தொடர்ந்து அழையுங்கள் ஆரம்ப நாட்களில். இது தான் நமது பெயர் என்று அதற்குப்புரியும்வரை, பலமுறை அழையுங்கள்.

அடிக்காதீர்கள்- உங்கள் செல்லப் பிராணிகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் அடிக்கவே அடிக்காதீர்கள். அது ஒரு வகையான எதிர்மறை விளைவை ஆழ்மனத்தில் ஏற்படுத்திவிடும். மேலும், உங்களைவிட உங்கள் செல்லப் பிராணிகளுக்கு உடல் வலு அதிகம் என்பதை மனதில் கொள்ளுங்கள். **(முற்றும்)**

# பேராசை பெரு நஷ்டம்



பொம்மு சொல்வதும் சரிதான். நாம் பழங்களை வீட்டில் வைத்துவிட்டு வருவோம்'என்றது அம்மு.

இல்லை..இல்லை.. அவன்நன்றாகதூங்குகிறான். இப்போத பஞ்சு மிட்டாயை எடுத்துவிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தன ராமுவும் சோமுவும்.

அவை இரண்டும், பஞ்சுமிட்டாய் கூடையை நெருங்கி அவற்றைத் தூக்கிக் கொண்டு ஓடின.

அம்முவும்பொம்முவும் பழக்கூடையை சுமந்து கொண்டு சென்றன.

சில நிமிடங்களில் கண்விழித்த பஞ்சு மிட்டாய் வியாபாரி, பஞ்சுமிட்டாய்க் கூடை காணமல் போயிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தான். பதற்றத்தில் பஞ்சுமிட்டாயைத் தேடி அங்கும் இங்கும் ஓடினான். தூரத்தில் குரங்குகள் பஞ்சுமிட்டாய் கூடையை கொண்டு செல்வதைக் கண்டான்.

ஏய்திருட்டுக்குரங்குகளா, என் பஞ்சுமிட்டாயையா திருடிச் செல்கிறீர்கள், உங்கள் மண்டையை உடைக்கிறேன் பாருங்கள்' என்று கற்களை எடுத்து அவைகள் மீது வீசி எறிந்தான்.

கல்லடிபட்ட குரங்குகள் இரு கூடைகளையும் போட்டுவிட்டு பிழைத்தால் போதுமென்று அலறிக் கொண்டே ஓடின. பஞ்சுமிட்டாய் வியாபாரி, 'குரங்குகளால் எனக்கு ஒரு கூடை பழம் லாபம்' என்று பஞ்சுமிட்டாயுடன் பழக்கூடையையும் தூக்கிச் சென்றான்.

நான் அப்பவே சொன்னேன். இருக்கிறதை விட்டுவிட்டு பறக்குறதுக்கு ஆசைப்படக் கூடாதுன்னு. இப்போ நாம் கொண்டு வந்த பழக் கூடையும் போச்சா" என்றது பொம்மு குரங்கு.

சரிதான் நாம் பேராசைப்பட்டோம், பெருநஷ்டம் அடைந்தோம் என்றன மற்ற குரங்குகள். **(முற்றும்)**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சருக்கு வைத்த வேட்டு

## பொறிபறக்கும் என்ற எதிர்பார்ப்பு சடுதியாய் அமைதியானது ஏன்?

வடக்கு மாகாண அமைச்சர் மீதான முதலமைச்சரின் விசாரணைக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அறிக்கை காட்டமாக இருப்பதை அவதானிக்க முடிவதுடன் தங்களின் விசாரணை அறிக்கை காட்டமாக இருக்க வேண்டும் என்பதிலும் விசாரணைக்குழு உறுதியாக இருந்துள்ளதையும் அறிக்கையின் போக்கு சுட்டிக்காட்டுகிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் யார் தான் விடுவார்கள் என்பதற்கு விசாரணைக்குழு அறிக்கையும் ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.


அதேவேளை விசாரணைக்குழு அறிக்கை வெளிவந்த கையோடு வடக்கு மாகாண சபையில் வாதப்பிரதிவா்தங்கள் பொறிபறக்கும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் எதிர்பார்த்த மாதிரி விசாரணை அறிக்கை குறித்த வாதப்பிரதிவாதங்கள் கருவிலேயே கலைந்து போனது. இதற்குக் காரணம் தான் என்ன? என்பது ஆராயப்படவேண்டும்.

அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதிலேயே வடக்கு மாகாண சபை நீண்ட நாட்களைச் செலவிட்டுள்ளது. அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டு என்பது வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்காகவே அரங்கேற்றப்பட்டது. நான்கு அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன்மூலம் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு கடுமையான நெருக்கடியைக் கொடுப்பது இதன் பிரதான நோக்கம்.

தவிர, இக் குற்றச்சாட்டுக் கொண்டுவரப்பட்ட வேளையில், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கொழும்புத்தலைமை; வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர்; இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புத் தலைமையின் சைகைக்கு இயங்கும் வடக்கு மாகாண சபையின் குறித்த உறுப்பினர்கள் என்ற முத்தரப்பும் குற்றச்சாட்டை முன்வைப்பதில் கடுமையாக முனைப்புக் காட்டின.

அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தாம் முன்வைக்கின்ற கருத்துக்களை வடக்கின் முதலமைச்சர் செவிமடுக்கமாட்டார் எனவும் எனவே அதிலிருந்து அவருக்கு எதிரான கோசங்களைப் பலமாக எழுப்ப முடியும் என்பதும் குற்றச்சாட்டை முன்வைப்பதில் முனைப்புக் காட்டியவர்களின் நோக்கமாக இருந்தது.

எனினும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தனது நடு நிலைமைக்கு- நேர்மைத் தன்மைக்கு எந்தப் பங்கமும் ஏற்படாத வகையில், ஓய்வு பெற்ற இரண்டு நீதிபதிகள், ஓய்வு பெற்ற அரச அதிபர் ஆய






பொ.ஐங்கரநேசன்



த.குருகுலராசா



ப.சத்தியலிங்கம்



பா.டெனீஸ்வரன்

மூவர் கொண்ட குழுவை நியமித்து, அமைச்சர்கள் தொடர்பான குற்றச்சாட்டுக் குறித்த விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர்.

முதலமைச்சரின் இந்த ஏற்பாட்டை பலர் எதிர்பார்த்திருக்கவில்லை. இந் நிலையில் விசாரணைக் குழுவின் அறிக்கை வெளிவந்துள்ளது.

அறிக்கை வெளிவந்த கையோடு வடக்கு மாகாண சபையில் வாக்குவாதங்கள் அனல் பறக்கும் என எதிர்பார்க்கப்பட்டதுடன், அவைத் தலைவர் கடும் சீற்றத்துடன் சில அறிவிப்புக்களை விடுவார் எனவும் எதிர்பார்க்கப் பட்டது.

நடக்கும் என்பார் நடக்காது நடக்காது என்பார் நடந்துவிடும் என்ற தத்துவத்திற்கு அமைய நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட வாதப் பிரதிவாதங்கள் எதுவும் நடக்காமல் அப்படியே அடங்கிப் போனது.

இதில் வேடிக்கை என்னவென்றால் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் கூட, சடுதியாகப் பின் வாங்கிக் கொண்டதுதான்.

பொதுவில் வடக்கு மாகாண அரசு ஆட்சிக்கு வந்தபோது முதலமைச்சர், அமைச்சர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு தமது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இச்சத்தியப்பிரமாணம் செய்யும் போது உறுப்பினர்கள் சிலர் தமக்குள்ளும் சத்தியப்பிரமாணம் செய்தனர். அதில் இந்த அமைச்சரைப் பதவி நீக்கம் செய்து காட்டுகிறேன் பார், முதலமைச்சரைக் கொழும்புக்கு அனுப்பி வைப்பதுதான் என் முதற்பணி, சில உறுப்பினர்களுக்கு கடும் தொந்தரவு கொடுத்தே ஆகுவேன் என்பது போன்ற உறுதி உரைகளும் எடுக்கப்பட்டன.

அதன் விளைவாகத்தான் வடக்கு மாகாண சபையில் தொடர்ச்சியான உபாதைகள், வாதப் பிரதிவாதங்கள், முதலமைச்சரை மீறிய செயல்கள் என அனைத்தும் நடந்தேறின.

நிலைமை இதுவாக இருக்கையில், விசாரணைக் குழுவின் அறிக்கை வெளிவந்த கையோடு இலங்கைத் தமிழரசுக்கட்சி அதன் தலைவர் மாவை. சேனாதிராசா தலைமையில் கூடி, என்ன முடிவை எடுப்பதாக இருந்தாலும் அதனை முதலமைச்சரிடம் விட்டுவிடுவதென்று முடிவு செய்தது.

இந்த முடிவோடு அடுத்த தேர்தலில் ஆசனம் தேவைப்பட்டோர் அமைதியாக இருப்பர் என்ற விருது வாக்கும் அறிவிக்கப்பட்டது.இதனால் அறிக்கைக்குப் பின்பாக அமைதி நிலவியது என்பதே உண்மை.

அது சரி இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இந்த முடிவு எதற்கானது.அட, இது கூடவா தெரியவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கூடியிருந்த மக்கள், முதலமைச்சர் மீது கொண்ட நம்பிக்கை தெரிந்ததல்லவா.

வடக்கு மாகாண அரசின் ஆட்சிக்காலத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்பில் தமிழ் மக்களிடம் மிகுந்த நம்பிக்கையும் பாசமும் ஏற்பட்டுவிட்டது.

எனவே அவர் மீது யாராவது குற்றம் சுமத்த நினைத்தால் அது கூட்டமைப்பின் தலைமை மக்கள் மத்தியில் தலைகாட்ட முடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் என்பதால் ஐயா! அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டை முன்வைத்து தேவையில்லாத வேலை செய்து மாட்டுப்பட்டீர். இனியாவது பேசாதிருந்து விட்டுப் போங்கள் என்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி முடிவெடுத்தது.

இந்த வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவு அந்தக் கட்சிக்குள் கெட்டிக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டி நிற்கிறது.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**காணாமல் போனவர்களுக்கான போராட்டங்களுக்கு நல்லாட்சி...**

**இன விடுதலைக்காக நான் எதுவும் செய்யத் தயார் நீங்கள்?**

**2030இல் யாழ்ப்பாணத்தின் நிலை?**

**கவி** நவாலி

**எனக்கு என் மனைவியில் அன்பு அதிகம். அது தவறா?**

**ஒரு குட்டிக்கதை**
ஒரு நூறுபேரை தெரிவு செய்து மனைவியிடம் அடிவாங்கியவர்கள் கையைத் தூக்கும் படிகேட்டார்களாம். அப்போது 99 பேர் கையை தூக்க ஒருவர் மட்டும் கையைத் தூக்கவில்லை. அவரை அழைத்து மேடையில் ஏற்றி நீதான் உண்மையான ஆண். எம் இனத்திற்கு பெருமை சேர்த்திருக்கிறாய். உன்னால் ஆண் இனம் பெருமை கொள்கிறது. இப்படி புகழ கடுப்பான அவன் சும்மா போங்கடா நேற்று இரவு அவ அடிச்ச அடியில கையே தூக்க முடியாம நான் கஷ்டப்படுகிறன் நீங்கவேற. எனக்கும் என் மனைவி மீது அன்பு அதிகம் தான்.

**அன்ரன் றோய்** முல்லைத்தீவு

**அரைகுறை ஆடைகளுடன் குத்தாட்டம் போடுபவர்களின் நோக்கம் என்ன?**

திட்டமிட்டு எம் பண்பாட்டுக்குள் புகுந்த குட்டைப் பாவடைகளை தூக்கி எறிந்து எம் கலாசாரத்தைக் கட்டிக்காக்க நாம் தவறிவிட்டோம். இன்று அது மோகம் தூண்டும் கருவியாகி எம் பண்பாட்டை சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கிறது.

**பிரணாப்** பருத்தித்துறை

**தமிழன் ஏன் அடிமைப்பட்டான்?**

மாற்றம் என்ற சொல் நிறைய மாற்றங்களை உண்டு பண்ணக் கூடியது. தமிழன் என்று சொன்னாலே அவன் தோளில் அகற்ற முடியாத பிண்டமாய்க் கிடப்பது சாதி. சாதி என்றைக்கு ஒழிக்கப்பட்டு மனிதனை மனிதனாகப் பார்க்கும் பக்குவம் என்றைக்கு தமிழனுக்கு ஏற்படுகின்றதோ அன்றைக்குத்தான் அவனுக்கு விடிவு. எமக்குள்ளேயே நாம் பிரிவினையை வைத்துக் கொண்டு இனவாதம் பிரிவினைவாதம் பேசுகின்றார்கள் என்று அடுத்தவனைக் குறைகூறிப் பயனேதும் இல்லை.

**கண்ணன்** காரைநகர்

**2030இல் யாழ்ப்பாணத்தின் நிலை?**

இரண்டு ஊர்களைப் பிரிக்கும் ஆற்றிற்குப் பாலம் போட்டுத் தரச் சொல்லி போராட்டம் நடத்திய மக்கள் இப்போது ஆற்றுக்குள் தார் வீதி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**நிரு** கொக்குவில்

**இன விடுதலைக்காக நான் எதுவும் செய்யத் தயார் நீங்கள்?**

நிரு, இனவிடுதலைக்காகச் செய்தவர்களின் நிலை கண்டும் இப்படி பிதற்றுகிறீரே? எமது இனத்திற்கு விடுதலையே கிடைக்காது. ஏனென்றால் எம்மவர்கள் ஊழல் இன்றி வாழமாட்டார்கள். இன்னொருவன் எம்மை ஆள விடவும் மாட்டார்கள்.

**சுதன்** குப்பிளான்

**சம்பந்தர் ஐயா எதிர்க்கட்சியில் இருக்கிறாரா?**

ஆட்டுவித்தான் யாரொருவன் ஆடாதாரா கண்ணா ஆசை எனும் தொட்டிலிலே ஆடாதாரா கண்ணா நீ நடத்தும் நாடகத்தில் நானும் உண்டு... (இதற்குப் பதில் எழுத ஆரம்பித்த போது ஒலித்த பாடல் இது)

**மாயா** திக்கம்

**பெற்றோரைத் தவிக்கவிட்டுவிட்டு கோவிலுக்கு தேரிழுப்பவர்களுக்கு பலன் கிடைக்குமா?**

மேடை ஏறி ஊருக்கு உபதேசம் செய்பவர்கள் அநேகமாக இப்படிப்பட்டவர்களே. இந்தப் பல்லிகள் கூழ்பானையில் விழாது லாவகமாக மூலைகளில் இருந்து வாக்குச் சொல்லி தம்மை மேதாவிகளாக்கிக் கொள்வர். இவர்களை விட்டு விடுங்கள். இறைவன் பார்த்துக் கொள்வான்.




**ஜெயா** வதிரி

**கோயிலுக்கு கொட்டிக் கொடுக்கும் வெளிநாட்டவர்கள் திருந்தமாட்டார்களா?**

என்ன செய்ய, கடவுள் ஏழையின் சிரிப்பில் இருக்கிறான் என்று புரியாதவர்கள், வெயில், மழை, பனி என்று எதுவும் பார்க்காமல் தூக்கமின்றி உழைக்கும் பணம் அத்தனையும் கோவிலில் கொட்டிவிட அவை வெறும் காட்சிப் பொருளாய் கிடக்குமே தவிர அதன் பயன் வேறு எதுவுமாக இருக்க முடியாது. கோவிலுக்குக் கொட்டுவதில் சிறு தொகையேனும் ஏழைக் குடும்பத்து குழந்தை பசி போக்கினால் அதன் நிலை வேறு. கொடுக்க மனமிருப்பவர்களிடம் பணம் இருக்காது. பணமிருப்பவனிடம் கொடுக்கும் மனம் இருக்காது. கொடுக்க மனம் இருப்பினும் ஏழை பசித்திருப்பதைவிட கோவிலுக்குக் கொட்டி பயனை வாங்க நினைக்கும் ஈனபுத்தி அவ்வளவுதான்.

**சகானா** மானிப்பாய்

**காணாமல் போனவர்களுக்கான போராட்டங்களுக்கு நல்லாட்சி கைகொடுக்குமா?**

"காணாமல் போனவர்கள்" என்கின்ற சொல் தமிழனின் வாழ்வியலில் புரையேறிக் கிடக்கிறது. ஒருவர் இறந்துவிட்டாரா? இருக்கிறாரா? என்று தெரியாமல் இடையில் நிற்கும் கொடுமை இருக்கிறதே அதை வார்த்தையால் வர்ணிக்க முடியாது. நல்லாட்சி என தன்னை அடையாளப்படுத்தும் இந்த அரசு நிச்சயம் காணாமல் போனவர்களுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும். ஏங்கி ஏங்கி தவித்துக் கொண்டிருக்கும் தாயின் கண்ணீரை துடைக்க வேண்டுமெனின் நிச்சயம் அவர்களுக்கு ஒரு முடிவைச் சொல்லியே ஆகவேண்டும்.

**நிஷாந்தன்** வல்வெட்டித்துறை

**கல்கி அவதாரம் எடுக்க இன்னும் கண்ண பிரானுக்கு காலம் வரலையோ?**

ஒரு சில கெட்டவர்களுக்காக ஒன்றுமறியாத உயிர்கள் அழிய வேண்டுமோ என்று எண்ணியிருப்பான் போலும்.

**டெனிஸ்** வளலாய்

**யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை?**

பாழ்பாணம், வாள்பாணம், கஞ்சாப்பாணம், மாவாப்பாணம், கசிப்புப்பாணம், பல்சர் பாணம் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**வினோ** உடுப்பிட்டி

**காதல் அனுபவம் உண்டோ?**

ம்ம் ... கன்னத்தில் நிறைய வாங்கியிருக்கிறேன். கன்னம் ஸ்ரோபரி பழம் போல சிவந்துவிடும் அளவுக்கு. ஆனால் தடவிப் பார்த்தால் தான் தழும்புகள் தெரியும்.

**தனு** அல்வாய்

**பார்வைக்கு கருவிழி முக்கியம். அதுபோல் காதலுக்கு?**

கரு என்பதுதான் எங்கேயோ உதைக்கிறது. ஏன் விழி என்று மட்டும் சொல்லலாமே? ஏனென்றால் இந்தக் கருவிழி எவ்வளவு பார்வைக்கு முக்கியமோ அவ்வளவு காதலுக்கும் அது முக்கியமே.

**டிலக்ஸ்** நெல்லியடி

**நாங்கள் சொல்லும் அறிவுரையை மற்றவர்கள் கேட்காவிட்டால் என்ன செய்வது?**

ஒன்று நாங்கள் அறிவுரை சொல்வதற்கு தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். அல்லது எம்மால் அறிவுரை சொல்லப்படுபவர் அதைக் கேட்கக் கூடியவராக இருக்க வேண்டும். எம்மில் பிழைவைத்துக் கொண்டு மற்றவர்க்கு அறிவுரை சொல்வது மடைமை. எம் அறிவுரையைக் கேட்கமாட்டார் என்று தெரிந்தும் அவர்களுக்கு அறிவுரை சொல்லுவது மடைமையிலும் மடைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## பசுமை நினைவுகள்

செல்லறித்த நூலல்ல நம் வாழ்வு
இடையிடையே கருத்தற்றுப் போவதற்கு
சுவைமிகு வாழ்வது இனிமை தந்திடும்
இன்பம் துன்பம் இரண்டறக் கலந்து
இனிப்பும் புளிப்புமானது வாழ்வு
இருக்கும் காலம் குறைவென்பதால்
இனிதாய் நாளும் வாழ்வைச் செதுக்கிடு
திண்ணையில் படுத்துறங்கியது தொலைந்து
பஞ்சுமெத்தையில் படுத்துறங்கும் போதும்
மாடி மாடங்கள் பலஉயர்ந்திட்ட போதும்
ஓலைக்கொட்டிலில் ஒடியற் கூழ் குடித்து
ஒற்றுமையாய் வாழ்ந்த காலமும்
கூட்டுக்குடும்ப குதூகல வாழ்வதும்
கலப்படமற்ற உணவுகள் நல்வாழ்வளித்ததும்
மருந்தற்ற உணவுகளால் சுகவாழ்வும்
மருந்தில்லா வாழ்வும் நிலைபெற்றிருந்த
பசுமையான காலமதுவும் மீளுமா?
திண்ணை ஒட்டில் அன்னை மடியில்
தலைவைத்து அவள் முகம் பார்த்து
தந்தை கதை கேட்டு தூங்கும் சுகம்
எந்தப் பஞ்சு மெத்தையும்
பட்டுக்கம்பளமும்
பார் மதித்திடும் பணமும் கொடுக்குமா?
சொல்லிடு மானிடா எனக்கு
இந்தப் பசுமையான நினைவுகளை
அவை மீட்டித் தந்திடுமா? எமக்கு...

கு.யசிதீபன்
அரியாலை

## பேராசை இல்லை

இவ்வுலகில் வாழும்
பேராசை ஒன்றும்
பெரிதாய் இல்லை...!
உன் ஆயுள் வரை
போதும் என் ஆயுள்!
நீ எனக்கு செய்தவை
எல்லாம்– நான்– உன்
முதுமையில் திருப்பிச்
செய்யவேண்டும்
தந்தையே... நான்
தண்டனையைச்
சொல்லவில்லை...

ஜெ.சிந்துஜா
வேலணை

## நேசிப்பது வீண்

வெளிச்சத்தில் நடமாடும் பகல் பேயே
உன்னைப் பின் தொடர்கின்றேன் மானே
புருவத்தைச் சற்றுத் தூக்கினாய் நீயே
புலம்பிப் புலம்பித் தவிக்கின்றேன் நானே
கருவில் சிசுவைச் சுமப்பவள் தாயே
நன்றியுடன் வாலை ஆட்டுமே நாயே
பார்வைகள் சுட்டெரிக்கும் கண்கள் தீயே
அடிக்கடி உன்னைப் பார்ப்பது என் விழியே
சிரிக்காமல் செல்கின்ற அழகிய மூதேவி
என் மனதிற்கு என்றும் நீதானே சீதேவி
உன்னை எதிர்பார்க்கும் நான் மேதாவி
நீ பயணம் போகின்றாய் யாழ்தேவி
எவ்வளவு நாளாய் அலைகின்றேன் நான்
என்னை வெறுப்பது போல் நடிப்பது ஏன்
உன் வார்த்தைகள் எனக்கு என்றுமே தேன்
நீயின்றி நானிருப்பதுதான் வீண்

முல்லை அன்ரன்

## முன்னாள் போராளி

அழிவுகளுக்கு தன்னைப்
பழக்கப்படுத்திய ஒருவன்
இரவுகளைத் தனிமைப்படுத்தி
உழைக்கின்றான் ஓய்வின்றி

தனிமைகளுக்கு முடிவுகட்டத்தான்
பாடுபடுகிறான் போலும்
தாகமெடுக்கும் போது
நீர்க் குவளையை
எடுத்துக் கொடுக்கவே ஆளில்லை

பாலையாய்க் கிடந்த மண்ணை
பண்பாடாக்கி
பயிரிட்டு பலன்பெறத்
தெரிந்தவனுக்கு
வாழ்வு மலரவில்லையே!

எம் இனத்தின் விடிவுக்காய்
நாடு கேட்டு போரிட்டதால்
இன்று தீண்டத் தகாத ஒருவனாய்...

தன் உயிரை துச்சமென்றெண்ணி
தன் மக்கள்
நிம்மதி வாழ்வு காண
தன்னுடலில் ஆறாத
வடுக்களைச் சுமந்தவன்
இன்று தனிமையில்...

அன்று மண்மீட்புக்காய்
போராடியவன்
இன்று மண் வளத்துக்காய் போராடுகிறான்

மண் அவன் வாழ்வில்
பிரிக்க முடியாத பதம்
ஏனென்றால்–அவன் அதை
உயிரிலும் மேலாய் நேசித்தவன்...

மாவை. நா.கஜேந்திரன்



## துவேசம்

என்ன நினைத்தாய்
என்ன நினைப்பாய்
உனக்கேது புரியுமடா
தன்னந்தனியே
உனைக்கொல்ல
ஈனர்க்கு எப்படி முடிந்ததடா
யாரைக்கேட்பேன்
யாருமில்லை
ஊரே நாறுதடா
உன் உமிழ்பாலே
வற்றி உடலும்
தொங்கிக்காயுதடா

வா.சாரங்கன்
முத்தையன்கட்டு

## மீண்டும் வருவாயா?

தேவைப்பட்ட போதெல்லாம்
ஆசையோடு தூக்கித் திரிந்த நீ !
தேவைப்படாதென்று
தூக்கி வீசிவிட்டாயே!
இனியொரு தேவை வரும்போது
நீ என்னைத் தேட
மனம் வருமோ!
ஒருநாள் உன்னையே
யாரும் ஒருவர்
தூக்கிவீசும் காலம் வரும்
அப்போது என்னிடம்தானே
நீ மீண்டும் வரவேண்டும் அம்மா!

நா.மதுசன்
யாழ்ப்பாணம்

# மௌனத்தின் தேடல்– 356

## கள்ளிப்பால்

கம்பிகளும் பதம்பார்த்த
வழுவழுப்பு தோல்
காக்கைகளும் கொத்திக் களைத்த
என் மெழுகுத்தோல்
தூசிகளும் அலங்கரித்து கொடுத்த
காற்றடைத்த சதை
சூரியனுடன் போராடி நிறமங்கும் மேனி
சிதைகின்றது அனைத்தும்
நான் ஏன் எறியப்பட்டேன்
ஐயோ மறந்துவிட்டேன்
நானும் பெண் பொம்மையென்று
மெழுகின் கண்ணீரும்
திரையிடப்பட்டது மழையால்...

சி.வேணுகா
கோப்பாய்

## 'சிக்குண்ட பாவை மீட்பார் யாரோ'

எனக்கு கம்பி முள்
குத்துகின்றது
எவ்வாறு இங்கு வந்தேன்
இரவில் நடந்த கொடூரமான
றோமாப் புயல் என்னை
தூக்கி வீசியதோ?
என்னைக் காணாமல் கண்ணன்
அழப் போகிறான்
யார் என்னை மீட்பார்கள்?

பா.கலாதேவி
ச.இ.க.

## காட்சியின் பின்னணி

கைதிகள், சிறை,சித்திரவதை கைதிகள்,
அகதிகள் தப்பிச் செல்வதைத் தடுக்கும்
உயர எழுப்பிய முட்கம்பி வேலி அரண்!
காவலரண்!
மாயைக்குழந்தை பொம்மை ஒன்றை
முட்கம்பியில் குத்தி, சிக்கி, கொழுக்கி
தொங்கவிட்டிருப்பது
மனித உயிர் உணர்வுகளுக்கு
அரிதிலும் அங்கு அரணில்
பாதுகாப்பு இல்லை என
சொல்லாமல் சொல்லும் காட்சியாக
பொம்மை தொங்கும் காட்சி பிரதிபலிப்பு!

சி.சுகிர்தமலர்,உரும்பிராய்

## உண்மை

பொம்மை என்றாலும் பொய்யல்ல
இந்த தேசத்து தமிழினத்தின்
வாழ்வியல் உண்மையும்
இப்படித்தான்!

தேன்நிலா
நல்லூர்

## வேடிக்கையா?

பாலியல் பலாத்காரம்
சிறுவர் பாதுகாப்பு
எனப் போராடிக் கொண்டிருக்கும்
இம்மண்ணில் இதுவென்ன
வேடிக்கையா?
இனம் ஒழிக்க சிறுபயிர் அழிப்பா,

சி.லஷ்மி, சித்தன்கேணி

## தடுமாற்றம்

கிட்டவர மனம் நடுங்குதடா
எட்ட உனைப்பார்க்க
விழி பதறுதடா
முட்டிக்கால் மடித்து
முட்கம்பியில் போட்டானா
குட்டிப் பையனா– நீ
குழந்தை பொம்மையா
உலக வட்டிக்கு வாங்கிய
சன்மானத்தில் வகைக்
கணக்குப் பார்க்காமல்
கொட்டிக் கொழித்து
பல உயிர் கொன்றேனே
பாலகா பால் மணம்
மாறாத உன்னையும்
படுபாதகம் செய்தானா?

யாழ்[illegible]
ஒட்டுசுட்டான்

# மௌனத்தின் தேடல் –357



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 14.06.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு வீரம் இருக்கிறது அவர்கள் புலிகள் என்றறிவேன்

## ராகுல்காந்தி திடுதிப்பு



எப்போதாவது தமிழகம் வந்து... வந்த வேகத்திலேயே திரும்பிப் போய்விடுவார் ராகுல் காந்தி. பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகம் தேவைப்படும் என்பதால் அதிகாரிகளும் அவரை அனுமதிப்பதில்லை. மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு சென்னையில் இரண்டு நாட்கள் இருந்தார் ராகுல். இம்முறை அவரிடம் பல ஆச்சர்ய மாற்றங்கள்.

பொதுவாகக் கருணாநிதியை ராகுலுக்குப் பிடிக்காது என்பார்கள். இதற்குமுன் தமிழகம் வந்த ராகுல், கருணாநிதியைச் சந்திப்பதைத் தவிர்த்திருக்கிறார். ஆனால், கருணாநிதி உடல்நிலை சரியில்லாமல் காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, கருணாநிதியைச் சந்தித்தார். இப்போது கருணாநிதியின் சட்டமன்றப் பணிகள் வைரவிழாவுக்குவந்து அவரையும் ஸ்டாலினையும் பாராட்டித் தள்ளினார். இதில் தி.மு.கவினரைவிட காங்கிரஸ்காரர்கள்தான் மகிழ்ச்சி அடைந்தனர். காரணம், சத்தியமூர்த்தி பவனுக்கு ராகுல் வந்ததுதான். ஆறாண்டுகளுக்குப் பிறகு ராகுல் அங்குவந்து, கட்சிக்கொடியை ஏற்றி வைத்து, நிர்வாகிகளுடன் மனம்விட்டு உரையாடினார்.

இந்தச் சந்திப்பைத் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திருநாவுக்கரசர் நேர்த்தியாகத் திட்டமிட்டிருந்தார். 250 பேர் உட்காரும் அரங்கில் கோஷ்டி பேதமில்லாமல் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகளைத் தேர்வுசெய்து அமரவைத்திருந்தார். நிர்வாகிகள் பலரும் ராகுலுடன் நெருங்கிக் கைகொடுத்து ஓரிரு வார்த்தைகள் பேச முயன்ற போது ராகுல் தன் பாதுகாப்பு அதிகாரிகளை விலகியிருக்கும்படி கூறிவிட்டு, நிர்வாகிகளோடு நெருங்கி, இயல்பாக உரையாடியிருக்கிறார்.

"தமிழர்கள் மத்தியில் இருப்பதைப் பெருமையாக நினைக்கிறேன். எங்கள் குடும்பத்தாரோடு இருப்பதாகவே உணர்கிறேன். இவை வெறுமனே உதடுகளிலிருந்து உதிரும் வார்த்தைகள் அல்ல, ஆத்மார்த்தமாகச் சொல்கிறேன். என் சகோதரி பிரியங்காவுக்கு, 'நான் இப்போது அன்பிற்கினிய நம் தமிழர்களோடு இருக்கிறேன்' என்று குறுஞ்செய்தி அனுப்பினேன். அதற்கு அவர், 'நானும் உங்களோடு இருக்கிறேன்' என்று பதில் அனுப்பியிருக்கிறார். எனக்கு எப்போதும் தமிழர்கள்மீது அளவற்ற அன்பும் மரியாதையும் பாசமும் உண்டு. என் தந்தைக்குத் தமிழர்கள் மீது அளவற்ற அன்பும் பாசமும் இருந்தது. தமிழகம் வந்துபோவதில் அவ்வளவு மகிழ்ச்சி அடைவார். அதேபோன்றுதான் என் பாட்டி இந்திராவும், பாட்டியின் அப்பா நேருவும் தமிழகத்தை நேசித்தனர். தமிழகம் என் குடும்பத்தைப் போன்றது.

தமிழர்களுக்கு என்று ஒரு கலாசாரம் இருக்கிறது. பண்பாடு, நாகரிகம் இருக்கிறது. வீரம் இருக்கிறது. தமிழர்கள் என்றால் புலிகள் என்பதை நான் அறிவேன். (இப்படி மூன்று இடங்களில் சொன்னார்).

ஒருமுறை என் நண்பர்களிடம் அருகில் இருந்த ஒருவரைக் காட்டி, 'இவர் தென்னிந்தியர்' என அறிமுகப்படுத்தினேன். அவர் கோபித்துக் கொண்டார். 'தவறாக ஏதும் கூறிவிட்டேனா?' எனக் கேட்டேன். 'ஆமாம். அது என்ன தென்னிந்தியர்? ஒன்று இந்தியர் என்று அறிமுகப்படுத்துங்கள். அல்லது தமிழர் என்று அறிமுகப்படுத்துங்கள்' என்று கூறினார். அவர் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டேன். அதற்கு மதிப்பளிக்கிறேன். அன்றிலிருந்து நான் யாரையும் 'தென்னிந்தியர்' என்று பேசுவதே கிடையாது. 'இவர் தமிழ்நாட்டவர்', 'இவர் ஆந்திர மாநிலத்தவர்', 'இவர் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்' என்றுதான் பேசி வருகிறேன்.

இந்தியா ஒரே நாடுதான் என்றாலும், இங்கே ஒவ்வொருவருக்கும் ஒரு பண்பாடு, கலாசாரம், வரலாறு, வீரம் என்று இருக்கின்றன. அதை நாம் ஏற்க வேண்டும். பிரதமராக இருக்கும் மோடிக்கு அது புரியவில்லை. 'நான் என்ன கலாசாரத்தைக் கொண்டிருக்கிறேனோ, அதை மற்றவர்கள் ஏற்க வேண்டும்' என்று திணிக்கிறார். 'நான் என்ன பண்பாட்டை ஏற்றிருக்கிறேனோ, அதையே மற்றவர்கள் ஏற்க வேண்டும்' என்கிறார். ஹிட்லரைப் போன்று நடந்துகொள்கிறார். இந்தக் கருத்துத் திணிப்பை நாம் எதிர்க்க வேண்டும். இந்தியாவின் தேசிய விலங்கு புலி. அதைப்போல உங்களது எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

இங்கே பேசிய பலரும், நான் அடுத்தமுறை தமிழகம் வரும்போது பிரதமராகத்தான் வர வேண்டும் என்றார்கள். தேர்தலுக்கு இன்னும் இரண்டாண்டுகள் உள்ளன. அதுவரை நான் தமிழகம் வரக்கூடாதா என்ன? என்னால் அப்படி இருக்க முடியாது.

இங்கே ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். அரசியல் கூட்டணி என்பது வேறு. தி.மு.கவோடு கூட்டணி இருக்கலாம். அ.தி.மு.கவோடு, கம்யூனிஸ்ட்களோடு, பாட்டாளி மக்கள் கட்சியினரோடு என்று பலருடனும் கூட்டணி வைத்துக்கொள்வது வேறு. ஆனால் நமது நோக்கம், 'தமிழகத்தில் காமராஜர் ஆட்சியை அமைக்க வேண்டும்' என்பதே. அதற்கேற்ப நம் கட்சியின் செயற்பாடு இருக்க வேண்டும். எல்லோரும் கிராமங்களை நோக்கிச் செல்லுங்கள். மத்திய அரசின் நடவடிக்கையால் துன்பத்தில் தவிக்கும் மக்களைச் சந்தித்துப் பேசுங்கள். என்னையும் அழையுங்கள். உங்களோடு சேர்ந்து கிராமம் கிராமமாகச் செல்ல ஆவலாக இருக்கிறேன்" என்றெல்லாம் பேசியிருக்கிறார் ராகுல்.

ராகுல் காந்தியின் இந்தச் சந்திப்பும் பேச்சும், கட்சி நிர்வாகிகளுக்கு இன்ப அதிர்ச்சி. "இதற்கு முன்பு இப்படி ராகுல் பேசியதே இல்லை. இந்த முறை தொண்டர்களின் இதயங்களைத் தொட்டு விட்டார்" என்கிறார்கள்.

-நன்றி: விகடன்-




# அப்பாச்சி ஸ்பெஷல்




அப்பாச்சி... ரேஸ் டிராக்கில் பைக் ஓட்டக்கூடிய ஓட்டிக் கொண்டிருக்கும் பலரும், முதன்முறையாக அங்கே ஓட்டிய பைக் இதுவாகத்தான் இருக்கும்! இப்படி ரேஸ் டிராக்கில் பிறந்து சாலைகளுக்கு வந்த அப்பாச்சி, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சிறந்த பைக்குகளில் ஒன்று.

முதன்முதலில் 150சிசி மொடலாக, கடந்த 2005இல் அறிமுகமான அப்பாச்சி, சுசூகியின் பியரோ F2 பைக்கை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஒரு ரேஸ் பைக்குக்கான குணாதிசயங்களுடன், RTR என்ற அடைமொழியுடன், அப்பாச்சி களமிறங்கியது 2007இல்தான். எனவே இந்தியாவில், அப்பாச்சி RTR பைக்கின் ஆதிக்கம் தொடங்கி, 10 ஆண்டுகள் ஆகிவிட்டது! ரேஸிங்கில் 33 ஆண்டுகள் அனுபவம் கொண்டிருக்கும் டிவிஎஸ் தயாரித்த அப்பாச்சி RTR பைக்கை, வடிவமைத்த பொறியாளர்கள் குழுவில் இருந்த பலரும் பைக்கர்கள்தான்! அப்பாச்சி RTR வரலாற்றில், Over Square/Short Stroke இன்ஜினுடன் வெளிவந்த அப்பாச்சி RTR 160இன் இன்ஜின், அதன் போட்டியாளர்களைவிட அதிக பவரை வெளிப்படுத்தியதுடன், பைக்கும் குறைவான எடையுடனும் இருந்தது. மேலும், ரேஸ் டிராக்கிலும் சாலையிலும், சிறப்பான கையாளுமையை அளிக்கக்கூடிய சேஸியுடன், முதன் முறையாக பெட்டல் டிஸ்க் பயன்படுத்தப்பட்டது அப்பாச்சி RTRஇல்தான்!

இந்தியாவில் ஸ்டைலைவிட பெர்போமென்ஸ்'க்கே முக்கியத்துவம் என்ற மனநிலையில் டிவிஎஸ் இருந்ததால், 10 ஆண்டுகளில் தனக்கென ஒரு நம்பகத்தன்மையான ரசிகர் வட்டத்தை உருவாக்க முடிந்தது. ஆனால், இந்தக் காரணத்தாலேயே, போட்டியாளர்களை விட விற்பனை எண்ணிக்கையில் அப்பாச்சி RTR, பல சந்தர்ப்பங்களில் பின்தங்கியுமிருக்கிறது! இதனைச் சமன்செய்யும் பொருட்டு, டிவிஎஸ் 2012இல் பேஸ்லிஃப்ட் செய்யப்பட்ட அப்பாச்சி RTR பைக்கை வெளியிட்டது. ஆனால், இது டிவிஎஸ் நிறுவனமே எதிர்பார்க்காத வகையில், அதன் ரசிகர்களிடையே கலவையான கருத்துகளைத்தான் ஏற்படுத்தியது. தொழில்நுட்பரீதியிலும் ஃப்யூல் இன்ஜெக்ஷன், ஏபிஎஸ், 4 வால்வு, ஓயில் கூலர், மோனோஷாக், LED DRL, டிஜிட்டல் டயல்கள் என அப்பாச்சி RTR, காலப்போக்கில் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

## மோட்டார் மன்னன் பக்கம்



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பைக்குகளில், ஏபிஎஸ் உடன் வெளிவந்த முதல் பைக் என்ற பெருமைக்குச் சொந்தமான அப்பாச்சி RTR 180, அப்பாச்சி RTR 160 ஐ விடக் கூடுதலான பெர்போமென்ஸ் வேண்டும் என்பவர்களுக்கானது. பக்காவான ஸ்ட்ரீட் ஃபைட்டர் டிசைன் மற்றும் சிறப்பான கையாளுமையுடன் கூடிய பெர்போமென்ஸ் என மிகப் பெரிய அளவில் முன்னேறிய தயாரிப்பாக, கடந்த ஆண்டு வெளிவந்தது அப்பாச்சி RTR 200. கார்புரேட்டர் மற்றும் ப்யூல் இன்ஜெக்ஷன் ஒப்ஷன்களைக் கொண்டிருந்த 197.75 சிசி இன்ஜின், 21 டிரி பவரை வெளிப்படுத்துகிறது. Indian Bike of the Year பட்டம் உட்பட, இந்திய ஒட்டோமொபைல் துறையின் பல உயரிய விருதுகளைப் பெற்ற அப்பாச்சி RTR 200, கொடுக்கும் பணத்துக்கு மதிப்புமிக்க பைக். தற்போது பிஎம்டபிள்யூவுடன் கூட்டணி அமைத்திருக்கும் டிவிஎஸ், G310R பைக்கை இந்தியாவில் தயாரிப்பதற்கான உரிமத்தைப் பெற்றிருக்கிறது. எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு, டிவிஎஸ் வடிவமைத்த பைக்தான் அக்குலா 310. இதனைக் கடந்த ஆண்டு நடைபெற்ற டில்லி ஆட்டோ எக்ஸ்போவில் காட்சிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. எனவே, பெர்போமென்ஸ் பைக் செக்மென்ட்டில் தனது மார்க்கெட் ஷேரை அதிகப்படுத்தும் விதமாக, அப்பாச்சி RR310S எனும் பைக்கை இந்தாண்டு ஒகஸ்ட் மாதத்தில் களமிறக்குகிறது டிவிஎஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்தநாள் காதல்

பாடசாலை முடிந்து ஆனந்தமாக வந்தான் குமரன். அப்பா... அப்பா... நாளைக்குக் ஹர்த்தாலாம். பள்ளிக்கூடம் இல்லையாம். ஹர்த்தால் என்றால் என்ன? எதாவது கொண்டாட்டமோ? காணாமல் போனோர் என்றால் என்னப்பா எனத் தொடர் வினாக்களைத் தொடுத்தான். அவன் கேட்டு முடிக்க முன் தாய் தங்கம் முந்திக் கொண்டு இதெல்லாம் தேவையில்லை. சாப்பாடு சூடாற முன் சாப்பிடலாம். வாங்கோ என்றாள். பாவம் குமரன் அவன் தரம் ஒன்றில் படிக்கின்றான். இவனுக்கு என்ன புரியும் எம் வேதனையின் வடுக்கள் சொந்தங்களைத் தொலைத்திட்டுப் படும்பாடுகள்... என்றெண் ணிய ஆனந்தத்தின் மனம் சற்று நாழிகை கடந்த காலம் நோக்கி நகர்ந்தது.

எனக்கு இளவயது கட்டிறுத்த உடலமைப்பு. தரம் பதினொன்றில் கற்றுக் கொண்டிருந்த காலம். செல்மழைகளும் பங்கர்களுக்குள்ளும் அகப்பட்டுக் கொண்டு குப்பி விளக்குகள் கல்விக்குத் துணை போன காலமது. கலப்படங்களும் காதலுக்கும் வரையறை இருந்தது. பிளேட்டோ (Plato) சொன்னது போல கல்வியே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை மூலவளமாக அமைகிறது என்றெண்ணிக் கல்வியொன்றையே எமது கண்ணாகக்கொண்டு கல்வியால் எமது சமூகம் உயர்ந்து உலகில் தனக்கென ஒரு இடம்பிடித்தது. அப்படிப்பட்ட ஒரு வசந்த காலத்தில் போதைப்பொருள், கஞ்சா என ஏதாவது பற்றி யாரும் சிந்தித் தாலோ, அதை விற்றாலோ அவர் உயிர் இருக்காது! பெண்கள் தனிமையாக எந்த இடத்திற்கும் சுதந்திரமாகப் போய் வரக்கூடிய காலம். இப்படியிருக்கை யிலேயே தரம் பதினொன்றில் அம்மாவின் தொல்லை தாங்க முடியாமல் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு செல்ல நேரிட்டது. முதல் நாள் வகுப்பு முடிந்து துவிச்சக்கரவண்டி எடுக்கச் சென்ற போதுதான் என் சாந்தியைக் கண்டேன். அவளை முதன்முதலில் அன்று பார்த்த போதும் பல வருடங்கள் அவளுடன் பழகிய உணர்வு என்னுள் துளிர்விட்டது. அவளிடம் வாய் விட்டுக் கேட்கப் பயம்.தப்பித்தவறிக் கேட்க அந்தப் பிள்ளை சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி விட்டால் ஆறுமாதம் சூரி யனையே பார்க்க முடியாது போகும் என்ற என் மனம் என்ன என் கை கால் பதறியது. அப்படியே மனதுக்குள் புதைத்து விட்டு கட்டிளமைப் பருவத்தில் அனைவரையும் ஊசியாகக் குற்றி துளைக்கும் காதலில் வசப்பட்டவனாக அவளை ஒருதலைக் காதலாக நேசிக்கத் தொடங்கி மிதிவண்டியை மிதித்து வீடு நோக்கிப் புறப்பட்டேன். அதன் பின் அவளிடம் சொல்லலாம் சொல்லலாம் என எண்ணிக் கொண்டிருந்த போதுதான் ஐப்பசி மாதக் கடைசியில் எமது வரலாற்றில் பேரழிவை ஏற்படுத்தவென இடம்பெயர்வு ஒன்று இடம்பெற்றது. இரவோடு இரவாக மூடை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு ஓட்டமும் நடையுமா அடிமேல் அடி வைத்து சொந்த பந்தங்கள், சொத்து சுகம், சொந்தவீடு எல்லாவற்றையும் விட்டுட்டு எதையும் கையில் எடுக்காமல் அப்பகூட கல்வியை பெரிய முதலாகக் கருதி புத்தகங்களை மட்டும் கொண்டு இடம்பெயர்ந்தோம்! நாங்கள் தென்மராட்சியில் அப்பாவோட வேலைசெய்த வேல் மாமா வீட்ட தங்கினம்.

அப்படியிருக்கையில் சாந்தி பற்றி எந்தவொரு தகவல்களையும் பெறமுடியவில்லை. இப்படி இரண்டு மாதங்கள் மெல்ல மெல்ல நகரும் போது வேல் மாமா வீட்டை கொடுத்திட்டு வெளிநாட்டுக்குப் போகப் போறன் என்று சொல்ல நாங்கள் கிளிநொச்சியின் திருநகரில் இருந்த எங்கட பாட்டி வீட்டுக்குப் போகத் தயாரானோம். பாட்டி வீட்ட போகலாம் என்றதும் என் மனச்சுமை சற்றுக் குறைந்ததாக மனதில் ஒரு உணர்வு வந்தது. அது ஏன் என்று அப்போது தெரிய வில்லை. போன பிறகுதான் புரிந்தது அது ஏன் என்று. அங்க போய் இறங்கியதும் வாசலில் நின்றது வேறு யாருமில்லை. என் சாந்தி. என் சாந் தியேதான். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை எனக்கு. மறு ஜென்மம் கிடைத்ததாகப் பெரிய உணர்வு. எப்படி இவ இங்க நிக்கிறா? என் அம்மா வேற அவளுடைய பேரைச் சொல்லிக் கூப்பிடுறா. எப்டியாவது அம்மா விட்ட கதையக் கிதையப் போட்டு அவளைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று நினைத்து ஒருமாதிரி தெரிந்து கொண்டேன். அப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரியின் மகள்தான் சாந்தி என்று. ஒரே வீட்டில் சொந்தத்துடன் கூடிய புது உறவை எனக்குக் காட்டியதற்குப் பல முறை இறைவனுக்கு நன்றி சொன் னேன். நாட்கள் கடந்தோடின. இருவருமாகச் சேர்ந்து போட்டி போட்டுப் படிக்கத் தொடங்கினோம். மார்கழியில் நடக்கவேண்டிய க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை நடக்கவில்லை எங்களுக்கு. ஆடிமாதம் நடந்தது. பரீட்சை முடிந்ததும் எங்கட சொந்தக்காரர் பலர் யாழ்ப்பாணம் போயிட்டினம். நாங்களும் யாழ்ப்பாணம் போகலாம் என எண்ணியபோது யுத்த அரக்கன் மீண்டும் எம்மைச் சூழ்ந்து கொள்ள திருநகரில் இருந்து முல் லைத்தீவு சென்றோம். உயிரைக் கையில் பிடித்து இடத்திற்கிடம் புத்தகத்தைக் காவிக் கொண்டு செல்வோம். நீண்ட நாட்களுக்குப் பிறகு க.பொ.த.சாதாரண தரப்பெறுபேறு வந்தது. இருவரும் நல்ல பெறுபேறு எடுத்தோம். நானும் என்னவளும் உயிரியல் பிரிவைத் தெரிவு செய்து பத்து மைல் தூரம் சைக்கிளில் சென்று ஒரு பாடசாலையில் கல்வி கற்றோம். இருவரும் சேர்ந்து பள்ளிக்கூடம் போவது வழக்கம். அப்படிப்போகும்போது ஒருநாள் என் காதலை அவளிடம் சொல்லலாம் என எண்ணிச் சொன்னபோது அவள் இஞ்ச பாரும் ஆனந் உம்மை காதலிக்க எனக்கும் விருப்பம்தான். ஆனா இப்ப உள்ள நிலையில மக்கள் தாலியை விற்றுப் பாண், பால்மாபை. மருந்து என்று வாங்கிச் சாப்பிட்டதுபாதி, சாப்பிடாதது பாதி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு திரியிறதிற்கே நேரமில்லை. அதற்குள்ள காதலும் கத்தரிக்காயும். இப்ப படித்துப் பல்கலைக்கழ கம் செல்வம். அதற்குப் பிறகு காதலிப்பம் என்றாள். அவள் சொல்லை வேதவாக்காக நினைத்து அன்றிலிருந்து முழு மூச்சுடன் படிக்கத் தொடங்கினேன். அவளும் என்னுடன் சரி சமமாகப் போட்டி போட்டுக் கற்றாள். இருவரும் மருத்துவ பீடத் துக்குத் தெரிவாகும் வாய்ப்புக் கிடைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வந்தோம். இதனால் எங்கள் இருவரதும் குடும்பத்தினர் யாழ்ப்பாணம் வந்து ம... கினோம். சொந்தவீட்டில் சொந்த பந்தங்களுடன் கூடி ஒரு நேரம் சாப்பிட்டாலும் மூன்று வேளை உணவு உட்கொண்ட திருப்தி கிடைக்கும். இப்படி மகிழ்வாக இருக்கும்போது ஒருநாள் சாந்தியின் அக்காவின் மகளின் பிறந்த தினத்திற்கு எல்லோரும் சென்றோம். அன்று என் வாழ்வில் எதிர்பாராத திருப்பம் ஒன்று நிகழ்ந்தது. எனக்குப் பாரிய சந்தோசம் கிடைத்த நாள். அன்று தன் காதலை எனக் குச் சொன்னாள் சாந்தி. எனக்கு எட்டு வருடத் திற்குப்பின் கிடைத்த சாகாவரமாக சாந்தி வார்த்தை இருந்தது. அதன்பின்னர் இருவ ரும் காதலித்தாலும் இப்பத்தைய மாதிரி ஊரு ராகச் சுத்தவுமில்லை. நேரத்திற்கொருவரை காதலிக்கவுமில்லை. உண்மையான அன்பு டன் வாழ்ந்தோம். நானும் அவளும் பல்கலைக்கழகத்தில் கற்று யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளக வைத்திய சேவையினை நிறைவு செய்து திருமணத்திற்கான நாட்குறித்துத் திருமணம் நடக்கவிருந்த தருணத்தில் ஒருநாள் யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் நடந்த கைக்குண்டு வெடிப்பு என் வாழ்வில் பேரிடியைத் தந்தது. ஆம், அன்று காலை வழமைபோல கோயிலுக்குச் செல்லப் புறப்பட்டாள் சாந்தி. நான் என் வேலை காரணமாக வைத்தியசாலை சென்று விட்டேன்.

கோவிலைக் கும்பிட்டுவிட்டு தன் நண்பி யைச் சந்திக்க திருநெல்வேலி நோக்கிச் சென்ற சமயம் அங்கே கைக்குண்டு வீசப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட சுற்றிவளை ப்பு தேடுதல் என்ற பாரிய பொறிக்குள் எமது சமூகம் தள்ளப்பட்டவேளை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சாந்தி இன்று வரை வீடு திரும்பவில்லை. அவளது அடையாள அட்டையில் வன்னி முகவரி இருந்தது தான் அவளது கைதுக்குக் காரணம். இதெல்லாம் ஒரு காரணமாகக் காட்டி எங்கட எத்தனை உறவுகள் இன்றும் காணாமல் போனோர் பட்டியலில் இருக்கின்றனர். காணாமல் போனோர் வலி என்ன என்பது அதனுடன் தொடர்புட்டவர்களுக்கே தெரியும். நான் என் சாந்தி பற்றி வெளியில் சொல்ல முடியாமல் மனதுக்குள் அழுது காலத்தைக் கரைத்துக் கொண்டிருக்கின்றேன் என எண்ணிக் கொண்டிருந்த ஆனந்தின் நினைவுகளை மனைவி தங்கத்தின் குரல் தட்டியெழுப்பியது. " என்னப்பா சாப்பிட வாங்க என்று கூப்பிட அப்படியே மலைத்துப் போயிருக்கிறியள். எதாவது பிரச்சினையா" இல்லை இல்லை எனக் கூறிய ஆனந்தின் நினைவு மீள தங்கம் தன்னுடன் இணைந்த கதையைச் சொல்ல துடித்தது. தங்கம் பேருக்கேற்ற தங்கம்தான். என்னை மனைவியாக ஏற்றுக்கொள் என்னால் முடியவில்லை. அப்ப டியிருக்க அவளைத்திருமணம்செய்ய நேரிட்டது. சாந்தி வருவாள் வருவாள் என்று ஏழு வருடங்களாகக் காத்திருந்தேன். நான்போகாத கோவில் இல்லை. கேட்காத சாத்திரமில்லை.

எந்த முகாமைக் கண்டதும் வாசல்களில் காத்திருந்து அவளைத் தேடித்தேடிப் பைத்தியமே பிடித்து அலைந் தேன். என் நிலையை வர்ணிக்க என்னி டம் வார்த்தைகளே இல்லை. இப்படி இருக்கையில் அம்மா ஒரே கரைச்சல் தந்து என்னை ஒரே வற்புறுத்திய வண்ணம் இருந்தார். நீ கல்யாணம் கட்டு இல்லையேல் நான் செத் துப் போவன் என ஒரே வசனத்தை மீள மீளச் சொல்லி துன்புறுத்தி வந்தார். அம்மாவிற்கு சொன்னன் என் சாந்தி என்றோ ஒருநாள் வருவாள். அவள் வர நான் கல்யாணம் கட்டுறன் என்று . மனிசி என் கதையைக் கேட்கவே இல்லை. நீ கல்யாணம் கட்டியே ஆகவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று என்னைப் பல இடங்களுக்கு கூட்டிச் சென்று பெண் பார்க்க வைத்தது. கரைச்சல் தாங்கமுடியாமல் ஒரு மாதிரி தங்கத்தக் கல்யாணம் கட்ட ஒத்துக் கொண்டு தங்கத்துடன் தனிமையாகக் கதைத்து என் கடந்த காலத்தைச் சொன்னேன்.

தங்கமும் தன் கடந்த காலத்தில் தான் அனுபவித்த துன்பங்களைச் சொன்னாள். முள்ளிவாய்க்காலில் மூச்சைப் பிடித்துப் பிழைத்து வந்த கதையையும் தன் கண் முன்னால் தன் உறவுகள் அனைத்தையும் இழந்து தவிப் பதையும் தான் அரவிந்தைக் காதலித்து தன் கண் முன்னே அவன் பல்குழலுக்குப் பலியானதால் தனக்கும் கல்யாணம் கட்ட விருப்பம் இல்லை. வீட்டுக் கட்டாயத்திற்காக கட்ட வேண்டியிருப்பதையும் சொல்லி அழுதாள். இருவரும் இளமைச் சுகத்திற் காக அல்ல இறுதிக்காலத்தில் தனிமையில் வாழக்கூடாது என்பதற்காக திருமணத் திற்கு ஒத்துக்கொண்டோம். ஒருவருக் கொருவர் ஒத்தாசையாக இருக்கவேண்டும் என்பதற்காக திருமணம் முடித்தோம். என் மனதில் சாந்தியும் அவள் மனதில் அரவிந் தும் அழியா உருவமாகவுள்ளபோது நாம் எப்படி கணவன்-மனைவியாக வாழ முடி யும். எவ்வாறு சந்தோசமாக வாழமுடியும். திரைப்படங்களில் சொல்வதுமாதிரி முதல் காதல் வலி எங்கோ ஒரு மூலையில் பதிந்து கிடந்து நித்தம் எம்மை அணுஅணுவாகக் கொல்லும். ஆதலால் நாம் படும்பாடுக ளைக் குடும்பத்தினர் பார்த்து கஷ்டப்படக் கூடாது என்பதற்காக திருமணம் முடித்த தும் எமது சொந்த பந்தங்கள் அறிந்தவர்கள் இல்லாத இடத்திற்கு நான் மாற்றலாகிச் சென்று அங்கு தங்கமும் நானும் வாழ்ந்தோம்.

அப்படி வாழ்ந்ததும் நாம் கணவன்-மனைவியாக வாழவில்லை. சகோதரர்களாகவே வாழ்ந்தோம். இன்றும் அப்படியே வாழ்ந்து வருகின்றோம். அப்படியென்றால் குமரன் யார் என்ற கேள்வி உங்களுக்கு எழுவது யதார்த்தமே. அவன் எமது தத்துப்பிள்ளை. இது அவனுக்கும் ஏன் எங்கட அம்மாவுக்குக் கூட இன்றுவரை தெரியாது. கள்ள மண் கொண்டு ஓடிய டிப்பர் மோதித்தள்ளிய விபத்தில் தாய் தந்தை இருவரையும் பலி கொடுத்து இரண்டு மாதக் கைக்குழந்தையாக தாய் தந்தை முகமறியாத பாலகனாக தவித்துக்கொண்டிருந்த அந்தச் சிசுவை தங்கமும் நானும் எமது பிள்ளையாக முழு மனதுடன் ஏற்றுக்கொண்டோம். இழந்தவனுக் குத்தான் தெரியும் அதன் வலிகள்.

தனி மையில் இருப்பவனுக்குத்தான் தெரியும் தனிமையின் கொடுமை. என்றெண்ணியவனுக்கு தொலைபேசி மெல்ல முனங்கி நினைவு படுத்த அவசர அவசரமாக வைத்தியசாலை புறப்பட்டான் தன் தன்னலம் இல்லா உயர் வைத்திய சேவைக்கான...

நிதர்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் ஓய்ந்து எட்டு ஆண்டுகள் கடந்தும் தாயகம் திரும்பத் தடுமாறும் ஈழ அகதிகள்

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் அகதிகள் இந்தியாவின் தமிழ் நாட்டு அகதி முகாம்களில் தற்போது வாழ்கின்றனர்.

தாம் தற்போது வாழும் அகதி முகாமானது ஒருபோதும் தமக்கான சொந்த வீடாகாது என்பதை இவர்கள் நன்கறிந்துள்ளனர் .

எனினும் தமது சொந்த இடத்திற்குத் திரும்பிச் சென்று தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவது என்பது இவர்களுக்கு பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இவர்களைப் பொறுத்தளவில் தாம் வாழும் அகதி முகாம் மட்டுமே தற்போது இவர்களுக்கான வீடாக உள்ளது.



இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து எட்டாவது ஆண்டு நினைவேந்தல் கடந்த மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நினைவுகூரப்பட்டது.

தான் ஒரு பேராசிரியராக வரவேண்டும் என்ற கனவுடன் தனது 20ஆவது வயதில் இலங்கையை விட்டு வெளியேறி தமிழ்நாட்டின் அகதிமுகாமில் தஞ்சம் புகுந்தவரான எஸ்.மூர்த்திக்கு தற்போது 54 வயது. இவர் நான்கு மகன்களின் தந்தையார். ஆனால் பேராசிரியராக வரவேண்டும் என்கின்ற இவரது கனவு உள்நாட்டு யுத்தத்தால் சிதைவுற்றது.



இவர் தற்போது சென்னையிலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் சிறிய பலசரக்குக் கடை ஒன்றை நடத்துகிறார். திருகோணமலையிலுள்ள தனது சொந்த வீட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கான நாளை எதிர்பார்த்து காத்திருக்கிறார்.

'கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். இந்த முகாமில் 25 ஆண்டுகளுக்கும் மேல் வசித்து விட்டேன். சிறிய கடையையும் நடத்தி வருகிறேன். இந்நிலையில் எனது சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்லும் போது அங்கு அனைத்தையும் இலகுவாகப் பெற்றுவிட முடியும் என நான் நினைக்கவில்லை. அங்கு சிறந்த வாழ்வொன்றை நான் வாழ்வதற்கு பல இடர்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்' என தொட்டிலில் படுத்திருந்த தனது ஒரு வயதுப் பேரனை நித்திரையாக்கியவாறு தெரிவித்தார்.



'திருகோணமலையிலுள்ள எனது கிராமத்தில் 1980களில் 55 குடும்பங்கள் இருந்தன. தற்போது அங்கு மூன்று குடும்பங்கள் மட்டுமே உள்ளன. இந்தக் கடையை நான் அங்கு நடத்தினால் என்னால் போதியளவு வருமானத்தைச் சம்பாதிக்க முடியாது' என அவர் தெரிவித்தார்.

அந்த முகாமில் வசிக்கும் 60 வயதான பெண்மணியான ஜி.லக்ஸ்மி தனது சொந்த ஊரான மன்னாருக்குத் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். 'எனது மூத்த மகள் கடந்த ஆண்டு ஊருக்குச் சென்றிருந்தார். ஆனால் அவரால் அங்கிருக்க முடியாததால் மீண்டும் இரண்டு மாதத்தில் இங்கு வந்துவிட்டார். எனது இளைய மகள் இந்த மாதம் தனது கணவரின் இடத்திற்குச் செல்லவுள்ளார்' என லக்ஸ்மி தெரிவித்தார்.

'இங்கிருக்கும் தற்போதைய தலைமுறையினர் இலங்கையிலிருந்து வெளியேறிய போது சிறுவர்களாகவே இருந்தனர். சிலர் தமிழ்நாட்டில் பிறந்தவர்களாகவும் உள்ளனர். உண்மையில் அவர்களின் சொந்த நாடாக இந்தியாவே உள்ள போதிலும் அவர்களும் அகதிகள் என்றே அழைக்கப்படுகின்றனர்' என போரின் இறுதிக்கட்டத்தில் நாட்டிலிருந்து வெளியேறி தமிழ்நாட்டு அகதி முகாமில் அடைக்கலம் புகுந்த 35 வயதான அகதி ஒருவர் தெரிவித்தார்.

'நான் ஒருபோதும் இலங்கையில் இருந்ததில்லை. நானும் எனது சகோதரியும் தமிழ்நாட்டு அகதிமுகாமிலேயே பிறந்து வளர்ந்தோம். இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததால் அங்கு திரும்பிச் செல்ல வேண்டும் என எமது பெற்றோர்கள் விரும்புகின்றனர். ஆனால் நான் கல்லூரிக் கல்வியை இங்கு நிறைவுசெய்ய வேண்டும். தொழில் ஒன்றைப் பெற்றுக் கொண்டு முகாமிற்கு வெளியே சென்று வசிக்க விரும்புகிறேன்' என 19 வயதான மாணவி பி.ஜென்சி தெரிவித்தார்.

தற்போது தமிழ்நாட்டு அரசாங்கத்தால் நடத்தப்படும் 107 அகதி முகாம்களில் 64,208 ஈழத்தமிழர்களும், முகாம்களுக்கு வெளியே குறைந்தது 40,000 வரையான ஈழத்தமிழர்களும் வாழ்வதாக ஈழத்தமிழ் அகதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனத் தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் புள்ளிவிபரத்தின் படி, அகதி முகாம்களில் வாழும் ஈழத்தமிழர்களில் 40 சதவீதத்தினர் தமது சொந்த நாடான இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புகின்றனர்.

எனினும், தமிழ்நாட்டில் இவர்கள் நீண்டகாலம் தங்கியிருந்தவர்கள் என்ற வகையில் இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் போது அங்கு இவர்கள் தமக்கான உடைமைகள், அடிப்படைச் தேவைகள், தமக்கான அடையாளம், தொழில் வாய்ப்பு போன்றவற்றை மீளவும் பெற்றுக் கொள்ள முடியுமா எனக் கேள்வியெழுப்புகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் என்பது மக்களின் மனங்களில் மாறாத நினைவுகளாக உள்ளன. மே 18 ஐ உலகில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் 'துக்கநாளாக' அனுஷ்டிக்க வேண்டும் என அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் உள்ள புனித போல் தேவாலயத்திற்கு அருகில் எந்தவொரு நினைவு வணக்க நிகழ்வுகளும் நடத்தப்படக் கூடாது என 14 நாள் தடையுத்தரவை முல்லைத்தீவு நீதிபதி அறிவித்திருந்தார். இவ்வாறான நிகழ்வுகள் 'நாட்டின் ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு மற்றும் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும்' என்ற அடிப்படையிலேயே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இறுதிக்கட்ட உள்நாட்டு யுத்தத்தின் போது 40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா மதிப்பிட்டது. இவ்வாறு தமிழ் மக்கள் போர் வடுக்களை சுமந்துள்ளனர்.

இந்நிலையில் போரின் போது தனது அனைத்து ஆவணங்களையும் தொலைத்தமையாலும் நிதி நெருக்கடி உள்ளதாலும் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் கூட இடரை எதிர்நோக்குவதாக தமிழ் நாடு அகதி முகாமிலிருந்து அண்மையில் வன்னியிலுள்ள தனது சொந்த வீட்டிற்குத் திரும்பிச் சென்ற தமிழர் ஒருவர் தெரிவித்தார்.

இவர் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளதால் மீண்டும் கும்மிடிப்பூண்டி அகதி முகாமிற்குத் திரும்பிச் சென்றுள்ளார். 'நாங்கள் ஒரு தடவை அகதி ஆகியதால் எப்போதும் அகதிகளாகவே வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்' என அவர் தெரிவித்தார்.

'நாங்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்ததன் பின்னர் எமது அடையாளங்களை இழந்தோம். நாங்கள் இதனை எவ்வளவு தூரம் தேடிய போதிலும் இதனை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனை நாங்கள் இந்தியாவிலோ அல்லது இலங்கையிலோ திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாது' என பெயர் வெளியிட விரும்பாத ஈழத்தமிழர் ஒருவர் தெரிவித்தார்.

இதுவே இந்தியாவின் தமிழ் நாடு அகதி முகாமிலுள்ள ஈழத் தமிழ் அகதிகள் பலரின் மனநிலை.

வழிமூலம் : Livemint
ஆங்கிலத்தில் : Dharani Thangavelu
மொழியாக்கம் : நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் டிராபி

# அரையிறுதிக்கு முன்னேறப்போகும் அணியினர் யார்...? யார்...?

Points Table

| GROUP A | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| TEAMS | MAT | WON | LOST | TIED | N/R | PTS | NET RR |
| England | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +1.069 |
| Bangladesh | 3 | 1 | 1 | 0 | 1 | 3 | 0.000 |
| Australia | 2 | 0 | 0 | 0 | 2 | 2 | |
| New Zealand | 3 | 0 | 2 | 0 | 1 | 1 | -1.058 |

| GROUP B | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| TEAMS | MAT | WON | LOST | TIED | N/R | PTS | NET RR |
| India | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.272 |
| South Africa | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.000 |
| Sri Lanka | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.879 |
| Pakistan | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -1.544 |

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட், பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. குரூப் - ஏ பிரிவில், இங்கிலாந்து அணி இரண்டு வெற்றியுடன் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. ஆனால், மீதமுள்ள மூன்று அணிகளில் யார் அரையிறுதிச் சுற்றுக்குள் செல்வார்கள் என்று கிரிக்கெட் விமர்சகர்களாலேயே யூகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி விளையாடிய இரண்டு போட்டிகளுமே மழையால் பாதித்ததால், மனதளவிலும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும். அந்த அணி இரண்டு புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதற்கிடையே, அடுத்த சுற்றுக்கு முன்னேற அது பலம் வாய்ந்த இங்கிலாந்து அணியை வெல்ல வேண்டும். அதே நேரத்தில், பங்களாதேஷ், நியூஸிலாந்து அணிகள் தலா ஒரு புள்ளியுடன் உள்ளன.

பங்களாதேஷ் - நியூஸிலாந்து போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு (அவுஸ்திரேலியா தோல்வியடைந்தால்) அரையிறுதிக்குச் செல்ல வாய்ப்புள்ளது.

ஆனால், அவுஸ்திரேலியா வெற்றி பெற்றால், இங்கிலாந்து அணியுடன் சேர்ந்து அந்த அணியும் அரையிறுதிக்குள் சென்றுவிடும். வருண பகவான் வழி விட்டால் மட்டுமே இது நடக்கும்.

போட்டிகள் மழையால் பாதிக்கப்பட்டால் நிலைமை சிக்கல்தான். குரூப்-ஏ பிரிவில் இங்கிலாந்தைத் தவிர மற்ற அணிகளுக்கு சிறப்பான ரன் ரேட்டும் இல்லை.

குரூப் - ஏ-வை விட, குரூப்-பி பிரிவில்தான் பயங்கர சிக்கல் நிலவுகிறது.

இந்தியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நான்கு அணிகளுமே தலா ஒரு வெற்றி பெற்று, இரண்டு புள்ளிகளுடன் உள்ளன.

இலங்கையுடனான போட்டியில் எளிதாக வென்று, குரூப் - பி பிரிவில் முதல் அணியாக இந்தியா அரையிறுதிக்குள் செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதைத் தவிடுபொடியாக்கி அதிர்ச்சியளித்துள்ளது இலங்கை.

பலம் வாய்ந்த தென்னாபிரிக்க அணியை பாகிஸ்தான் அசைத்துப் பார்த்துவிட்டது. இந்த இரண்டு ட்விஸ்ட்களாலும் குரூப்-பி பிரிவில் அடுத்தடுத்து நடக்க உள்ள போட்டிகள் அனல் பறக்கும்.

அடுத்ததாக இந்தியா - தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் - இலங்கை அணிகள் மோதவுள்ளன. இந்த இரண்டு போட்டிகளுமே, கிட்டத்தட்ட காலிறுதிச் சுற்று மாதிரிதான். இந்தப் போட்டியில் வெல்லும் அணிகள் மட்டுமே அரையிறுதிக்குச் செல்ல முடியும்.

இந்தப் போட்டிகள் மழையால் பாதிக்கப்பட்டால், அரையிறுதிக்குச் செல்ல ரன் ரேட் முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படும். இந்தியாவைப் பொறுத்தவரை பாகிஸ்தான், இலங்கை இரண்டு அணிகளுக்கும் எதிரான போட்டியிலும் 300 ரன்களைக் குவித்துள்ளது. இதனால், டீசன்டான ரன் ரேட்டை இந்திய அணி தக்கவைத்துள்ளது.

குறிப்பாக, இலங்கை அணியுடன் தோல்வியடைந்த போதும் ரன் ரேட் சிறப்பாக உள்ளதால், இந்திய அணி குரூப்-பி பிரிவில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

ஆனால், அரையிறுதிக்கு முன்னேற பலம் வாய்ந்த தென்னாபிரிக்க அணியை வென்றே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் இந்தியா உள்ளது. இரண்டு பிரிவுகளிலுமே எஞ்சிய ஆட்டங்கள் அனைத்தும் லீக் சுற்றைப் போல இல்லாமல், காலிறுதிச் சுற்று போலத்தான் இருக்கும். ஒவ்வோர் அணியும் அரையிறுதிக்குள் செல்ல கடுமையாகப் போராடியாக வேண்டும்.

இதில், இங்கிலாந்து அணி மட்டும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சற்று ரிலாக்ஸாக ஆடலாம். இங்கிலாந்து அணிக்குதான் அது சம்பிரதாயப் போட்டியாக இருக்கும். அவுஸ்திரேலியாவுக்கு அது, வாழ்வா... சாவா போட்டிதான். இதனிடையே, அவுஸ்திரேலிய அணியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, கெத்தாக அரையிறுதிக்குள் நுழைவோம் என்று இங்கிலாந்து அணி வீரர்கள் கூறிவருகின்றனர்.

இதில், எந்த அணிகள் சம்பியன்ஸ் ட்ராபி அரையிறுதிக்கு முன்னேறும் என்று இன்னும் நான்கு நாட்களில் தெரிந்துவிடும். அதுவரை இன்னும் நிறைய ஆட்டம் இருக்கின்றன. பொறுத்திருந்து பார்ப்போம். (க)














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்:- ஆனந்தஜோதி
பாடியவர்:- பி.சுசீலா
இசை : - விஸ்வநாதன் ராமமூர்த்தி
வரிகள்: - கண்ணதாசன்



நினைக்க தெரிந்த மனமே
உனக்கு மறக்க தெரியாதா?
பழக தெரிந்த உயிரே
உனக்கு விலக தெரியாதா?
உயிரே... விலக தெரியாதா?
நினைக்க தெரிந்த மனமே
மயங்க தெரிந்த கண்ணே
உனக்கு உறங்க தெரியாதா?
மலர தெரிந்த அன்பே
உனக்கு மறைய தெரியாதா?
அன்பே... மறைய தெரியாதா?
நினைக்க தெரிந்த மனமே
எடுக்க தெரிந்த கரமே
உனக்கு கொடுக்க தெரியாதா?
இனிக்க தெரிந்த தமிழே
உனக்கு கசக்க தெரியாதா?
படிக்க தெரிந்த இதழே
உனக்கு முடிக்க தெரியாதா?
படர தெரிந்த பனியே
உனக்கு மறைய தெரியாதா?
பனியே மறைய தெரியாதா?
நினைக்க தெரிந்த மனமே
கொதிக்க தெரிந்த நிலவே
உனக்கு குளிர தெரியாதா?
குளிரும் தென்றல் காற்றே
உனக்கு பிரிக்க தெரியாதா?
பிரிக்க தெரிந்த இறைவா
உனக்கு இணைக்க தெரியாதா?
இணைய தெரிந்த தலைவா
உனக்கு என்னை புரியாதா?
தலைவா என்னை புரியாதா?
நினைக்க தெரிந்த மனமே

# கனவுகளும் பலன்களும்



அசையும் பொருட்களோ அசையாத பொருட்களோ வாங்குவீர்கள். மனதில் புதிய உற்சாகமும் தெம்பும் ஏற்படும்.

சிங்கம் உங்களை கடிப்பதுபோல கனவு கண்டாலோ சில பிரச்சினைகள் உண்டாகும். அல்லது அதாவது வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தாலும் புத்திரர்களால் தடை உண்டாகும். துர்க்கை அம்மனை வணங்கினால் பாதகம் எல்லாம் சாதகமாகும்.

**யானை கனவில் வந்தால் என்ன பலன்**

யானையை கனவில் கண்டால் அரசாங்கத்தால் இலாபமும் யோகமும் ஏற்படும். நீண்டகாலமாக நிலுவையில் இருந்த வழக்குகளுக்கு, நல்ல விதமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் தீர்ப்பு கிடைக்கும்.

யானை உங்களை துரத்தி வருவது போல கனவு கண்டால் பழைய விவகாரங்களால் மனச்சங்கடங்களும் புதியதாக பிரச்சினைகளும் உருவாகும். அரசாங்கத்தால் தொல்லைகள் எழும். வில்லங்க விவகாரங்களில் சிக்கி விடுவீர்கள். இதனால் மனச்சஞ்சலம், கடன் சுமையும் உண்டாகும்.

யானை உங்களுக்கு மாலை போடுவது போல கனவு கண்டால் பெரிய பதவி கிடைக்கும். பிரிந்தவர்கள் ஒன்று சேருவார்கள். செல்வாக்கு உயரும். திருமணம் ஆகாதவர்களுக்கு நல்ல இடத்திலிருந்து வரன் அமையும்.

யானை மீது நீங்கள் உட்கார்ந்து வருவது போல கனவு கண்டால் வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருந்தால் வேலை கிடைக்கும். பதவியில் இருப்பவர்களுக்கு உயர் பதவி ஏற்படும். குடும்பத்தாரிடத்தில், உறவினர்களிடத்தில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

**கனவின் நிலைப்பாடுகள்**

எந்தக் கனவுகளும் விருப்பத்திற்கு உட்பட்டு வருபவை அல்ல. அவை தன்னிச்சையாக நிகழும் மனதின் உள்ளுணர்வு வெளிப்பாடுகள். அவற்றுக்கும் பலன்கள் உண்டு. இரவில் முதல் சாமத்தில் கண்ட் கனவு ஒரு வருடத்திலும் 2 ஆம் சாமத்தில் கண்ட கனவு 3 மாதத்திலும் 3 ஆம் சாமத்தில் கண்ட கனவு ஒரு மாதத்திலும் பலிக்கும்.

சுப சொப்பனங்கள் பசு, எருது, யானை தேவாலயங்கள், அரண்மனை, மலை உச்சி, விருக்ஷம் இவைகளின் மேல் ஏறுதல், மாமிச பக்ஷணம், தயிரன்னம் புசித்தல், வெள்ளை வஸ்திரம் தரித்தல், ரத்தின ஆபரணங்கள் காணல், சந்தனம், பூசிக் கொள்ளல், வெற்றிலை, பாக்கு தரித்தல், கர்ப்பூரம், அகில், வெள்ளை புஷ்பம் இவைகளை கண்டால். சொற்ப சம்பத்து அகப்படுதல், கடப்பில் இவைகளை கண்டால் தனலாபம் உண்டு. நீர் நிலைகளை கனவில் பார்த்தால் நல்ல சகுனமாக கருதப்படுகிறது. ஆறு பெருக்கெடுத்து ஓடுவது போல கனவு கண்டால் அடுத்தடுத்து நல்ல செயல்கள் நடக்கும். நீர் நிலைகளில் நீராடு வது போல் கனவு கண்டால் சுப பலன்கள் ஏற்படும். வாழ்க்கையின் அடுத்த நிலைக்கு செல்லப் போகிறார் என்பதை இந்தக் கனவு தெரிவிக்கிறது. குருவிக் கனவுகள் குருவிகளைக் கனவில் காண்பது நோயுற்றிருப்பின் நோய் அகலும். குருவி தன் வீட்டில் கூடு கட்டுவதாகக் கண்டால் திருமணமாகாதவருக்கு திருமணமும் திருமணமாகியிருந்தால் புத்திர பாக்கியமும் உண்டாகும். குருவிகள் கூட்டைப் பார்த்தால் கூட இந்தப் பலன் உண்டு.

(தொடரும்)

# முருங்கையை முறித்து வளர்ப்போம்

(உருவகம்)

அன்பானவர்களே... இனிமையான ஞாயிறு வணக்கம்.

நான்தான் ஜிம்மிக்குட்டி கதைக்கிறன். நானும் நீங்களும் கதைக்கிறம்...ம்... எவ்வளவு சந்தோசமாக இருக்குது. இப்பெல்லாம் மரக்கறிகள் சரியான விலையாம். முத்தம்மாக்கா வீட்டு முருங்கைக்காயெண்டால் நல்ல களிக்காயாம். அவ முந்தி வெத்திலைத் தோட்டம் வைச்சு அதைத் தலையிலை சுமந்து சந்தைக்குப் போறவாவாம். வெத்திலை செல்வம் கொழிக்கிற லட்சுமி எண்டு பெரியவர் சொல்லுவார். அதைத் தலையிலை சுமந்து தான் அவ எப்பவுமே உண்மையா, நேர்மையா, சந்தோசமா சிரிச்ச முகத்தோடை ஒரு குறையுமில்லாமை வாழ்ந்தவாவாம். இப்ப அவை இடம்பெயர்ந்து முருங்கையும் பப்பாவும் வைச்சு நல்ல இலாபமாம். பெரியவர் அப்பப்ப உதவிகள் செய்வார். அவையும் அதைத் திரும்பிக் குடுப்பினம். இரண்டு பிள்ளையள்தான். ஆம்பிளைப்பிள்ளை என்ஜினியர். வாகனத்திலைதான் வந்து ஏத்திக்கொண்டு போவினம். பொம்பிளைப்பிள்ளை பட்டதாரி ரீச்சர். ஆனா ஓய்வான நேரம் தோட்டத்துக்கை தேப்பன் தாய்க்குச் சமமா நிண்டு சேறாடி உழைப்பினம்.

முத்தம்மாக்காபசுவின்ரை வேலையள் பார்க்க வந்து போறவா. ஆயுசு நூறுதான். கதவைத் திறந்து கொண்டு வாறா. நேரா வளவுக்கை போறா. நானும் போறன். கந்தையாண்ணை தண்ணி கட்டுறார். பெரியவர் நிழலுக்கை கதிரை போட்டு இருக்கிறார். முத்தம்மாக்கா கதைக்கிறா. "என்ன கந்தையாண்ணை முருங்கையன் நெடுமியா வானத்தைப் பார்க்க உயருது. அதைக் கவனிக்கிறேல்லையே... நெடுக்க விடாமல் முறிக்க வேணும். பிறகு பூக்கட்டினால் முறிக்கவும் மனசு வராதண்ணை..." எவ்வளவு அறிவோடு கதைக்கிறார். பெரியவர் ஏதோ யோசிக்க மெதுவாச் சிரிக்கிறார்... முத்தம்மாக்கா திரும்பிறா...

"என்ன முத்தம்மா... விட்டால் நீயே... முறிச்சு விடுவாய் போல..."

"இல்லை ஐயா கோயில்களும் கொடியேறுது. மறக்கறிக்கு நல்ல கிராக்கி எல்லே... அதுதான்..." கதைச்சுக் கொண்டே வைக்கோலைப் பிரிச்சுப்போடுறா. தாயம்மா நக்கு நக்கெண்டு அவவை நக்கிக்குடுக்குது. அவவும் தடவித் தடவி அதோடை கதைக்கிறா...

"என்ன தாயம்மா...கஞ்சி குடிக்கேல்லையோ... அதுதான் வந்திட்டன் எல்லே...ம்... போதும்... போதும்.., சலுகை சொல்லுறாய்... சரியான செல்லக்குட்டிதான் விடனை என்னை... வேலை பார்க்க வேண்டாமே..." கடவுளே... இது என்ன பாசம்... வாய் விடாச்சீவன்... எவ்வளவு விசயத்தைச் சொல்லிப் போட்டுது...

"அதுசரி முத்தம்மா முருங்கையை வளர்க்கிறதே ஒரு கவனத்தோடை செய்ய வேணும் என்ன..." கறுப் படிக்காமை, பூச்சி விழாமை, மயிர்க் கொட்டி பிடிக்காமை.

"ஓம் பெரியவர்... பிள்ளையைப் பார்த்துப் பார்த்து வளக்குமாப் போலை முருங்கையை வளர்க்க வேணும்..." பெரியவர் கொடுப்புக்கை சிரிக்கிறார்.

"அது என்ன முருங்கையைப் பற்றிச் சொன்னால் ஏதோ பிள்ளை வளர்ப்பைப் பற்றிச் சொல்லுறாய்..." முத்தம்மாக்கா ஒரு வெட்டு வெட்டித் திரும்பிப் பார்க்கிறா.

"ஓமைய்யா...சும்மாவே சொல்லுறவை... முருங்கையை முறிச்சு வளர்க்க வேணும்... பிள்ளையை அடிச்சு வளர்க்க வேணும் எண்டு..." ம்... பெருமையாச் சொல்லுறா... பெரியவரிட்டை வாயைக் குடுத்திட்டா வாங்கிக் கட்டப் போறா... லதாக்குட்டியின்ர அம்மாவும் உடுப்புக் காயப் போட்டிட்டு சிரிச்சுக் கொண்டே வாறார்... எனக்கும் சிரிப்பு வருது... பெரியவர் கதிரையை நிழலுக்கை போட்டுக்கொண்டு சாய்ந்து இருக்கிறார்... ஆசுவாசமாப் பெரிய மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு உறுதியா ஏதோ... சொல்லத் தொடங்கிறார். வானம் கறுக்குது...ம்... இனி கொட்டு மழைதான்...ம்...சேர்ந்து நனைவம்...

"அதென்ன விசயம்... முருங்கையும் பிள்ளையும் ஒண்டோ முத்தம்மா... மரத்தை நுனி முறிச்சா அது கிளை விட்டுச் சடைச்சுப் பதிவா வளரும்... பிள்ளையை அடிச்சால்... அது மாறாத வடுவாகி கன்றிப் போடும். பிள்ளை மரமில்லை. அது...உயிரும் சதையும் உணர்வும் உள்ள ஆறறிவு ஜீவன்"

ம்...கொஞ்சம் கோபம் வருது போல... முத்தக்காவும் விடேல்லை... தனக்குத் தெரிஞ்சதை ... கஞ்சியை ஆத்திக்கொண்டு சொல்லுறா... பணிவாத்தான்...

"ஐயா உலக சிறுவர் தினக் கொண்டாட்டத்திலை ஒரு படிச்ச அதிகாரி சொன்னார்; அந்த நாளிலைதான் வாங்கிய அடிதானாம் இண்டைக்கு அந்தப் பெரிய பதவியிலை இருந்து மேடையிலை பேசுற அளவுக்கு வைச்சிருக்காம்... அடிபோல அண்ணன் தம்பி கூட உதவ மாட்டினமாம்..." கஞ்சி இன்னும் ஆறேல்லை. பெரியவர் தொண்டையைச் செருமிக்கொண்டு தொடர்கிறார். சிவசிவா...அந்தப் பாவி மனிசனுக்குத் தெரியேல்லை. அடியே வாங்காமப் படிச்சிருந்தா... இதை விட... உயர்வான பதவியிலை அவர் இருந்திருப்பார் எண்டு கனக்கப் பெரியபெரிய ஆக்கள் இப்பிடித்தான் மைக்கைப்பிடிச்சுக்கொண்டு... தங்கடை உயர் பதவிக்கு தாங்கள் வாங்கிய அடிதான் காரணம் எண்டு... அடிச்சுப் பேசினம். அடிக்கு, அதன் வலிக்குப் பயந்து கடுமையாக் கண்விழிச்சுப் பாஸ் பண்ணியிருப்பினம். ஆனால் தண்டனைக்கும் பெறுபேறுக்கும் ஒரு தொடர்பும் இல்லை... உண்மையிலே மகிழ்வான சூழலில் அன்பும் கண்டிப்பும் கவனிப்பும் சேர்ந்து ஊக்கம் கொடுக்க படித்திருந்தால் அந்த அனுபவமே சுகமானது. ம்... மழை ஓய்தமாதிரி...ஷ்...அவரவர் மெல்ல எழும்பிப்போங்கோ. நானும் நித்திரை மாதிரிக் கிடக்கப் போறன்...

**பாரதி கணேஸ்**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# ஒரு கிடாயின் கருணை மனு

## திரைவிமர்சனம்

48/100

ஒரு கிராமமே சேர்ந்து செய்யும் குற்றமும் குளறு படிகளும்தான் 'ஒரு கிடாயின் கருணை மனு' போலியான கிராமத்தைக் காட்டி எரிச்ச லாக்காமல், விருதுப்படம் எனும் வேடம் தரிக்காமல், மிகமிக இயல்பாக மனிதர்களை உலவவிட்டு அதகளப் படுத்தியிருக்கிறார் அறிமுக இயக்குநர் சுரேஷ் சங்கையா.

35 வயதுவரை திருமணம் நடக்காமல், பாட்டியின் வேண்டுதலுக்குப் பிறகு விதார்த்துக்குத் திருமணம் நடக்கிறது. வேண்டுதலை நிறைவேற்ற முனியாண்டி சாமிக்கு கிடாய் வெட்டி நேர்த்திக்கடன் கொடுக்க, ஒரு லொறியில் கிளம்புகிறது விதார்த்தின் கிராமம்.

செல்லும்வழியில் எதிர்பாராமல் ஒரு சம்பவம் நடந்துவிட, கோயிலுக்குப் பக்கத்திலேயே இருந்தாலும் குலசாமிக்கு நேர்த்திக்கடனை நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறார்கள். அப்படி என்ன சம்பவம் நடந்தது, எப்படி அதை எதிர்கொள்கிறார்கள் என்பதே ஒருகிடாயின் கருணை மனு.

வேல்முருகனின் கொலைச்சிந்து பாடலோடு படம் தொடங்குவது, கிடாயின் பார்வையிலேயே தொடக்கக்காட்சிகள் விரிவது என ஆரம்பத்திலேயே நிமிர்ந்து உட்கார வைக்கிறார் இயக்குநர். கொண்டி, ஏழரை, அரும்பாடுபட்டு, வக்கீல் மாமா என்று விதவிதமான பட்டப்பெயர்களுடன் திரியும் யதார்த்தமான கிராமத்து மனிதர்களைச் சித்தரித்த விதத்தில் நாமே ஒரு கிராமத்துக்குச் சென்று சிலமணி நேரங்கள் வாழ்ந்துவிட்ட திருப்தி.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஐந்தாவது கியருக்கு மாறும் படம், கிளைமாக்ஸ் வரைக்கும் விறுவிறுப்பு குறையாமல் சீறிப் பாய்கிறது. கிராமத்துக் கதையை அந்த மனிதர்களுக்கே உரிய நக்கல் நையாண்டிகளோடு படைத்திருக்கும் இயக்குநர் சுரேஷ் சங்கையாவுக்கு அழுத்தமான கைகுலுக்கல்கள்.

கல்யாணம் ஆனபிறகு மனைவியுடன் நெருங்க முடியாமல் தவிப்பது, சிக்கலில் மாட்டிக்கொண்டு குற்ற உணர்வில் துடிப்பது, செய்த குற்றத்தை இறுதியில் ஒப்புக்கொண்டு மன்றாடுவது என ராமமூர்த்தியாகவே மாறியிருக்கிறார் விதார்த். அத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் எனக்கு 35 வயசுன்னு யார்டா சொன்னது? என்று விதார்த் எகிறுவது சோகக்கலாட்டா.



நாயகியாக ரவீணா ரவி. கணவனுடன் தனிமையைப் பகிர்ந்துகொள்ள முடியாத ஏக்கமும் இத்தனை சிக்கலுக்கும் அவரே காரணம் என்கிற பரிதவிப்புமாக கனமான கதாபாத்திரம். முடிந்தவரை முயற்சித்திருக்கிறார்.

சமையல்காரர் சேவலாக வரும் சித்தன் மோகன், கவிஞர் விக்ரமாதித்யன், ஜெயராஜ், வக்கீலாக வரும் ஜோர்ஜ், சமையல் கான்ட்ராக்ட்டுக்குக் கிளம்பி வரும் ராஜா, கொண்டியாக வயது வித்தியாசம் இல்லாமல் எல்லோரையும் வறுத் தெடுக்கும் ஆறுபாலா, அரும்பாடுபட்டு அடக்கம் பண்ணணும்பா என்று எல்லா வாக்கியங்களுடன் அரும்பாடு சேர்த்துப் பேசும் ஹலோ கந்தசாமி, கசாப்புக் கடைக்காரர், முனங்கிக்கொண்டே திரியும் லொறி ஓனர் என்று ஒவ்வொருவரும் நடிகர்களாக இல்லாமல் அசல் மனிதர்களாகவே நினைவில் நிற்கிறார்கள்.

இவ்வளவு இயல்பான, சரளமான, நக்கலான கிராமத்து வசனங்களை தமிழ் சினிமாவில் சமீபத்தில் கேட்டதாக நினைவில்லை. சினிமாத்தனமாக இல்லாமல் இயல்பாக விழுந்து கொண்டே இருக்கும் வசனங்களால் தியேட்டர் அதிர்ந்து கொண்டேயிருக்கிறது. இவன் என்ன உப்புமாக்கு கத்திரிக்கா கேக்குறான், கொன்னவனுக்கு நாலு மிதின்னா, நின்னவனுக்கு ரெண்டு மிதி விழத்தான் செய்யும் என்று காட்சிக்கு காட்சி வசனங்களில் ஸ்கோர் பண்ணுகிறார்கள் குருநாதனும் சுரேஷ் சங்கையாவும். ரகுராமின் அந்த டைட்டில் பாடலும், பின்னணி இசையும் நிறைவு. ஒரு பறவையைப்போல பொட்டல்காட்டை பறந்து பறந்து படம் பிடித்திருக்கும் ஆர்.வி.சரணின் கமரா பக்குவமாக கதைக்கான பதட்டத்தைக் கூட்டுகிறது.

கிராமத்து மனிதர்களை இத்தனை அறமற்றவர்களாகவும் அறிவற்றவர்களாகவும் காட்டியிருப்பது பெரிய நெருடல். இத்தகைய சூழல்களில் நகரத்து மனிதர்களைவிடவும் கிராமத்துப் பெரியவர்கள் சிறப்பாகவும் அதே சமயம் மனிதாபிமானத்தோடும், மாண்போடும் தடாலடியாவும் செயற்படக் கூடியவர்கள்.

கூடவே அத்தனை பெண்களையும் குழந்தைகளையும் வைத்துக்கொண்டு இப்படியெல்லாம் யாரும் நடந்துகொள்வார்களா? என்கிற கேள்வியும் எழுகிறது. அதனாலேயே திரைக்கதை உருவாக்க வேண்டிய நம்பகத்தன்மை, உரிய அளவில் திரள மறுக்கிறது. அப்படி ஒரு விடயத்தைச் செய்துவிட்டு எல்லோரும் கூட்டாக உட்கார்ந்து உப்புமா கிண்டித் தின்பது, இரவில் உறங்குவது, லொறி ஓனரிடம் எகிறுவது என நம்பகத்தன்மை அற்ற காட்சிகள் சில.


ஆட்டை அவிழ்த்துவிடுவதுடன் படத்தை முடித்திருந்தால் கவிதையாக இருந்திருக்கும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் சரணாகதியடைந்த இலங்கை

## பொருளாதாரம் கட்டியெழுப்பப்படுமா?





இலங்கை விற்பனைக்கு விடப்பட்டுள்ளதா? என மே 29 அன்று பி.பி.சி ஊடகம் கேள்வி யெழுப்பியது. அதாவது சீனா விடமிருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்து வதில் பெரும் நெருக்கடியைச் சந்திப்பதால் தனது நாட்டின் முக்கிய சொத்துக்களை சீன நிறுவனங்கள் கையகப்படுத்து வதற்கு அனுமதித்து வருகிறது என பி.பி.சி ஊடகம் தெரிவித் துள்ளது.

2007இல், சீனாவின் எக்சிம் வங்கி அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்காக முதன் முதலில் தனது நிதியை முதலீடு செய்தது. இத்துறை முகம் 1:3 பில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டது. இதே போன்று 900 மெகாவாட் நுரைச் சோலை மின்னாலை நிர்மாணத் திற்காக சீனாவால் 1.35 பில்லி யன் டொலர் செலவிடப்பட்டது.

2010ல், விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 200 மில்லியன் டொலர் நிதி சீனா வால் கடனாக வழங்கப்பட் டது. 2012இல், சீனாவால் மேலும் 810 மில்லியன் டொலர் நிதி கடனாக வழங்கப்பட்டது.

2011இல், மகிந்த ராஜபக்ஷ அனைத்துலக துடுப்பாட்ட அரங்கம் 700 மில்லியன் ரூபா செலவிலும் அம்பாந்தோட் டைக்கு அருகில் மத்தல ராஜ பக்ஷ அனைத்துலக விமான நிலையம் 26 பில்லியன் ரூபா செலவிலும் சீனாவால் கட்டப் பட்டது. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையும் சீனாவால் 776 பில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது.

இதுமட்டுமல்லாது 15 பில்லி யன் ரூபாய் செலவில் அம்பாந் தோட்டை விளையாட்டு வலயம் சீனர்களால் அமைக்கப்பட் டது. 2013இல், தொடருந்துப் பாதையை நிர்மாணிப்பதற் காக இலங்கைக்கு 272 மில்லி யன் டொலர் நிதி சீனாவால் கடனாக வழங்கப்பட்டது.

2008 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில், சீனாவால் 6 பில்லியன் டொலர் கடனாகவும் உதவியாக வழங் கப்பட்டது. தற்போது அம்பாந் தோட்டைத் துறைமுகம் கைவி டப்படும் நிலை காணப்படு கிறது.

இதேபோன்று ராஜபக்ஷ தேசிய அரங்கும் கைவிடப்படும் நிலையிலும் மகிந்த ராஜபக்ஷ அனைத்துலக துடுப்பாட்ட அரங்கு மற்றும் மத்தல ராஜ பக்ஷ அனைத்துலக விமான நிலையம் போன்றனவும் பயன் பாடற்ற நிலையில் காணப்படு கிறது.

அம்பாந்தோட்டைத் துறை முகத்தைக் கட்டுவதற்காக சீனாவிடமிருந்து பெற்ற கடனை அடைக்க முடியாது. இலங்கை அரசு பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இதனால் அம்பாந்தோட்டைத்துறைமுகத் திற்குரிய ஏழு கொள்கலன் முனையங்களில் நான்கை சீனா 35 ஆண்டுகாலக் குத்த கைக்கு எடுத்துள்ளது. அத் துடன் அம்பாந்தோட்டைக்கு அருகிலுள்ள 15,000 ஏக்கர் நிலமும் சீனாவால் நீண்ட காலக் குத்தகைக்குப் பெறப்பட வுள்ளது.

நுரைச்சோலை நிலக்கரி ஆலையை அமைப்பதற்காக சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனை மீளச்செலுத்து வதில் இடரை எதிர்நோக்கிய தால் ஏப்ரல் 17, 2017 அன்று இது செயலிழந்தது. மார்ச் 13, 2016 அன்று இந்த ஆலையின் செயற் பாடுகள் இடைநிறுத்தப்பட் டன.

2012இல், இந்த ஆலையின் கொதிகலன்களில் ஒன்றில் ஒழுக்கு ஏற்பட்டது. ஆகவே இந்த ஆலையை சீனாவைப் பொறுப்பேற்குமாறு இலங்கை கோரியுள்ளது.

மத்தல ராஜபக்ஷ அனைத் துலக விமானநிலையத்தை நிர்மாணிப்பதற்காக சீனா விடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துவதி லும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள் ளது.

இதனால் இந்தக் கடன் பிரச்சினையை சமாளிப்பதற் காக மத்தல அனைத்துலக விமான நிலையம் மற்றும் அம் பாந்தோட்டைத் துறைமுகம் உட்பட்ட பாரிய திட்டங்களின் சில பகுதிகளின் பொறுப்பை சீனாவிடம் ஒப்படைத்துள்ளது.

இலங்கை அரசுக்கு பெரும் கடன் பிரச்சினை உள்ளது. பாரிய கட்டுமானத் திட்டங் களை மேற்கொள்வதற்காக ஒரு பத்தாண்டிற்குள் பெருமளவு நிதியை கடனாகப் பெற்றுக் கொண்ட போதிலும் இதனால் பெறப்படும் நன்மைகள் போதி யதாகக் காணப் படவில்லை.

இந்தக்கடனைமீளச்செலுத்து வது பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கான மாற்றுத் தீர்வொன்றை ஆராய்ந்து வரு கிறது' என Forbes செய்தி வெளியிட்டுள்ளது.

சீன நிறுவனங்களிடம் பாரிய திட்டங்களைக் கட்டுப்படுத்து வதற்கான அதிகாரத்தைக் கையளிப்பதற்கான ஏற்பாடு களை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மேற்கொண்டு வரு கிறார்.

நாங்கள் இதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. எமக்கு எமது பணமே வேண்டும், மாறாக உங்களுடைய வெறுமை யான விமானநிலையங்கள் தேவையில்லை' என சீனத் தூதுவர் ஜி ஜியான்லியாங்க், பிரதமரிடம் தெளிவாகத் தெரி வித்ததாக Forbes குறிப்பிட் டுள்ளது.

இலங்கை தற்போது 58.3 பில்லியன் டொலர் கடனைக் கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் மொத்த வருமானத்தின் 95.4 சதவீத வருமானம் கடனை மீளச் செலுத்துவதற்காக வழங் கப்படுகிறது.



| | | |
|---|---|---|
| வழிமூலம் | – | The news |
| ஆங்கிலத்தில் | – | Farrukh Saleem |
| மொழியாக்கம் | – | நித்தியபாரதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# முடிவில் ஒரு துவக்கம்

(தொடர்ச்சி)

மெதுவாக புன்னகையை உதிர்த்த சிவபிரகாசம்,

"சும்மா ... காத்து வாங்க..."

தெரியும் சார்... எப்பவும் வழக்கமா வர்றதுதானே...?, சார்... கொஞ்சம் சீக்கிரம் கெளம்பிட்ட நல்லா இருக்கும்..." என்று சொல்லி லேசாக நெழிய ஆரம்பித்தனர்.

தன்னுடைய பேர்ஸிலிருந்து இரு நூறுரூபாய்தாள்களை எடுத்து அவர்களிடம் கொடுத்தார் சிவ பிரகாசம்.

தாங்க்ஸ் சேர்... நாங்க இங் நா இருப்போம் சேர்... ஏதா துன்ன... கொரல் கொடுங்க சேர்...." என்று சொல்லிவிட்டு, சற்று தள்ளியிருந்த பெஞ்சில் படுத்திருந்த் ஒருவனை லத்தியால் அடித்து விரட்டினார்கள். அந்த பெஞ்சை அவருக்காக ஒதுக்கி கொடுத்திருப்பதாக நினைப்பு அவர்களுக்கு, சிவபிரகாசம் அதனைப்பார்த்து மெல்லிய புன்னகை பூத்தார்.

என்ன பிரகாசம் இப்ப புரியுதா...? என்றார் இராமசாமி. என்னான்னு...?

இல்ல.. ஒரு காலத்துல படுக்க எடமில்லா... நீயும் இந்த பெஞ்சுல படுத்திருக்கும்போது... எத்தன தடவ பொலிஸ்காரன் கிட்ட அடி வாங்கிருப்ப...

இப்ப அதே பொலிஸ்காரங்க ஒனக்கு எவ்வளவு மரியாத தர்றானுங்க..."

எல்லாம் பணம்தான்டா..."

ம்ம்... அதுதான் சொல்லவந்தேன்... நீ பணம்னு சொல்ற... நா சுழற்சின்னு சொல்றேன்... புரியல...

டேய்... பிரகாசம்... இதே பெஞ்சுல படுத்ததால... அடிவாங்கின ஒனக்கு... அதே பெஞ்சை ரிசர்வேஷன் பண்ணித் தர்றானுங்க... ஒன்ன அடிச்ச அதே பொலிஸ் காரனுங்க...

இதத்தான் பணம்னு சொல்றேன்.. நா அத சொல்லல... மொத மொதல்ல தற்கொல செஞ்சுக்க இங்க நீ வந்தப்போ... இவ்வளவு பெரிய ஆளா வருவேன்னு... அன்னக்கி நெனச்சு பாத்திருப்பியா..."

சத்தியமா நெனைக்கல... அன்னக்கி நீ நெனச்ச மாதிரி உன் வாழ்க்க முடிஞ்சிருந்தா...?

பதில்பேசமுடியாமல் மௌனமாக கடலையே வெறித்துப் பார்க்க ஆரம்பித்தார் சிவபிரகாசம்.

இந்த மனுஷ வாழ்க்கையே எதிர்பாராதது. ஆனாலும்... நாமதான்... எதிர்பார்புள்ள வாழ்க்கையா மாத்திக்கணும்... தற்கொல செஞ்சுக்குவது ஒலகத்திலேயே மிக கேவலமான விசயம்டா... வீடுவாசல் சோத்துக்கே வழியில்லாம பிளட்பாரதில்ல வாழ்றான்களே... பாத்துருக்கலே... அவுங்க யாராச்சும் தற்கொல செஞ்சுட்டதா கேள்வி பட்டிருக்கியா....? பெறப்பு எப்படி ஒனக்கு தெரியாம நடந்ததோ... அதுபோல இறப்பும் நடக்கணும்... அதுதான் நியதி... ஒவ்வொரு தொவக்கத்துக்கும் முடிவும்... முடிவுக்கு பின் தொவக்கமும் இருக்கும்... இதுதான் சுழற்சி... இதுதான் ஒவ்வொருத்தரின் வாழ்க்கையிலும் நடக்கக் கூடியது..." என்றார் இராமசாமி.

அப்டின்னா சுழற்சி வாழ்க்கையில் இறப்புக்கு பின்னாடி....?

தாகூரின் பொன்மொழி ஒன்னு சொல்றேன்... 'இறப்பை கண்டு ஏன் பயப்படுகிறீர்கள் ?... நீ பிறக்கும் முன்னே உனக்காக உனது தாயின் உதிரத்திலிருந்து பாலைச் சுரக்கச் செய்தவன் இறைவன்.... நீ இறந்த பின்பும் உனக்காக வேறு உலகத்தையே படைத்து வைத்திருப்பான்....' ,



அதல இறப்பு வரும்வரை காத்திரு... ஒவ்வொரு செயலின் முடிவுக்கு பின்னாலையும் நல்ல தொவக்கம் இருக்கும்..."

இராமசாமி சொல்வதை கேட்ட சிவபிரகாசம் மிகவும் தெளிவடைந்தது போல் காணப்பட்டார்.

ரொம்ப தாங்க்ஸ்டா இராமசாமி... உண்மதான் எத்தனயோ முடிவு எனக்கு நல்ல தொவக்கத்த தந்திருக்கு... இப்ப நா வாழ ஆசப்படறேன்... தற்கொல நெனப்புக்கு இப்பவே முடிவு கட்டிட்டேன்...." என்று சொல்லிவிட்டு கொஞ்சம் நேரம் மௌனமாகவே கடலைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

ஏ.சி. அறையில் மெத்தையில் படுத்திருக்கும்போது வராத தூக்கம், இப்பொழுது அவரை தழுவ ஆரம்பித்தது. மெதுவாக கண்களை மூடித்தூங்க ஆரம்பித்தார். அந்த ரோட்டோர பெஞ்சில் சென்னையில் சிவபிரகாசமாக பெயர் மாற்றிக்கொண்ட இராமசாமி.

சற்றுநேரத்தில் அவருடைய செல்பேசி சிணுங்க ஆரம்பித்தது. ஆனால் அவருக்குத்தான் கேட்கப் போவதில்லை. அவருக்கு ஒருநல்ல துவக்கத்தை அவருடைய முடிவேற்படுத்தி கொடுத்திருக்கும். (முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1099

Search for people, places and things Nagendram Home

### குகதர்சன்


டாக்டர் : காலையிலே என்னமா சாப்ட?
பெண் : பர்க்கர் பீசா சான்ட்வெஜ் சாப்பிட்டேன்...



டாக்டர் : இங்க பாருமா இது வாட்சாப்போ பேஸ்புக்கோ இல்லே ஹாஸ்ப்பிட்டல் உண்மையே சொல்லு...!
பெண் : பழைய சோறும் கருவாட்டு குழம்பும் சார்..

### விஜயகாந்தன்

உனது ரகசியங்களை அறிந்தவன் தான் பிரச்சனைகள் என்ற ஒன்று வரும்பொழுது உனது முதல் எதிரியாக மாறுகிறான்.



### ரஜிகன்

பாகுபலி என்ன பெரிய பாகுபலி...




இவங்க கால் தூசிக்கு சமமாகுமா.....

### குணசீலன்



ஜாதி பார்த்து பேசுறவங்க கூட பழககூடாது பழகியவர்களிடம் ஜாதி பார்க்க கூடாது சரியா

- ஆயிரத்தில் ஒருவள்

### செந்தூரன்

வெள்ளையும் சொள்ளையுமா ஊர ஏமாத்துற அரசியல்வாதிகளை மதிக்கும் இந்த சமூகம்தான்



நம்ம வயிற்று பசியை தீர்க்கும் அழுக்கு ஆடை மனிதர்களை மதிப்பதில்லை

### ஐங்கரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கர்ப்பிணித் தாய்மார்கள் போசாக்குத் தொடர்பில் தெரிந்திருக்க வேண்டியவை

கர்ப்பவதியின் கருப்பையில் உள்ள சிசு தனது தேவைகளுக்கு தாயிடமுள்ள சத்துக்களிலேயே முற்றாகத் தங்கியுள்ளது. இதற்கு மாற்று வழியேதுமில்லை. ஆகவே சகல கர்ப்பவதிகளும் கர்ப்ப காலத்தில் (பாலூட்டும் காலத்திலும்) வழமையான தங்களது உணவிலும் விட மேலதிக அளவில் தரமான சத்துக்கள் அனைத்தையும் போதியளவிலும் சமவிகித அளவிலும் உள்ளெடுக்க வேண்டும்.

அப்படி உள்ளெடுக்காத போது தாயினதும் கருவிலுள்ள குழந்தையினதும் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குழந்தை பிறந்த பின்னர் பெரியவனாகியும் தொடரும்.

கீழே சில முக்கியமான சத்துக்கள் மற்றும் நுண்போசணைகள் பற்றிய முக்கியமான தகவல்கள் தரப்படுகின்றன.



### இரும்புச்சத்து (Iron)

உடலில் சகல பகுதிகளிலும் நடைபெறும் சக்திச் செயற்பாடுகளுக்கு வளியிலுள்ள ஒட்சிசன் அந்தந்தப் பகுதிகளுக்குக் கிடைப்பது மிக அவசியமானதாகும். சுவாசப்பைக்கு வெளியிலிருந்து உட்சுவாசம் மூலம் வரும் ஒட்சிசன் உடலின் சகல பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்கு இரத்தத்தில் உள்ள குருதிச் செங்கலங்களிலுள்ள (Red blood cells RBC) ஈமோக்குளோபின் (Haemoglobin) என்ற புரதப்பதார்த்தம் அவசியமானதாகும்.

ஈமோக்குளோபினின் முக்கிய செயற்பாட்டுக்கான கூறாக இரும்பு உள்ளது. ஈமோக்குளோபினை உற்பத்தி செய்ய மிக அவசியமான போசணைக் கூறாக இரும்புச் சத்தைக் குறிப்பிடலாம்.

தேவையான அளவு இரும்புச்சத்து கிடைக்குமாயின் குருதியில் போதியளவு செங்கலங்களும் அவற்றில் போதிய அளவு ஈமோக்குளோபினும் இருக்கும். உடலின் சகல பகுதிகளுக்கும் ஒட்சிசனைக் கொண்டு செல்லும் பணி ஒழுங்காக நடைபெறும் போது அதன் மூலம் உடலின் சகல தேவைகளுக்குமான சக்தி உற்பத்தி தடையின்றி போதியளவு நிகழும். இதனால் உடலில் சக்தி தேவைப்படும் சகல செயற்பாடுகளும் சரியான முறையில் நடக்க முடியும்.

உடலில் இரும்புச்சத்தின் அளவு குறைந்தால் இரத்தத்தில் ஈமோகுளோபினின் அளவு குறையும். இதையே குருதிச் சோகை (Anaemia) எனச் சொல்கின்றோம். குருதிச் சோகையுள்ளவருக்கு உடலின் பகுதிகளுக்கு போதியளவு ஒட்சிசன் எடுத்துச் செல்லப்படுவதில் தடைகள் ஏற்படும்.

குருதிச்சோகை இரும்புச் சத்துக் குறைபாட்டாலேயே பெரும்பாலும் ஏற்படுகிறது. சிலவேளைகளில் போலிக்கமில குறைபாடு விற்றமின் பீ 12 (vitamin b12) குறைபாடு, நாட்பட்ட அல்லது அதிக குருதியிழப்பு, பரம்பரைக் குறைபாடுகள் மற்றும் சில அரிதான நோய் நிலைகள் போன்றவற்றாலும் குருதிச்சோகை ஏற்படலாம்.

**குருதிச் சோகையால்,**

- இலகுவில் களைப்படைதல் அல்லது பலவீனமாக உணர்தல்.
- சிறிய வேலைக்கே அதிக மூச்சு வாங்குதல்.
- தலைச் சுற்று, தலையிடி.
- உடல் வெளிறல்.
- நெஞ்சு நோ.
- இலகுவாக அடிக்கடி நோய்த்தொற்றுக்கள் ஏற்படுதல்.
- சோம்பல் தன்மை.
- நெஞ்சப்படபடப்பு (குருதிச் சோகை கடுமையானால் இதயச் செயலிழப்புக் கூட ஏற்படலாம்.)
- அவதானம் மற்றும் ஞாபக சக்தி போன்றவற்றில் குறைபாடு.

ஆகியன ஏற்படலாம்.

கர்ப்பவதிகளுக்கு குருதிச்சோகை ஏற்படும் போது மேலேயுள்ளவற்றுக்கு மேலதிகமாக,

- குறைமாதப் பிரசவம்.
- பிரசவத்தின் போதான குருதிப் பெருக்கு.
- பிரசவத்துக்குப் பின்னான மன அழுத்தம்.
- குழந்தைக்கும் குருதிச் சோகை.
- குழந்தைக்கு விருத்திக் குறைபாடுகள்.

போன்றன ஏற்படலாம் மேலும் கர்ப்பத்தில் இருந்த போது தாய்க்கு குருதிச் சோகை இருந்த பிள்ளைகளுள் பலர் பின்னர் ஆயுள் முழுவதும் கல்வியில் பின் தங்கியிருப்பது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.


குறிப்பாக இப் பிள்ளைகள் கணித ஆற்றலில் குறைபாடுடையவர்களாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

### இரும்புச் சத்துக் குறைபாடு ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

- அன்றாடம் நாம் உண்ணும் உணவில் இருந்து போதியளவு இரும்புச் சத்து இல்லாமை.
- இரும்புச்சத்துள்ள உணவுகளை உட்கொண்ட போதிலும்கூட அவற்றில் அடங்கியுள்ள இரும்புச்சத்தானது போதியளவு குடலில் உறிஞ்சிக் கொள்ளப்படாமை.
- இரத்தம் இழக்கப்படுவது காரணமாக.
- பல்வேறு விதமான தொற்று நோய்கள் (கொழுக்கிப்புழுத்தொற்று, மலேரியா போன்றன.)
- சில நாட்பட்ட தொற்றா நோய்கள்.

### நாம் அன்றாடம் உண்ணும் உணவில் இருந்து கிடைக்கும் இரும்புச் சத்தின் அளவை எவ்வாறு அதிகரிக்கலாம்?

- எமது உணவுத் தெரிவின் போது இரும்புச்சத்து அதிகம் அடங்கியுள்ள உணவு வகைகளைத் தெரிவு செய்தல் வேண்டும். (கடும் பச்சை நிறக் கீரை வகைகள், பயறு வகைகள், கருவாடு, இறைச்சி, மீன் போன்றன.)
- எமது குடலினால் இலகுவாக உறிஞ்சப்படக்கூடிய வடிவிலான இரும்புச்சத்து கீம் (Heam) வடிவமாகும். மீன் மற்றும் இறைச்சி வகைகளிலேயே இது உள்ளது.
- தாவர உணவுகளில் உள்ள இரும்புச்சத்தின் அளவு விலங்குணவுகளிலும் விடக் குறைவாகும். இவற்றிலுள்ள இரும்புச்சத்தின் வடிவம் இலகுவில் உறிஞ்சப்படக் கூடியதுமல்ல. அதனால் இவை குடலில் உறிஞ்சப்படும் அளவும் குறைவானதாகும்.
- குடலில் உணவுகளிலுள்ள இரும்புச்சத்து (குறிப்பாக தாவர உணவுகளிலுள்ளது). உறிஞ்சப்படுவதை அதிகரிக்க இரும்புச்சத்துள்ள உணவுடன் அமிலச் சுவையுள்ள உணவுகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக விற்றமின் சீ அதிகமுள்ள சிற்ரஸ் வகைப் பழங்களை (தோடை, எலுமிச்சை) தக்காளியைச் சேர்த்து உண்ணலாம். அல்லது இறைச்சி வகைகளைச் சேர்த்து உண்ணலாம். (இறைச்சி வகைகளும் தாவர உணவிலுள்ள இரும்பு உறிஞ்சப்படுவதை அதிகரிக்கும்.)



- சமைத்து முடிந்து கறிகள் ஆறிய பின்பே தேசிக்காய் புளியைக் கறிக்கு சேர்க்க வேண்டும்.
- இரும்புச் சத்து உறிஞ்சப்படுவதைத் தடுக்கும் உணவுகளான, கல்சியம் நிறைந்த உணவுகள் (பால் மற்றும் பாற்பொருட்கள்). கோப்பி, கோலா போன்ற பானங்கள் போன்றவற்றை இரும்புச் சத்துக்காக உள்ளெடுக்கும் உணவுகளுடன் சேர்த்து உண்பதைத் தவிர்த்தல், அதாவது குறைந்தது ஒரு மணித்தியாலமாவது இடைவெளி விட வேண்டும்.
- அப்பம், தோசை என்பவற்றை எமது உணவிற்காக தயார் செய்யும் போது பின்பற்றப்படும் உணவை புளிக்க வைக்கும் முறையைப் பின்பற்றுதல்.
- கடலை, பயறு போன்ற தானியங்களை 24 மணித்தியாலங்கள் நீரில் ஊற வைத்து முளையரும்பிய பின்னர் சமைத்தல். (உதாரணமாக இன்றைய காலை உணவு பயறாக இருந்தால் நேற்றுக் காலையிலேயே முழுப்பயற்றை நீரினுள் ஊற வைத்தல் வேண்டும். முளைவிட்ட பயறு வகைகளால் கிடைக்கப்பெறும் சத்தின் அளவானது நேரடியாகப் பயறு வகைகளை பாவிப்பதிலும் விட இரட்டிப்பாகும்.)

**எமக்கு ஏன் இரும்புச் சத்து வேண்டும்?**
புத்திக்கூர்மைக்கு,
ஞாபக சக்தியை அதிகரிப்பதற்கு,
நோய் எதிர்ப்புச் சக்திக்கு,
சுறுசுறுப்பான வாழ்க்கைக்கு,

சுகாதார திணைக்களம்
யாழ்ப்பாணம்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org